அறைவு 04 இயம் 09 Sept 26-Oct 02, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS
FOR
FOREIGN
VISA
Contact
0770203201

HELLO MOBILE
WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

அமெரிக்க வரைபில் சர்வதேச விசாரணைக்கான அழுத்தம் குறைந்தது

# சர்வதேச விசாரணைக்காக மில்லியன் கணக்கில் தமிழ் மக்கள் கையெழுத்து



இறுதி வரைபில் சர்வதேச விசாரணைக்கான அழுத்தம் குறைந்துள்ள நிலையில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் சர்வதேச விசாரணையே தேவை என்பதை வலியுறுத்தி தமது கையெழுத்துக்களை இட்டுள்ளனர்.

இக்கையெழுத்து வேட்டையானது உள்நாட்டில் சர்வததேசப் பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழு என்ற தன்னார்வ அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டிருந்த அதே வேளை புலம் பெயர்ந்த 17

ஐந்து மாணவர் படுகொலை

## இராதிகா குமாரசுவாமி மீது கண்டனம்

அரசியலமைப்புச் சபைக்குப் பொது மக்கள் பிரதிநிதிகளாக முன்மொழியப்பட்டு, நியமிக்கப்பட்டவர்கள் மீது கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டுள்ளன.

முக்கியமாகத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி கலாநிதி இராதிகா குமாரசுவாமி, சிங்களவர்களைப் பிரநிதிதித்துவப்படுத்தி கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன, முஸ்லிம்களைப் பிரதிதித்துவப்படுத்தி சனாதிபதி சட்டத்தரணி சிப்லி அஸீஸ் ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரின் மீதும் குற்றங்களை முன்வைத்துள்ள நல்லாட்சிக்கான செயற்பாட்டாளர்கள் ஐந்த மாணவர்கள் படுகொலை தொடர்பாக இராதிகா குமாரசுவாமி மீது குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான மிக முக்கிய ஆவணங்களை வெளியிடாமல் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டே அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. 17



பொதுமக்கள் விவகாரங்களில் இராணுவத்தலையீடுகள் முற்றாக விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என்ற விடயத்தை அடக்கி, ஐக்கிய நாடுகள் சபையில் திருத்தப்பட்ட பிரேரணையை ஐக்கிய அமெரிக்கா முன்வைத்தள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச்சபையானது தனது

## எதிர்க்கட்சியில் தமிழர்களின் வலு வீழ்ந்தது



இலங்கையின் நாடாளுமன்றத்தில் எதிர்கட்சியில் வழுவான நிலையில் இருந்த தமிழர்களின் நிலை சரிந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள் குழு எதிர்க்கட்சியாகச் செயற்பட தயாரான நிலையிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவராக தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றச் சபாநாயகரால் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அவாரது தலைமைத்துவத்தின் கீழ் எதிர்க் கட்சியாகத் 17

## பொதுமக்கள் விவகாரங்களில் இராணுவத் தலையீடு முற்றாக அகற்றப்பட வேண்டும்

### அமெரிக்கப் பிரரணை வலியுறுத்தல்

விசாரணைகளின் முடிவில் ஸ்ரீலங்கா அரசானது யுத்தக் குற்றங்களைப் புரிந்துள்ளமைக்கான உண்மைச் சான்றுகள் இருப்பதாக வெளியிட்டிருந்த விசாரணை அறிக்கைக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவையென்பதை 17




உயர்தரப் பரீட்சையின் பின்
உன்னத ஆங்கில அறிவிற்கு!!

ENGLISH

VEAL BUSINESS COLLEGE

159 A, Sea View Road, Trinco
026 2227622 - 0770203201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# சர்வதேசத்தை எதிர்கொள்ளல்

தமிழர்களின் விடுதலைப் போரானது சர்வதேச மயப்பட்டுப்போனதற்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது பூகோளமயமாதல்.

உலகத்தினை ஒரு கிராமமாக உருவாக்கிவிடும் அபிவிருத்திப் பாங்கே இப் பூகோளமயமாதல் என்ற வார்த்தைக்கான மிக இலகுவான விளக்கமாகக் கொள்ளலாம்.

உலகம் கிராமமாக மாறியதை அடுத்து என்ன நடந்தது? எங்கோவொரு மூலையில் நிகழ்ந்த விடயம் உடனடியாக உலகின் அனைத்துக் கிராமங்களையும் சென்றடைந்தது.

ஆனால் இந்த பூகோளமயமாதல் என்ற விருத்தியைத் தமிழர்களாகிய நாங்கள் எந்தளவிற்கு எமது விடுதலைப் பயணத்திற்கான முக்கிய வழியாகப் பயன்படுத்தியிருக்கின்றோம்?

சர்வதேசத்தை எதிர்கொள்ளல் என்பது வெறுமனே நாடாளுமன்றப் பதவிகளின் பேரில் சர்வதேசத்துடன் பேச்சுவார்த்தைகளை மட்டும் நடத்துவதும் அதனைத் தமது தந்திரோபாயம் என மிகைப்படுத்துவதுடன் மட்டும் சாத்தியமாகி விடுமா?

தமிழர்களின் தீர்வுக்கான மிக முக்கிய இன்றைய காலகட்டத்தில் இந்தக் கேள்வியை நாம் இங்கு கேட்க வருவதன் முக்கிய காரணம் என்னவென்றால் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபையிலுள்ள சில ஆபிரிக்க நாடுகளுக்கு உண்மையில் ஸ்ரீலங்காவில் தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய பிரக்ஞை எதுவுமில்லை என்பதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்ததைத் தொடர்ந்தே இந்தக் கேள்வி இங்கு எழுந்துள்ளது.

ஆக மொத்தத்தில் நாம் சர்வதேசம் எனப் பார்க்கும் சில் ஏகாதிபத்திய வல்லரசுகளைத் தவிர்த்து ஏனையவர்களைச் சர்வதேசம் என நாம் ஏற்றுக்கொள்ளவில்லையா? என்ற சந்தேகம் இங்கு உருவாகியுள்ளது.

மிகச் சிறந்த தொழில்நுட்ப அறிவு தொடர்பாடலுக்குப் பயன்பட்டதைத் தொடர்ந்து உருவாகிய தொழில்நுட்பத் தொடர்பாடற் புரட்சி தமிழ் மக்களின் விடுதலைப் போருக்கு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

அத்துடன் தமிழர்களுக்கான சர்வதெசம் என்பது ஐந்து வல்லரசுகளையும் மேலும் சில ஆதிக்கவாதச் சக்தி கொண்ட நாடுகளுக்குள்ளும் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

இவ்விரு பலவீனங்களுமே இன்று நாம் சந்திக்கும் "சர்வதேசத்தை எதிர்கொள்வதில் பின்னடைவு" என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவினால் மனித உரிமைச் சபையில் முன்மொழியப்படவுள்ள இறுதித் தீர்மானத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் சக்தி எஞ்சிய நாற்பத்தியாறு நாடுகளுக்கும் உள்ளன. ஆனால் நாமோ அமெரிக்காவின் முன்மொழிவில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என அமெரிக்காவிடமும் சில அமெரிக்க ஆதரவுச் சக்திகளிடமும் மட்டுமே விண்ணப்பங்களை செய்யும் மனநிலையைக் கொண்டிருக்கின்றோம்.

ஐக்கியநாடுகள் மனித உரிமைச் சபையில் உறுப்புரிமை எவ்வாறு உலகப் பிரதேசங்களிடையே பகிரப்பட்டுள்ளன என்பதை எடுத்தாராய்ந்தால் அமெரிக்க மற்றும் நேச நாடுகளின் பலம் பற்றி நாம் தெரிந்துகொள்ளலாம்.

ஆபிரிக்க நாடுகள் மற்றும் ஆசிய பசுபிக் நாடுகள் மறையே பதின் மூன்று அங்கத்துவங்களின் படி மொத்தம் இருபத்தியாறு இடங்களை நிரப்ப லத்தீன் அமெரிக்க கரீபிய நாடுகள் எட்டு இடங்கள், மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஏழு இடங்கள் இறுதியாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆறு இடங்கள் என மனித உரிமைச்சபை நிரப்பப்பட்டுள்ளது.

ஆக மொத்தம் ஐரோப்பிய நாடுகள் வெறும் பதின்மூன்று ஆசனங்களையே நிரப்பும் இந்தச் சபையில் ஆதிக்கம் செலுத்துவதற்காக நாம் எந்தளவு ஐரோப்பிய, இலத்தீன் அமெரிக்க மற்றும் ஆசிய பசுபிக் நாடுகளிடம் நாம் எமது பிரச்சனைகளைக் கொண்டு சென்றிருக்கின்றோம்.

சர்வதேசத்தை எதிர்கொள்ளல் என்ற பதத்தின் புதிய பரிமாணத்தை ஸ்ரீலங்கரிற்குக் கற்றுக்கொடுத்தவர் கொல்லப்பட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தான். அவரது நடவடிக்கைகள் வெறுமனே வல்லாதிக்க சக்திகளின் கரங்களுக்கு உட்பட்டிராமல் அக்கரங்களுக்கு அப்பால் விரிந்து கிடக்கும் உலக நாடுகளின் மீதும் திரும்பியிருந்தது.

சர்வதேசத்தை எதிர்கொள்ளத் தெவையான தொழில்நுட்பத் தொடர்பாடல் அறிவும் ஆற்றலும் போதுமான அளவு தமிழர்களிடம் இருக்கின்றது. ஆனால் அவர்கள் அதனை பயன்படுத்தும் நுட்பத்தை ஒன்றிணைக்கத் தவறியிருக்கின்றனர் அல்லது அவ்வாறு ஒன்றிணைக்கப்படுவதில் இருந்து தடுக்கப் பட்டிருக்கின்றனர்.

இன்றைய நிலையில் நாம் சர்வதேசத்தை எதிர்கொள்ளலில் சறுக்கல்களைச் சந்திப்பது ஏன் என்று புரிகின்றதா? உரியவர்கள் புரிந்துகொள்வார்களா?

## பெண்கள் வலையமைப்பு அமைதி ஆர்ப்பாட்டம்

நிக்கி...

வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டுக் பெண் குழந்தை கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை மாவட்டப் பெண்கள் வலையமைப்பு எதிர்ப்பு நடவடிக்கையொன்றை முன்னெடுத்திருந்தது.

கிழக்கு மாகாண ஆளுனர் செயலகத்திற்கு முன்பாகக் கடந்த 23ம் திகதி முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையின் போது மனுவொன்று கையளிக்கப்பட்டது.



ஆளுனரின் சார்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் அம்மனுவைப் பெற்றுக்கொண்டார்.

பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு காலம் தாமதிக்காது விரைவாக விசாரித்து குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டணையை வழங்கும் வகையில் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.

அதிகரித்துவரும் இவ்வாறான பாலியல் வன்கொடுமைகள் தொடர்பாக விசேட தேசிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுவதுடன், அதன் அடிப்படையில் உரிய தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் போன்ற கோரிக்கைகள் இம் மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



## சிறுவர் போசாக்கு பிஸ்கோத்துக்கள் ரோட்டறி கழகம் வினியோகம்

ஐந்து வயதுக்கு குறைந்த போசாக்கு குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு போசாக்கு பிஸ்கோத்துக்கள் வழங்கும் ரோட்டறி கழகத்தின் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பத்தை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பதினெட்டுப் பின்தங்கிய கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முன்னூறு குழந்தைகளுக்கு போசாக்கு பிஸ்கோத்துக்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் தொடக்க வைபவம் கடந்த திங்கட்கிழமை (21) 12.00 மணிக்கு ஈச்சிலம்பத்தை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது. ஈச்சிலம்பத்தை சுகதார வைத்திய அதிகாரி வைத்தியர் கலபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ரோட்டறி கழகத்தின் சார்பில் அதன் திருகோணமலைத் தலைவர் கிறஸ்டி ஐபோ, திட்ட ஒருங்கிணைப்பாளர் இராஜாராம் மோகன், வைத்தியர் குணாளன் ஆகியோர் கலந்து சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்.



## இளையோர் பயிற்சிப் பட்டறை

அச்சுதன்...

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் 24.09.2015ம் திகதி திருகோணமலை தபால் நிலைய வீதியில் அமைந்துள்ள குளக்கோட்டன் ஒன்று கூடல் மண்டபத்தில் இளைஞர் குழுக்களுக்கான முழுநாள் பயிற்சி பட்டறை ஒன்று இடம் பெற்றது.

இப் பயிற்சிப்பட்டறையில் இளைஞர்கள் தமது கிராமங்களில் சமூகப் பணியினை மேற் கொள்வதற்கு வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் மற்றும் குழுவாக செயற்படுவதனால் எவ்வாறான நன்மைகளை இளைஞர் குழுக்கள் அடைய முடியும் போன்ற விடயங்கள் இப் பயிற்சியின் மூலம் வழங்கபட்டது.

இப்பயிற்சிப்படறைக்கு திருகோணமலை மூதூர் குச்சவெளி போன்ற பகுதிகளில் இருந்து இளைஞர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## கணித அறிவுப் போட்டியில் கிழக்கு சாதனை

கதிரவன்...

இலங்கை தேசிய மட்ட கணித அறிவுப் போட்டியில் கனிட்ட பிரிவிலும், சிரேட்ட பிரிவிலும் கிழக்கு மாகாணக் குழுவினர் தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டுள்ளனர்.

கனிட்ட பிரிவில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். ஹர்சிகன், ஜி.அபித், பி.ராகுல், புனித சூசையப்பர் கல்லூரியைச் சேர்ந்த ஜரி.ஜொசியா ஸ்ரீசண்முக இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த யூட் தேகா, ரி.அஸ்வினி, வி.காவியா, மட்டக்களப்பு புனித மைகக்கல் கல்லூரியைச் சேர்ந்த தி.இமயவன் கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரியைச் சேர்ந்த [illegible] ஷொரன் ஆகியோர் தங்கப்பதக்கங்களை வென்றனர்.

அதேவேளை சிரேட்ட பிரிவில் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சு.தேசிகன், கே.மிதுசன், வி.அனார்திரியன், கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரியைச் சேர்ந்த ஏ.எஸ்.சிமர், திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.செந்தூரனி, திருகோணமலை புனித மரியாள் கல்லூரியைச் சேர்ந்த பி.லோசனா, ஜே.தம்மிகா, சம்மாந்துறை ம.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜே.ஆசாத் அகமட் ஆகியோர் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளனர்.

கிழக்கு மாகாணம், தேசிய மட்டத்தில் கணித வினாவிடைப் போட்டியில் இம்முறை முன்னரை விடச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்பு செய்திகள்

## குவைட் தூதுவரானார்

### மட்டக்களப்பைச் சேர்ந்தவர்

மட்டக்களப்பைச் சேர்ந்த காண்டீபன் பாலசுப்ரமணியம் அவர்கள் ஜனாதிபதியால் குவைத் நாட்டிற்கான இலங்கைத் தூதுவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட அறிமுகச் சாசனப் பத்திரத்தை குவைத் நாட்டின் எமிர் (மன்னன்) மேன்மை தங்கிய சபா அல் அஹமட் அல் ஜபார் அல் சபா அவர்களிடம் கடந்தவாரம் கையளித்தார். கோலாகல பவனியாக அழைத்துச் செல்லப்பட்ட தூதுவருக்கு மன்னரது மாளிகையில் இலங்கை தேசியகீதம் முழங்க இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உரையாற்றிய அவர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மென்மேலும் பலப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து தனது கருத்துக்களை தெரிவித்தார்.




## நீதி கோரி ஆர்ப்பாட்டப் பேரணி

பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு நீதி வேண்டு-மெனக் கோரி ஆர்ப்பாட்டப் பேரணி வவுணதீவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அண்மையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சேயா மற்றும் வித்தியாவின் சூத்திரதாரிகளுக்கு மரண தண்டனை வழங்க வேண்டுமெனவும் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கோரிக்கை விடுக்கப்பட்டது. "சட்டத்தரணிகளே மனிதம் மௌனித்து விட்டதா", "நேற்று வித்தியா இன்று சேயா நாளை யார்", "அதிகரித்து-வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கண்டிக்கின்றோம்", "வித்தியா, சேயாவுக்கு நீதி வேண்டும்" என எழுதப்பட்ட வாசக அட்டைகளையும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.

## புகையிரத சேவை கணனி மயம்

### முன்கூட்டிய பதிவுகளை மேற்கொள்ளலாம்



கொழும்பு – மட்டக்களப்பு புகையிரத சேவையின் இருவழிப் பாதைக்கான முதலாம் வகுப்பு படுக்கை அறைக்கான முற்பதிவு, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதியிலிருந்து கணினி மயப்படுத்தப்படவுள்ளதாக மட்டக்களப்பு புகையிரத நிலைய பிரதம அதிபர் தெரிவித்தார். கணினி மயப்படுத்தப்பட்ட புகையிரத நிலையங்களில் பிரயாணத் திகதியிலிருந்து 45 நாட்கள் முற்கூட்டி பிரயாணப் பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனவும் அவர் கூறினார். இவ்வாறிருக்க, தினந்தோறும் அதிகாலை 5.10 மணிக்கு கல்லோயா சந்திக்கு சென்று திரும்பிவரும் புகையிரத சேவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## ஹஜ்ஜுப் பெருநாள் ஒன்றுகூடல்

KATTANKUDY MEDIA FORUM
KMF

புனித ஹஜ்ஜுப் பெருநாளையொட்டி முழுநிலவில் காத்தான்குடி மீடியா போரத்தின் அங்கத்தவர் ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை காத்தான்குடியில் இடம்பெறவுள்ளதாக போரத்தின் தலைவர் ஏ.எல்.டீன் பைறூஸ் தெரிவித்தார் காத்தான்குடி மீடியா போரத்திலுள்ள அங்கத்தவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அத்துடன், போரத்தின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் நினைவுச்சின்னங்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார் பிரச்சினைகளையும் தேவைகளையும் முன்கொண்டு செல்லும் ஊடக உறவுகளை புரிந்துணர்வுடன் கட்டியெழுப்பி சிறந்ததொரு ஆளுமையுள்ள ஊடகவியலாளராக மாற்றுவதே இந்த ஒன்றுகூடலின் நோக்கமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யானை தாக்கி ஒருவர் மரணம்

வெல்லாவெளி பிரிவுக்குட்பட்ட மண்டூர், நெல்லுச்சேனை பகுதியில் யானை தாக்கியதன் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த புதன்கிழமை மாலை நெல்லுச்சேனை பகுதியில் உள்ள குளம் ஒன்றில் மீன்பிடித்துக்கொண்டிருந்தவரே இவ்வாறு யானை தாக்குதலுக்குள்ளானதாக வெல்லாவெளி காவல்-துறையினர் தெரிவித்தனர்.

யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தவர் மண்டூர், 14ம் கொலனியை சேர்ந்த சோமசுந்தரம் தர்மரட்னம் (65வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் வெல்லாவெளி மேலும் தெரிய-வருகின்றது. சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

## சிறிலங்கா அரசு உள்நாட்டில் ஒன்றும் சர்வதேசத்தில் ஒன்றும் கூறுகிறது

**கி.மா.உ கோவிந்தன் கருணாகரன்**

"இலங்கையில் நீதியான விசாரணை உள்ளக பொறிமுறையின் கீழ் நடக்குமென்று எமது மக்களோ, நாமோ நம்பவில்லை. நம்பத் தயாருமில்லை என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மேலும் ஐ.நா. மனித உரிமைப் பேரவை தனது அறிக்கை மூலம் ஸ்ரீலங்காவில் நடைபெற்ற சம்பவங்களை போர்க்குற்றங்களாகவும் மனிதாபிமானத்திற்கும் சர்வதேச மனித உரிமைகளுக்கும் எதிரான குற்றங்களாக இனங்கண்டு இதனோடு தொடர்புடையவர்களை இச்செயல்களுக்காக பொறுப்புக்கூற வைப்பதுடன், உரிய தண்டனை வழங்க வேண்டும் என்ற வகையில் இலங்கையின் உள்ளக விசாரணையில் நம்பிக்கை வைக்காது கலப்பு விசாரணை நீதிமன்றம் ஒன்றை சிபாரிசு செய்துள்ளது. ஆனால் இலங்கை அரசோ இது தொடர்பாக சர்வதேசத்திற்கு ஒரு கதையும் உள்நாட்டுக்கு ஒரு கதையும் கூறுகின்றது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு இறுதிக்கட்ட யுத்தத்தில் குற்றம் இழைத்ததற்கு ஆதாரபூர்வமான சாட்சிகள் உண்டு. இறுதிக்கட்ட யுத்தத்தில் கட்டளையிட்டவர்கள் தொடக்கம் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் ஏன் யுத்தத்தின் பின்னரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கூட குற்றவாளிகள் என நிருபிக்கக்கூடிய நிலையே இன்றுள்ளது.

இதனால்தான் சர்வதேச விசாரணையோ, கலப்பு விசாரணையோ இடம்பெற இடமளிக்க முடியாது எனவும் எமது நாட்டின் நீதிப்பொறிமுறை தற்போது சுயாதீனத்துவம் பெற்றுள்ளது. எனவே நாமே உள்ளக விசாரணை மூலம் விசாரணை செய்கிறோமென புலம்புகிறது" என்றார்.



## நல்லாட்சியிலும் சிங்கள மொழியில் தேசியகீதம்



தேசிய கடற்கரை சுத்திகரிப்பு தினத்தினை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் நடைபெற்ற பிரதான நிகழ்வின்போது சிங்கள மொழியில் தேசிய கீதம் ஒளிபரப்பப்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் அரச மொழியாக தமிழ் மொழி அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் பேசும் மக்கள் பகுதி வாழும் பகுதியில் சிங்கள மொழியில் தேசிய கீதம் ஒளிபரப்பப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் தமிழ் பகுதிகளில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும் என்ற பணிப்புகள் வழங்கப்பட்டிருந்த நிலையிலும் தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் தமிழ் மொழியிலும் இசைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

நல்லாட்சி நிலவும் இந்தக்காலப்பகுதியிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது தொடர்பில் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் தமிழில் தேசிய கீதங்களை அரச நிகழ்வுகளில் ஒளிபரப்ப தேவையான நடவடிக்கையினை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தீர்மானத்தை வரவேற்றது த.தே.கூ

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் கூட்டு அனுசரணையாளர்கள் முன்வைத்துள்ள ஸ்ரீலங்கா தொடர்பான தீர்மான வரைவை வரவேற்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஸ்ரீலங்காவின் நீதிப் பொறிமுறையில் விசேட பொதுநலவாய சட்டத்தரணிகள் அலுவலகம் மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிபதிகள், பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகள், அங்கீகரிக்கப்பட்ட வழக்கு தொடுநர்கள், மற்றும் விசாரணையாளர்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதை வரவேற்பதாக கூட்டமைப்பின் ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த தீர்மான வரைவு சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஸ்ரீலங்காவின் நீதிக்கு கிடைத்த மகத்தான வெற்றியாகும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது




மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

## இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படும்

### மங்கள சமரவீர

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையின் பரிந்துரைகளை அர்ப்பணிப்புடன் நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இதனை நேற்று தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையானது, இலங்கையை பொறுத்தவரை வெற்றியானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை பல வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தனிமைப்பட்டிருந்தது.

# திருத்தப்பட்ட அமெரிக்க பிரேரணை

கடும் வாதப் பிரதவாதங்களுக்கு பின்னர் 'இலங்கையில் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் அமெரிக்காவினால் கடந்த வியாழக்கிழமை இலங்கை குறித்தான திருத்தப்பட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா சமர்ப்பித்திருந்த பிரேரணையின் நகல் வரைபைவிட புதிய திருத்தப்பட்ட பிரேரணையில் பல விடயங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

முன்னைய வரைபில் காணப்பட்ட சில பந்திகள் சுருக்கப்பட்டுள்ளதுடன், 26 பந்திகள் 20 பந்திகளாக குறைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ள 20 விடயங்களும் வருமாறு :-

1. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 27ஆம் அமர்வுகளில் இலங்கையில் நல்லிணக்கத்தையும் குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதல்களையும் ஏற்படுத்த வேண்டுமெனக் கோரி, மனித உரிமைப் பேரவை ஆணையாளர் ஆற்றிய உரை மற்றும் இலங்கை குறித்த விசாரணை அறிக்கை என்பனவற்றை கவனம் கொள்கின்றோம்.

அந்தவகையில் நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 25-1 தீர்மானத்துக்கு அமைய முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு அரசாங்கத்தை கோருகின்றோம்.

2. உண்மையை கண்டறியும் விடயத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்துக்கும் இடையிலான ஈடுபாடு வரவேற்கப்படவேண்டியது.

3. நீதியை அமுல்படுத்துவதில் நம்பகத்தன்மையை உறுதி செய்ய இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கப்படும். பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூகம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் விரிவான தேசிய கலந்துரையாடல்களின் ஊடாக இதனைச் செய்ய முடியும். சர்வதேச நிபுணர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் வலுவான ஓர் பாதுகாப்புப் பொறிமுறைமை அவசியமானது.

4. நல்லிணக்கம் கடந்தகால பிரச்சினைகள் மீள் இடம்பெறாமல் இருத்தல் காணாமல் போனோர் குறித்த அலுவலகம் உள்ளிட்ட விடயங்கள் வரவேற்கப்பட-வேண்டியவை.

பக்கச்சார்பற்ற நேர்மையான விசாரணைப் பொறிமுறைமை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பின் மூலம் விசாரணைகள் நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். இதற்கு சர்வதேச உதவிகளையும் ஐ.நா. மனித உரிமை அலுவலகத்தின் தொழில்நுட்ப உதவிகளையும் பெறலாம்.

5. ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புலிகள் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் குறித்தும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

6. பொதுநலவாய மற்றும் சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள் சட்டத்தரணிகளுடன், உள்நாட்டு நீதித்துறை கட்டமைப்புடன் கூடிய விசாரணை பொறிமுறையை முன்னெடுக்கவேண்டும்.

7. சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக தண்டனை விதிக்க உள்நாட்டு சட்டங்களை திருத்தி அமைக்க வேண்டும். குறிப்பாக உள்நாட்டு சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் குற்றவாளிகளை தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

8. பாதுகாப்புத் துறைசார் விவகாரங்களில் காத்திரமான மாற்றங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும். பாரிய மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களாக அடையாளப்-படுத்தப்படும் பாதுகாப்பு அதிகாரிகள் உயர் பதவிகளில் அமர்த்தப்படக்கூடாது.

குறிப்பாக தற்காலிக நீதிப் பொறிமுறைமையில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறிய படையதிகாரிகள் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் உள்ளடக்கப்படக்கூடாது.

9. சாட்சியாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் அரசாங்கத்தின் புதிய சட்டத் திருத்தம் வரவேற்கப்பட வேண்டியது. இந்தச் சட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டியது அவசியமானது. பாதுகாப்பு தரப்பினர் அரச அதிகாரிகளுக்கு எதிராக சாட்சியமளிப்பவர்கள் பாதுகாக்கப்படக்கூடிய வகையில் சட்டங்கள் பலப்படுத்தப்பட வேண்டும்.

10. அரசாங்கப்படையினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கன. குறிப்பாக சிவிலியன் விவகாரங்களில் இராணுவத்தின் தலையீடு முழுமையாக அகற்றிக்கொள்ளப்பட வேண்டும். சிவிலியன்களின் இயல்பு வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும்.

12. ஊடகவயிலாளர்கள், ஊடக நிறுவனங்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிறுபான்மை மத, இன சமூகத்தைச் சேர்ந்தவர்கள், பள்ளிவாசல்கள், கோயில்கள், தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி உரிய தண்டனை விதிக்கப்பட வேண்டியதுடன் மீளவும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதனை தடுக்க வேண்டும்.

12. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் ரத்து செய்தல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு வரவேற்கப்பட வேண்டியது. சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட முடியும்.

13. பலவந்த கடத்தல்கள் தொடர்பிலான சர்வதேச பிரகடனத்தில் கைச்சாத்திட அரசாங்கம் காட்டும் முனைப்பு வரவேற்கப்பட வேண்டியது. காணாமல் போனவர்கள் தொடர்பில் உறவினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்

14. கடந்த காலத்தில் விசாரணை நடத்தப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை பகிரங்கப்-படுத்துவதாக இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதி வரவேற்கப்பட வேண்டியது.

15. மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட அனைத்து ஆவணங்கள் அறிக்கைகளையும் பேணிப் பாதுகாக்கும் பொறிமுறைமை ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும். தனியார் அல்லது பொது நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

16. அரசியல் அதிகாரத்தை பகிர்ந்தளிக்கக் கூடிய வகையில் அதிகாரப் பகிர்வு திட்டமொன்றை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும். அவ்வாறு அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பதன் மூலமே நாட்டின் அனைத்து சனத்தொகையினரும் மனித உரிமைகளை அனுபவிக்க முடியும். 13ம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உள்ளிட்ட அனைத்து மாகாண சபைகளுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

17. சர்வதேச மனித உரிமை சட்டம் சர்வதேச மனிதாபிமான சட்டம் என்பவை மீறப்படக்கூடாது என இராணுவப் படையின் அனைத்து பிரிவுகளுக்கும் அறிவுறுத்தப்படவேண்டும்.

அனைத்து வகையிலான பாலியல் வன்கொடுமைகள் மற்றும் பால் நிலைசார் ஒடுக்குமுறைகளை இல்லாதொழிக்க இலங்கையை ஊக்கப்படுத்த வேண்டும். பால் நிலை ஒடுக்குமுறை சித்திரவதைகளில் ஈடுபடுபவர்களை தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

18. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அலுவலகம், இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்ய வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுகின்றதா என்பது மதிப்பீடு செய்யப்பட வேண்டும். குறிப்பாக குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் மனித உரிமை விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 32 ஆவது அமர்வுகளின் போது வாய்மொழி மூல அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும். பரிந்துரைகள் மனித உரிமை நிலைமைகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்ய வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்-படுகின்றதா என்பது மதிப்பீடு செய்யப்பட வேண்டும். பரிந்துரைகள் எவ்வாறு அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து 34 ஆவது அமர்வுகளில் முழு அளவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படும்.

19. இலங்கை அரசாங்கம் விசேட ஆணையாளர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட ஊக்குவிக்கின்றோம். சில பிரதிநிதிகள் நீண்ட காலத்திற்கு முன்னதாக இலங்கைக்கு விஜயம் செய்ய விடுத்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கவேண்டும்.

20. ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் விசேட அறிக்கையாளர்கள் ஆணையாளர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

# சவுதி அரசே பொறுப்புக் கூற வேண்டும்

மக்காவில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 717 பேர் உயிரிழந்ததற்கு சவுதி அரேபிய அரசின் திறமையற்ற ஆட்சி தான் காரணம் என்பதால் உயிரிழப்பிற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என ஈரான் நாடு பகிரங்க குற்றச்சாட்டு தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மக்காவில் சுமார் 2 லட்சம் இஸ்லாமியர்கள் மேற்கொண்ட ஹஜ் புனித பயணத்தின்போது ஏற்பட்ட திடீர் நெரிசலில் சிக்கி 717 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 800க்கும் அதிகமானோர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

லட்சக்கணக்கில் திரண்ட இஸ்லாமியர்கள் சாத்தான் மீது கல் எறியும் நிகழ்விற்காக விதிக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றாததால் இந்த விபத்து ஏற்பட்டதாக சவதி அரேபியா அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆனால், இந்த காரணத்தை நைஜீரியா நாடு ஏற்க மறுத்துள்ள நிலையில், ஈரான் நாடு இவ்வாறானதொரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.



# தொடருந்தைத் தாக்க முற்பட்டோர் கைது

**கனடா**வில் அல் கைய்தா இயக்கத்துடன் இணைந்து நியூயோர்க்கில் இருந்து ரொரண்டோ நோக்கி பயணித்த பயணிகள் ரயிலில் பயங்கரவாத தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட இருவருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இருவரும் பிணையில் வெளியில் செல்ல வேண்டுமாயின் குறைந்தது 10 வருடச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிலுள்ள அல் கைய்தா இயக்கத்திடம் இருந்தே இந்த இருவரும் வழிகாட்டல்களைப் பெற்றுள்ளதாக விசாரணையாளர்கள் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



## சிறையில் இருந்தே அழிக்க திட்டம்

பிரான்ஸ் நாட்டு சிறையில் இருந்தவாறு அந்நாட்டில் மிகப்பெரிய தாக்குதல் சதி திட்டம் தீட்டிய கைதி ஒருவரின் குடியுரிமையை பறித்த அதிகாரிகள் அவரை அதிரடியாக நாட்டை விட்டு வெளியேற்றி-யுள்ளனர்.

மோரோக்கோ நாட்டில் பிறந்து பிரான்ஸ் நாட்டு குடியுரிமை பெற்றுள்ள அந்நபர் தீவிரவாதிகளுடன் தொடர்புடையது கண்டுபிடிக்கப்பட்டு கடந்த 2013ம் ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், சிறையில் அடைக்கப்பட்ட நிலையிலும், அங்குள்ள கைதிகளை மூளை சலவை செய்து தீவிரவாதிகளாக மாற்ற முயற்சி செய்துள்ளான்.

மேலும், கைதிகளின் உதவியுடன் பிரான்ஸ் நாட்டில் மிகப்பெரிய தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டதாக அண்மையில் தெரியவந்ததை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சமாதானத்தை நெருங்கும் கொலம்பியா

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக கொலம்பிய ஜனாதிபதி ஜுவான் மனுவல் சன்டோஸ், கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப் படைகளின் தளபதிகள் கடந்த புதன்கிழமை அறிவித்துள்ளனர். இதன் மூலம் லத்தீன் அமெரிக்க பிராந்தியத்தில், நீண்ட காலமாக நிலவும் ஆயுதப்போராட்டம், எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் முடிவுக்கு வரவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல், மனித உரிமை மீறலில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்குதல் தொடர்பாக, ஒரு கருத்தொற்றுமை ஏற்பட்டதையடுத்து, சமாதான உடன்படிக்கையில் உள்ள இறுதி முக்கியமான தடையை தாண்டி வந்துள்ளதாக கொலம்பிய ஜனாதிபதி சன்டோசும், கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப் படையினரும் வெளியிட்ட இணையறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அடுத்து வரும் ஆறு மாதங்களில் நன்றாக கட்டமைக்கப்பட்ட சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு இணங்கியுள்ளதாக மேலும் தெரியவருகின்றது.



## வன்முறை நிகழ்வுகள் அதிகரிக்கின்றது

**கடந்த** ஆண்டு 30 ஆயிரத்திற்கும் அதிகமான பாடசாலை குற்றங்கள் தொடர்பில் காவல்-துறையினருக்கு தகவல்கள் பதிவாகியுள்ளன.

இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தில் உள்ள பாடசாலையில் நாளொன்றில் 160 குற்றங்கள் பதிவாகி-யுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. திருட்டு மற்றும் வன்முறைக் குற்றங்கள் மிகவும் பொதுவான குற்றங்களாக பதிவாகியுள்ளன. பாலியல் பாலத்கார குற்றங்கள் தொடர்பில் 1502 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பிரித்தானியாவின் சிறுவர் கொடுமைகளை தடுப்பதற்கான தேசிய சங்கம் கூறியுள்ளது.

இந்து பாடசாலைகளில் குற்றங்களுக்கு இடமில்லை எனக் கூறியுள்ள பிரித்தானிய அரசாங்கம், குற்றங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு அதிக அதிகாரங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

# இன்டர்போலால் தேடப்பட்ட கைதி கைது




சுவிசின் டிக்கினோவில் உள்ள சுவிஸ் மற்றும் இத்தாலியின் எல்லையான சியாஸ்சோ பிரொகெடா அருகில் எல்லையோர காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த வேளையில் இத்தாலியில் இருந்து எல்லையை கடக்க முயன்ற காரை மேற்கொண்ட சோதனையின் போது காரில் இருந்தவர் துருக்கியை சேர்ந்தவர் தற்போதும் இத்தாலியில் வசிப்பதும் தெரியவந்தது.

மேலும் அவர் இண்டர்போல் அமைப்பால் தேடப்பட்டுவரும் சர்வதேச கொலை குற்றவாளி என்பதும் தெரியவந்தது.

இதையடுத்து அவர் உடனடியாக கைது செய்யப்பட்டார். அவருக்கு குறைந்தது ஏழரை ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

## நிவாரணக்குழுவை வெளியேறுமாறு உத்தரவு



லுஹான்ஸ்க்கிலுள்ள ஐ.நா முகவர் நிவாரண நிறுவனங்களுக்கு நேற்று வெள்ளிக்கிழமை முதல் அங்கிருந்து புறப்படுமாறு கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளதாக முகவர் நிறுவன அதிகாரி ஸ்டீபன் ஓ பிறயன் தெரிவித்துள்ளார். அங்கு நிவாரண உதவிகளை வழங்கிவரும் மேலும் பல சர்வதேச நிறுவனங்கள் இன்று சனிக்கிழமை அங்கிருந்து புறப்படவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை லுஹான்ஸ்க் மாவட்டத்தில் நிவாரண உதவிகளில் ஈடுபட்டிருந்த 10 சர்வதேச நிறுவனங்களுக்கு கிளர்ச்சியாளர்களால் ஏற்கனவே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு உக்ரைனின் டுனட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய மாவட்டங்களை ரஷ்ய படை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றது. இந்த நிலையில் நிவாரண பணியாளர்கள் அங்கிருந்து விலகினால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும் என்று ஐ.நா நிவாரண உதவி நிறுவன அதிகாரி ஸ்டீபன் ஓ பிறயன் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணையடி நீ எனக்கு...



**- கவிஞர் வி.மைக்கல் கொலின்-**

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடந்த காதல் காவியமானது "வீணையடி நீ எனக்கு" எனும் குறுநாவலாக கடந்த 33 இயங்களாக வெளிவந்தது. இந்நாவல் தொடர்பான தங்கள் விமர்சனங்களை எமக்கு அனுப்பி வைத்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு கிடைக்கப்பெற்ற விமர்சனங்களில் தெரிவு செய்யப்பட்ட இரு கடிதங்கள் உங்களுக்காக......

வீணையடி நீ எனக்கு ஆசிரியருக்கு

வணக்கம்!

பலரின் மனதில் புதைந்து போன காதல் காவியங்களை மீட்டிப் பார்க்க கடந்த ஆறு மாதங்களாக வெளிவந்து கொண்டிருந்த வீணையடி நீ எனக்கு எனும் குறுநாவல் இனிமையான முடிவொன்றை எட்டியுள்ளது. இக்குறுநாவலில் கூறப்பட்ட கதை இயல்பாகவே பலரின் வாழ்விலும் நடை பெற்ற நிகழ்வுகளை மனத்திரையில் இசைத்துக்காட்டுகின்ற வீணையாகவே உள்ளது.

இத் தொடரில் வந்த காதலர்களிற்கு இடையே உண்டான மனக்கசப்பும், பின் அதனால் உண்டாகிய மனஉணர்வுகளும் இயல்பாகவே உள்ளதுடன் இருவரினது சேர்கையும் மனதுக்கு மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

நன்றி.

- நிலாவெளி -

வணக்கம்!

மலைமுரசின் வாசகியாகிய நான் மலைமுரசில் 33 வாரங்களாக தொடர்ந்து வெளிவந்த வீணையடி நீ எனக்கு எனும் குறுநாவலை தொடர்ச்சியாக வாசித்து வந்தேன்.

இந்நாவல் ஓர் காதல் காவியமாக காணப்பட்டது. ஒவ்வொரு வாரமும் ஒரு பொருத்தமான கவிதையுடன் வித்தியாசமான கோணத்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மிக இலகு நடையில் கவிதைகள் காணப்பட்டமையால் அனைவராலும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் தித்திப்பு ஊட்டுவதாகவும் காணப்பட்டது.

எனினும் ஒரு சில இடங்களில் இடப்பட்ட முழுமையான பாடல்களை தவிர்த்து இன்னும் காதலர்களின் தாகத்தை, தேடலை கூட்டியிருக்கலாமோ என எண்ணத் தோன்றியது.

ஆசிரியருக்கு பாராட்டுக்களை தெரிவிப்பதோடு இன்னும் நிறைய படைப்புக்களை உருவாக்குவதற்கு வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

நன்றி

சா.சசிகலா, உவர்மலை, திருகோணமலை

-காதலன் என்கிற உரிமையோடு
காதலியின்
கைபிடிக்கும் போதுதான்
உலக ம் முழுவதும்
உரிமை க்காக
ஏன் உயி ரை யே கொடுக்கிறார்கள்
என்பது புரியும் உங்களுக்கு-

தபூ சங்கர்

# இரசிக்கத் தெரிந்தவர்கள்

**- திருமலை. வீ. என். சந்திரகாந்தி -**

கடந்தவார தொடர்ச்சி .. ..

எதற்கும் ஒருக்கால் மதியம் தூக்கத்தை விட்டு விட்டு எட்டி ஒரு நடை நடந்து அண்ணை வீட்டுக்கு போய் நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேணும்.

நான் போன நேரம் நல்ல சந்தர்ப்பமாய் போய்விட்டது. அண்ணன் மச்சாள் மருமகன் மூவருமே வீட்டில் நின்றார்கள்.

"மாமி வருகின்றா" என்று கூறி முதலில் சங்கர்தான் ஆரவாரம் செய்தான்.

"என்ன மருமகனை அங்காலிப்பக்கம் காணேல்லை?' நான் வினாவவும் சங்கர் சிரித்தபடி தலையை தாழ்த்திக்-கொண்டான். மச்சாள்தான் கதையை தொடர்ந்தாள்.

"தம்பி இறுதியாண்டு பரீட்சை சித்தியெய்தியதோடு அரச திணைக்கள-மொன்றில் அபிவிருத்தி உதவியாளராக வேலையும் கிடைத்திருக்கு. தம்பிக்கு இருபத்தியாறு வயதாகுது. பொறுப்புக்களும் இல்லை அதைப்பற்றிதான் இப்போ கதைத்துக் கொண்டிருந்தனாங்கள்."

மச்சாளை தொடர்ந்து அண்ணை கூறினார். "தங்கச்சி. நீ தனித்து முடிவு எடுக்காதே... மச்சானோடு ஆலோசி. அவரும் விரும்பினால்தான் கலியாணம். பிரச்சனை-களை விலைக்கு வாங்ககூடாது."

மருமகனின் முறை வந்ததும் அவரும் கூறினார். "மாமி வித்யாவிற்கு கம்பஸ் கிடைத்திருப்பதாக கேள்விப்பட்டேன். அவள் கெட்டிக்காரி என்பதால்தான் எனக்கு அவளில் விருப்பம். ஆனால் பெண்கள் "கம்பஸ்" போய் என்ன செய்யப் போகிறார்கள். ஒரு கதைக்கு சொல்லுறன்... வித்யா அல்லாமல் நான் வேறு ஒரு பெண்ணை விவாகம் செய்ய வேண்டி ஏற்பட்டாலும் கம்பஸ் அனுமதி கிடைத்தும் கம்பஸ்"க்கு போகாத திறமையான பெண்ணைத்தான் விவாகம் செய்வேன்".

சங்கர் சொல்லியதிலும் பிழை இல்லை. வித்தியா இன்னமும் நான்கு வருடங்கள் படிப்பை மேற்கொள்ள வேண்டு-மென்றால் சங்கருக்கு முப்பது வயதாகிவிடும். வயது போன நேரத்தில் என்ன கலியாணம். படித்து உத்தியோகம் எடுக்கும் வரைக்கும் பொறுத்திருந்த ஆண்பிள்ளை வித்யா போன்ற அழகும் இளமையும் மிக்க ஒரு பெண்ணை உடனேயே சேர எண்ணுவதில் தப்பு என்ன? நான் பதிலிறுத்தேன்.

"சங்கர் சொல்லிறதும் சரிதான் அண்ணை இந்த விசயத்திலை என்னுடைய அவர் சம்மதித்ததாகவே எடுத்துக் கொள்ளுங்கோ. மற்ற கருமங்களையெல்லாம் நான் பார்த்துக் கொள்கின்றேன்".

மாலையில் இவரும் வித்யாவும் இருந்த போதே விசயத்தை விளக்கினேன். இவர் கூறினார். "கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே தேடிவரும் என்று முன்னோர் கூறிவைத்தது பகிடிக்கா? மங்களமக்காவின் பெடிச்சியை நாலைந்து இடத்தில் கேட்டு வருவதாக கூறினாயே... அதில் பெடிச்சியின் கட்டுப்பாடில்லாத போக்குத்தான் தெரியுது. ஆனால் சொந்த பந்தத்திற்குள்ளேயே ஒரு பெண்ணை எடுத்துவிட வேண்டும் என்று போட்டி போடுவது அவளது அடக்கம் காரணமானது.

வித்யா "தாமரை இலை தண்ணீர்" போன்ற சுபாவம் கொண்டவள். எந்த விசயத்திலும்... எந்த இக்கட்டான நிலைமையிலும் தனது விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டமாட்டாள். "அம்மா... எனக்கு "கிளாஸ்"க்கு" நேரமாகிவிட்டது. நான் போகிறேன். என்று கூறி புறப்பட்டு விட்டாள்.

மாலையில் இருவரும் வெளியே சென்றுவிட்ட பின்னர் பெண்பிள்ளை யொருத்தி சுமாரான உயரம், மா நிறம், எமது வீடு தேடி வந்தாள்.

"நான் "கம்பஸில் "உங்கள் மருமகன் சங்கரோடு கல்வி பயின்றனான். நான் முதலாம் ஆண்டில் இணைந்தபோது அவர் இறுதி வருடத்தில் இருந்தார். அவர் என்னை உயிருக்கு உயிராய் காதலிப்பதாக நம்பி அதிக அளவு இடம் கொடுத்து சுதந்திரத்துடன் பழகினேன். அவர் இறுதியாண்டு பரீட்சை முடித்து பட்டமளிப்பு விழாவையும் முடித்து சென்ற பின்னர்தான் அவரால் பாதிக்கப்பட்ட முன்னைய வருடங்களில் படிக்கும் மாணவிகள் பல உண்மைகளை கூறியதுடன் உங்கள் மகளுக்கும் அவருக்கும் விவாகம் நடக்க இருப்பதையும் தெரிவித்தார்கள்".

காலைமுதல் கரைந்தபடி என்னைச் சுற்றி சுற்றி வந்த அந்த குஞ்சுக் காகம் காலிடுக்கில் ஏதோ ஒரு இரையை வைத்து சுவைத்தபடி தன்னை மறந்த சாவதான நிலையில் மூழ்கியிருந்தது. மருமகன் நன்றாகத்தான் "கம்பஸ்" வாழ்கையை சுவைத்திருக்கிறார். அந்த அனுபவம் தந்த பாடம் காரணமாகவே "கம்பஸ்" அனுமதி பெற்ற எனது மகளை அங்கு செல்லவிடாது அவர் தடுக்கிறார்.


எனது பாசமிகு கணவரும் அன்புமிகு மருமகன் விஜயனும் அழகை இரசிக்க தெரியாதவர்கள் என்று உறுதியாக நம்பியிருந்த நான்.... தூயவளான எனது மகளை துரோகி ஒருவனிடம் மாட்டிவிட இருந்த அவலத்தை எண்ணி ஏக்கமடைந்து சிலையாக நின்றேன்!

முற்றும்.. ..

தொடர்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிமுரசு

## அம்மா!



காலைத் தூக்கி கண்ணில்
ஒற்றிக் கட்டிக் கொஞ்சும்
அம்மா! பாலைக் காய்ச்சி சீனி
போட்டுப் பருகத் தந்த அம்மா!

புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அனைத்துத் தாங்கும் அம்மா!

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா!

பள்ளிக்கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னை தூக்கித்
தோளிற் போடும் அம்மா!

பாப்பா மலர்ப் பாட்டை நானும்
பாடி ஆடம் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா!

**கவிஞர் இ. முருகையன்**

## கலை

வித்தை ஒன்று கண்டு
வெடித்துப் போனேன்
தண்ணீர்த் தாம் பாளத்தில்
நெட்டி மொக்கை இட்ட போது
மலர் விரிந்து

வண்ண எழில் விரிந்து
மனத்தை விழுங்கக் கண்டேன்
மனத்துள்ள சின்னப்பயல்
மெதுவாய் சிரித்தான்
'இதற்கு வேரேது'
மணமேது

காதலியின் அன்புக்கிது
ஓடமாமா?
இது 'கலை' என்றான்
தண்ணீர்த் தாம்பாளத்தில்
நெட்டிப்பூ சொடுங்கிற்று.

**கலாநிதி க. கைலாசபதி**

## நின்றதே?

உலகை விட்டுப் போகலாம்?
உறவை விட்டுப் போகலாம்?
கலகம் செய்யும் புவியிதால்...?
கண்ணை மூடிப்போகலாம்?

அமுது போன்ற சுவை தரும் -
ஆருயிரைக் காத்திடும்,
தமிழை விட்டுப் போவதே...
தாங்க முடிவதில்லையே?

மிகவும் மூத்த தமிழ் மொழி
மேலை நாட்டை விட்டு, நம்
அகமுருக்கிக் 'குமரி'யின்
அழிவின் பின்னும் உள்ளதேல்...,

எமை மறந்து போகையில்
இதை மறத்தல் எவ்விதம்?
அமைதி காட்டும் தமிழ் இது,
அமர்க்களத்தும் நின்றதே!

தாமரைத்தீவான், (ஈச்சந்தீவு)

## எதற்காக உயிர்??

நான் ஆடவில்லை என் தசை ஆடுகிறது
நான் துடிக்கவில்லை என் இதயம் துடிக்கிறது
நான் நேசிக்கவில்லை என் உள்ளம் நேசிக்கிறது
நான் உறங்கவில்லை என் கண்கள் உறங்குகின்றன
நான் கலங்கவில்லை என் மனம் கலங்குகின்றது
நான் சுவாசிக்கவில்லை என் கனவுகள் சுவாசிக்கின்றன
நான் நானாகவில்லை இதற்கு பிறகும்

**எதற்காக என்னிடம்
ஓர் உயிர்???**

விச்சு

## மலைமுரசு வாழ்க!

MALAIMURASU

"மலை தரு முரசில் பள்ளி
மாணவர்க் கேற்ற வைகள்."
கலையம்சம் குன்றி டாத
கண்கவர் "சினிமாச் செய்தி."

"மருத்துவக் குறிப்பு: மேலும் -
"மனையியல், மகளிர் பக்கம்"
பொருத்தமாம் " நகைச்சுவைகள்"
போன்றவை இருக்கக் காண்போம்!

"விளையாட்டு, தொடர் கதைகள்,
விண்வெளிச் செய்தி" மற்றும் -
"வெளிநாட்டு நடப்பு" எல்லாம்
விளக்கமாய் எடுத்துச் சொல்லும்!

"சிறுவர்க்கு ஏற்ற தான -
சிறந்ததாம் கதையும், பாட்டும்!"
"அரிவையர்க் கேற்ற வண்ணம்
அழகுநற் குறிப்பும் காட்டும்!

"ஆசிரியர் தலையங் கந்தான்
அச்சாவாய் கிரீடம் சூடும்!"
பேசிடும் உலகத் தோடும்,
பெறுமதி மிக்க தாகும்!

"பாரதி என்னும் அந்தப்
பைந்தமிழ்க் கவிஞன் "வார்த்தை -
சேரவே சிரசில் தாங்கி
செகம்வரு, "முரசே வாழ்க!"

அ. கொரிதாசன்

## பேச்சின் சிறப்பு

கோபமாய்ப் பேசினால்
குணத்தில் இருப்பாய்!

வேகமாய் பேசினால்
அர்த்தத்தை இழப்பாய்!

வெட்டியாய் பேசினால்
வேலையை இழப்பாய்!

அதிகமாயப் பேசினால்
அமைதியை இழப்பாய்!

ஆனவமாய் பேசினால்
அன்பை இழப்பாய்!

சிந்தித்து பேசினால்
சிறப்போடு வாழ்வாய்!!!

பார்த்தி

## மறுக்கப்பட்ட நிஜங்கள்

குற்ற வாளிகள் தப்பித்துக் கொள்வதும்
நிரபராதிகள் தண்டிக்கப்படுவதும் :
சாட்சியங்கள் சரிவதாலும் : நிகழ்ந்த
சம்பவத் திருப்பங்களாலும் : சிறந்த :
சட்ட வாதிகளின் வாதத்திறமையால்
சட்டம் வளைக்கப்படுவதாலுமே : இச்
சம்பவங்கள் நிகழ்கின்றது!

சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு : சில
சலுகைகளால் ஒரு சிலருக்கு
விட்டுக் கொடுக்கப்படுவதால் : நாட்டில்
திட்டமிட்டுச் செய்கின்ற : குற்றங்கள்
திரை மறை விலையே
வெட்ட வெளிச்சத்திற்கு வராமல்
விடு பட்டுப் போகின்றது!

அரசியல் வாதிகள் ஒரு சிலர் : தமது
அதிகார பலத்தால் புரிகின்ற
அராஜக அம்பலங்களை : நடுநிலை
ஊடாக வியலாளர்கள் துணிந்து
உலகறிய வைக்கும் போது : அவர்களுக்கு
உயிரச்சுறுத்தல், இழப்பு ஏற்படுகின்றது
இது கதை அல்ல கடந்த காலங்களில்
நடந்த மறுக்கப்பட்ட நிஜங்கள்!



சேனை!ரான்

## உன் நினைவுகள்

வெகுளியானப் பள்ளி நாட்களில்
எதார்த்தமாக உன் பார்வையால்
எனக்குள் பரந்தன
கற்பனைப் பட்டாம் பூச்சிகள்.

நமக்குள் தோன்றியது,
வார்த்தைகளே இல்லாமல்
புன்னகையால் வண்ணம் தீட்டிய
புதவகை நேச ஓவியம்.

உன் பெயரின் முதல் எழுத்தும்
என் பெயரின் முதல் எழுத்தும்
ஒன்றாக சேர்த்து எழுதிய
நமது பெயரைத் தாங்கிய
மரங்களெல்லாம் இன்று
தோல் உரிந்து நிற்கின்றன

ஆனால் நம் நேசம் மட்டும்
புன்னகையென எஞ்சி நிற்கின்றது
என் இதயமெனும் கோவிலிலே.

(ஸ்ரீ கயல்)



## உன் நட்பு

— பிரவின் —

உன் நட்பு என்னும்
சிறையில் சிக்கி
கொண்டேன்
தவறு செய்தால்
தண்டித்து விடு
ஆனால்
விடுதலை மட்டும்
செய்து விடாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைமை உரிமையுடன் பெறப்பட்டதா? வழங்கப்பட்டதா?

~ தப்பின்னை ~

சிறீலங்கா நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழரசுக் கட்சியின் சம்பந்தர் உள்ளார். சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டதா கிடைத்ததா என்ற வினா இப்பொழுது எழுகிறது. ஏனெனில் சிறீலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர எதிர்க்கட்சித் தலைமையைத் தாங்கள் சம்பந்தனுக்கு வழங்கியதாக ஜெனிவாவில் ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றும் போது கூறியுள்ளார். அதாவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா எதிர்க்கட்சித் தலைவர் பதவியைச் சம்பந்தனுக்கு வழங்கியதாகவே சமரவீர கூறியுள்ளார்.

1977ம் ஆண்டு நடைபெற்ற சிறீலங்காவின் நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.ஆர் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. அதுவரை ஆட்சியில் இருந்த இடது முன்னணி மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. 1972 ஆம் ஆண்டு புதிய சிங்கள பௌத்த குடியரசு யாப்பை கொண்டு வந்து சிறீலங்காவைக் குடியரசாக மாற்றிய சிறீமாவின் அரசு எதிர்க்கட்சி என்ற தகுதியை இழந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி 18 உறுப்பினர்களைப் பெற்று இரண்டாவது பெரிய கட்சியாக வந்ததால் எதிர்க்கட்சித் தகுதியைப் பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக அ.அமிர்தலிங்கத்தைத் தெரிவு செய்தனர். அவர் சிறீலங்காவின் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரானார். இது நாடாளுமன்ற விதிகளுக்கு உட்பட்ட தெரிவாகும். இதை எவரும் தடுக்க முடியாது. தடுக்கவும் இல்லை. அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணி தனித் தமிழீழம் என்ற ஆணையைப் பெற்று தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று எதிர்க்கட்சி உரிமையைப் பெற்றது. பின்னர் அக் கட்சி தனது கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டது என்பது வேறு கதை.

**நம்பிக்கை இல்லாத் தீர்மானம்.**

ஆட்சியின் மீதோ பிரதமர் மீதோ அமைச்சரவை மீதோ அமைச்சர் மீதோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது மக்களாட்சியில் ஏற்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் உலக வரலாற்றில் முதன் முறையாக எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்ற கேலிக்குரிய தீர்மானம் சிறீலங்கா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சி மீது கொண்டு-வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறினால் ஆட்சியாளர் பதவி பறிபோய்விடும். ஆனால் உறுப்பினர்களை அதிகம் கொண்ட ஆளும் கட்சி எதிர்க்கட்சித் தலைவர் மேல் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினாலும் எதிர்க்கட்சித் தலைவரைப் பதவி இறக்க முடியாது.

அப்படியிருந்தும் அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஜே.ஆரின் ஜக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்தது. நாடாளுமன்றத்திலே தமிழ் மக்களுக்கு எதிரான இனத் துவேசக் கருத்துக்களைப் பல்வேறு உறுப்பினர்களும் பேசினர். இதற்கு முன்னணியில் இருந்தவர்கள் சிறில் மத்தியூ. நெவில் பெர்ணான்டோ ஆகிய ஜக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களாவர். இவர்கள் ஜக்கிய தமிழினத்திற்கு எதிரான இனத் துவேசக் கருத்துக்களைச் சுவைத்துக் கொண்டு சிரித்தவர் ஜே.ஆர் ஆகும். 1983 ஆம் ஆண்டு நடந்த இன அழிப்பு நடவடிக்கைளுக்குக் கால்கோள் இட்டது இந்த நாடாளுமன்ற உரைகளேயாகும்.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தும் அகற்ற முடியாத எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை தாங்கள் நல்லெண்ண அடிப்படையில் சம்பந்தனுக்கு வழங்கியதாக மங்கள சமரவீர கூறுவதை எமது நாட்டு பத்திரிகைகள் பெரிதாகப் போட்டுத் தமிழ் மக்களுக்கு நல்லாட்சி நன்மை செய்து விட்டதாகப் பறைசாற்றுகின்றன.

கடந்த ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடந்த தேர்தலில் ஜக்கிய தேசியக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்க-வில்லை. தேர்தலின் பின்னர் இரண்டாவது பெரிய கட்சியான ஜக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியை ஜக்கிய தேசியக் கட்சி அமைத்துக் கொண்டது. இந்நிலையில் அடுத்த பெரிய கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உத்தியோக ரீதியான எதிர்க்கட்சித் தகுதி வழங்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிர்க்கட்சி தகுதி வழங்கப்பட்டதா? என்ற வினாவுக்கு விடை இல்லை என்பதேயாகும். சிலருக்கு இவ்விடை ஆச்சரியத்தை [illegible] ஆனால் உண்மையில் சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொண்டாலும் தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியல்ல. ஏனெனில் எதிர்க்கட்சிக் கொரடா என்கின்ற பதவி தமிழரசுக் கட்சியிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது. அப்பதவிக்கு மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரே நியமிக்கப்பட்டுள்ளார். உலகத்தில் எந்த நாட்டிலும் காணப்பட முடியாத நிலை இதுவாகும். ஏனெனில் எதிர்க்கட்சித் தலைமை என்னும் குதிரையை ஓடவிடுகிறார்கள். ஆனால் கடிவாளத்தை சிங்களக் கட்சியிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். இதைத் துணிச்சலுடன் எதிர்க்க வக்கில்லாதவர்கள் தாங்களாகவே அக்கொரடரவை மக்கள் விடுதலை முன்னணிக்கு விட்டுக் கொடுத்ததாகக் கூறித் தங்கள் பலவீனத்தை தமிழ் மக்களிடம் மறைக்கின்றார்கள்.

இந்நேரத்தில் 1956ம் ஆண்டு நடைபெற்ற ஒரு நிகழ்வையும் இங்கே சுட்டுவது பொருத்தமாகும். ஏனெனில் அன்றைய தமிழ்த் தலைமை எவருக்கும் அடி பணிந்து நடக்காத தலைமையாகும். தந்தை செல்வா. கோப்பாயக் கோமான் வன்னியசிங்கம். திருமலை ந.இ.இராசவரோதயம் போன்றவர்கள் கொள்கைகளில் உறுதிப்பாடு கொண்டவர்கள். நாடாளுமன்றத்தில் இருந்த காலம். 1956 தேர்தல் முடிந்ததும் எஸ்.டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்கா பிரதமராக வந்தார். ஆட்சியில் இருந்த ஜக்கிய தேசியக் கட்சி வெறும் எட்டுத் தொகுதிகளில் மாத்திரமே வெற்றி பெற்றது. ஆட்சியில் இருந்த ஜக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சித் தகுதியையும் இழந்து நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டது. அக்கட்சியின் அமைச்சர்களில் ஒருவனைத் தவிர அனைவரும் தோல்வியடைந்தனர். கல்வி அமைச்சராக இருந்த எம்.டி.பண்டா மாத்திரமே வெற்றிபெற்றார். களனித் தேர்தல் தொகுதியில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா. ஆர்.ஜீ. சேனநாயக்கவிடம் தோல்விகண்டார்.

இதன் பின்பு நாடாளுமன்றத்தில் ஒரு சதிவலை மூலம் சில காரியங்களைச் சாதிக்க முனைந்தது ஜக்கிய தேசியக் கட்சி. என்.எம்.பெரேரா தலைமையிலான லங்கா சமசமாசக் கட்சி 14 உறுப்பினர்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 10 உறுப்பினர்களையும் நாடாளுமன்றத்தில் கொண்டிருந்தன. இந்நிலையில் தான் ஜக்கிய தேசியக் கட்சி மூன்றாவது பெரிய கட்சியின் தலைவரான தந்தை செல்வாவை எதிர்க்கட்சித் தலைவராக ஆக்க முயற்சித்தது. தங்கள் ஆதரவின் மூலம் அதை நிறைவேற்றலாம் என்று திட்டமிட்டது. கண்ணியமான தலைவர் செல்வா அதை முற்றாக நிராகரித்ததோடு டாக்டர் என்.எம்.பெரெராவே எதிர்க்கட்சித் தலைவராகத் தகுதியுள்ளவர் என்று உறுதியாகக் கூறியிருந்தார். இல்லாவிட்டால் அன்றும் குதிரை ஓரிடமும் கடிவாளம் வேறோரிடமும் தான் இருந்திருக்கும்.

அன்றைய தமிழ்த் தலைமையின் சிந்தனைத் தெளிவும் கொள்கையின் உறுதியும் அவ்வாறான முடிவை எடுக்க வழிகோலியது. என்.எம்.பெரெராவே எதிர்க்கட்சித் தலைவராகிச் சிறப்பாகப் பணியாற்றினார். தமிழரசுக் கட்சி எதிர்க்கட்சியில் இருந்து தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஒலித்துக் கொண்டிருந்தது.

இன்று எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்ற சம்பந்தன் தனது கன்னி உரையில் அரசைக் கண்டித்து உரையாற்றினார் என்று சில பத்திரிகைகள் புகழ்ந்தன. அரசியல் யாப்பின் 19 ஆவது பிரிவுக்கு அமைய அமைச்சரவையை அமைக்காது மீறி அதிகமானோரை நியமித்ததாக சம்பந்தன் வன்மையாகக் கண்டித்தார் சிறப்பாகத் தனது உரையில் பேசினார் என்றன அவ்வேடுகள். ஆனால் உண்மையில் என்ன நடந்தது தெரியுமா? எதிர்த்துப் பேசிய கட்சி எதிர்த்து வாக்களிக்க-வில்லை இச் செய்தி பெரிதாக்கப்படவில்லை.

இதுதான் இவர்களின் இரட்டை நிலைப்பாடாகும். இதைத்தான் இவர்களுக்கு சிறிசேனாவும் ரணிலும் சொல்லிக் கொடுத்துள்ளார்கள். நாள் செல்லச் செல்ல இவர்களின் இரகசியக் கூட்டு அம்பலமாகும். சமஷ்டி மறக்கப்படும் மாகாண சபைக்குள் அனைத்தும் அடங்கும்.

# ஒட்டுப்படைகள் இயங்குகிறார்கள் !!!

இலங்கையில் ஒட்டுப்படைகள் இயங்குகின்றார்கள் என்பதை ஐ.நா அறிக்கையில் சுட்டிக்-காட்டியுள்ளது. அதாவது ஒட்டுக்-குழுக்களின் ஆயுதங்களை களைய வேண்டும் இராணுவத்தினர் அவர்களை பயன்படுத்தக் கூடாது என்று அறிக்கையில் தெரிவித்து-ள்ளது. போர் முடிவடைந்தும் ஒட்டுப்படைகள் இராணுவத்துடன் சேர்ந்திருப்பது தமிழ் மக்களுக்கு தீங்கினை ஏற்படுத்தும் செயற்பாடு ஆகும். போர்க் குற்ற விசாரணை ஆரம்பிக்கும் போது இராணுவமே ஒட்டுப்படைகளை பாதுகாத்துக் கொள்ளும் என்பது உண்மை. ஏனெனில் ஒட்டுப்படைகள் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்பட்டால் தாமும் கைது செய்யப்படுவோம் என்ற பயம் இராணுவத்தினருக்கு மட்டுமல்ல சிங்கள அரச தரப்புக்கும் எழுந்துள்ளது. எனவே ஒட்டுப்-படைகளை இராணுவம் ஏற்றும் ஏற்காவிட்டாலும் அவர்களை பாதுகாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இலங்கை இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கிய ஒட்டுப்படை செய்த கொலைகளுக்கு தண்டனை யார் கொடுப்பது. தனது இனத்தையே காட்டிக் கொடுத்துவிட்டு இன்று நிற்கதியாக தமக்கு ஒரு அடையாளமும் இல்லாமல் நிற்கும். இவர்களுக்கு யார் பொது மன்னிப்பு வழங்குவது. இராணுவம் இவர்களைப் பயன்படுத்தி விட்டு நாட்டுக்கு உதவாதவர்கள் என்று பட்டம் கட்டிவிட்டுள்ளது. தாய் மண்ணிற்கு செய்த துரோகத்திற்கு இவர்களை எவரும் கண்டுகொள்ள-வில்லை. போர்க்குற்ற விசாரணை-யில் இவர்களுக்கும் பங்குண்டு. வன்னியில் இறுதிக்கட்டப் போரில் ஈடுபட்ட இராணுவத்தினரிற்கு ஒத்தாசையாக நின்று இயங்கிய-வர்கள் ஒட்டுப்படைகள்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் துணை இராணுவக் குழுவாக இயங்கியவர்கள் ஒட்டுப்படைகள். ஆயிரத்துக்கும் அதிகமான ரி.56 ரகத் துப்பாக்கிகளும் கைத்துப்பா-க்கிகளும் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை-களில் இருந்து தெரிய வந்திருப்-பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ளை வானில் ஆள்கடத்தல் காணாமல் போகச் செய்தல் போன்ற சம்பவங்களுக்கு இவர்கள் காரணமாக அமைந்துள்ளனர். விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போர் ஆரம்பமான 2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இராணுவ ஒட்டுப்படைகளால் வெள்ளை வானில் பலர் கடத்தப்பட்டு காணாமல் போயினர். யாழ்ப்பாண ஊரெழுப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் இராணுவத்தினருடன் சேர்ந்து ஒட்டுப்படைகள் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொட வைக் கடத்தியதாக 10 இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. கிரித்தல இராணுவ முகாமில் இவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். இந்த கிரித்தல இராணுவ முகாமில் ஒட்டுப்படைகள் இயங்கியமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ராஜகிரியவில் இருந்து பிரகீத்தை கிரித்தல இராணுவ முகாமுக்கு கடத்திச் சென்றவர்கள் ஒட்டுப்படைகள்.

ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றும் இராணுவத் தேவைகளுக்காக இவர்களை பயன்படுத்தக் கூடாது என்றும் ஐ.நா அறிக்கை பரிந்துரைத்துள்ளது. அறிக்கையில் ஒட்டுப்படைகள் பற்றி குறிப்பிட்ட விடயம் எந்தளவுக்கு சாத்தியம்.

விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை சிதறடிக்கத் தான் ஒட்டுப்-படைகளை இலங்கை இராணுவமும் இந்திய இராணுவமும் வளர்த்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். ரெலோ. ஈ.என்.டி.எல்.எவ். என்பன இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலப் பகுதியில் இந்திய இராணுவத்தினரின் ஒட்டுப்படைகளாக இயங்கினர். அதற்குப் பின்னர் புளொட் ரெலோ ஈ.பி.ஆர்.எல்.எவ். ஈ.பி.டி.பி போன்றன இலங்கை இராணுவத்தினரின் ஒட்டுப்படைகளாக இயங்கியமை குறிப்பிடத்தக்கது. மண்டையன் குழு என்றழைக்கப்படும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இந்திய இராணுவ காலப் பகுதியில் பல தமிழ் இளைஞர்களின் தலையை வெட்டி வீதிகளில் எறிந்தது.

அரசியல் யுகத்தில் பிரகாசிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் நிறுவி இந்த அமைப்புகளை அதில் ஒன்றிணைத்தது. ஈ.பி.டி.பி. புளொட். ஈ.என்.டி.எல்.எவ் போன்ற அமைப்புகளை இந்த அமைப்பில் சேர்த்துக் கொள்ள விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. ஏனெனில் வவுனியாவில் தமிழ் மக்களுக்கு புளொட் செய்த கொடுமைகளை எவராலும் இன்று வரை மறக்க முடியாதுள்ளது.

கருணா அம்மானின் சகாக்கள் பொலன்னறுவ எல்லையில் உள்ள சுங்கவில காட்டில் மறைந்து ஒட்டுப்படைகளாக செயற்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்'ல் சாத்பொன்சேகா ஒப்புக் கொண்டுள்ளார். கருணா அம்மானால் கிழக்கு மாகாணம் சுடுகாடாக காட்சியளித்ததை எவராலும் மறக்க முடியாது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருந்த ஒருவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் ரவிராஜ் சந்திரநேரு மற்றும் பேராசிரியர் ரவீந்திரநாத் ஆகியோரின் படுகொலைகளில் நேரடியாகத் தொடர்புடையவர் என்றும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் கருணா அம்மான் தெரிவித்திருந்தார். இந்தக் கொலைகள் இடம்பெறப் போகின்றன என்பதை முன்கூட்டியே தெரிந்துள்ளார் கருணா. எனவே இந்தக் கொலைகளுக்கும் இவருக்கும் சம்பந்தம் இருப்பதை இவரே ஒப்புக்கொண்டுள்ளார்.

தமிழீழக் கனவில் ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள் வழி தவறியது மட்டுமல்ல தாம் எதற்காக ஆயுதம் தூக்கினோம் என்று கூட சிந்தித்துப் பார்க்க நேரமின்றி இவர்கள் தமிழ் இனத்துக்கு மட்டுமல்ல தமது தாய்க்கும் கெடுதல் செய்திருக்கிறார்கள். பண்டார வன்னியன் காலப் பகுதியில் காக்கா வன்னியன் போல் எமது காலப் பகுதியில் ஒட்டுப்படைகள்.

(( துன்னாலைச் செல்வன் ))

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 72

# விமர்சனங்களும் விமோசனங்களும்

(வி.என்.சந்திரகாந்தி)



கிரிட்டிசம் (Criticism) என்ற ஆங்கில பெயர்ச் சொல்லுக்கு தமிழில் பெரும்பாலும் வழக்கில் உள்ள பதம் விமர்சனம் ஆகும் அது சுட்டும் பொருள் கண்டனம், குணா குணங்களை ஆராய்தல் என்பதாக அமைகின்றது. எந்த ஆபத்துக்களி-லிருந்தும் தப்பலாம். விமர்சனம் என்ற சொற் கணையிலிருந்து தப்புவது அரிதிலும் அரிது. பல அரசியல்வாதிகள் முதல் நடிகர்கள் வரை விமர்சனத்தால் உயர்ந்தும் இருக்கின்றார்கள். வீழ்ந்தும் இருக்கின்-றார்கள். பல பாவலர்கள் இயற்கை அழகையும் பாவைகள் எழிலையும் வர்ணித்து விமர்சனத்திற்குட்பட்டுள்ளார்கள். கம்பரின் கற்பனையை விமர்சிக்காத இலக்கியவாதிகள் எவராவது இருக்க-கூடுமா? பாரதியாரின் பாடல்களில் சொக்கி பாராட்டுக்களையும் விமர்சனங்களையும் குவிக்காத புலவர்களும் மக்களும் உண்டா? கம்பரையும் பாரதியையும் நோக்குகையில் அவர்களது படைப்புக்கள் விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுவது சரியா என்ற சிந்தனை பலரிடம் தோன்றியுள்ளது. இன்னும் சொல்லப் போனால் இலக்கியமும் கலையும் திறமைகளால் மெருகூட்டப்-பட்டவை. அவற்றை விமர்சன நோக்கில் பார்க்க கூடாது. அவற்றின் திறனை அவை வெளிப்படுத்தும் உயரிய கலை அம்சங்களை திறனாய்ந்து சொல்ல வேண்டும். அதனால் தான் "திறனாய்வு" "திறனாய்வாளர்கள்" என்ற சொற்கள் புதிதாக நடைமுறைக்கு வந்துள்ளன. திறனாய்வாளர்களுக்கு பெரும் தகுதிகள் இருக்கவேண்டும். விமர்சகர்களுக்கு எதுவும் கட்டாயம் இல்லை. மனத்தைரியம் இருந்தால் எவரையும் எந்த செய்கையையும் எந்த படைப்புக்களையும் விமர்சிக்க முடியும்.

சரி இனி விமர்சனத்திற்கே திரும்புவோம். அதன் பிரதான பணி குற்றம் குறைகளை குணா குணங்களை அறிந்து சொல்லல் ஆகும். ஒரு வெண்பலகையில் கறுப்பு புள்ளி இருந்தால் விமர்சகர்களின் கண்ணுக்கு முதலில் புலப்படுவது அந்த கறுப்பு புள்ளிதான். அரசியல் விமர்சகர்களை எடுத்துக்கொள்வோம். பலருக்கு சரிதான் போலும் என்று தோன்றும் அரசியல் நடவடிக்கைகள் அவர்களுக்கு தவறு என்று தெட்டத்தெளிவாக தோன்றும். அவர்கள் தமது நிலைப்பாடு பற்றி மிகத்துல்லியமான விவாதங்களை முன்வைப்பர். கடந்தகால நிகழ்வுகளை சாட்சியாக சமர்ப்பிப்பர். எதிர்காலத்தில் நடக்கபோவன பற்றி துல்லியமாக கணிப்பிட்டு சொல்லுவர். அவர்கள் அறிந்ததெல்லாம் நாளாந்த அரசியல் நடப்புக்கள் தான். எந்த அரசியல் கட்சி என்ன கொள்கை அடிப்படையில் இயங்குகின்றது. மக்களுக்காக உழைக்கும் அரசியல்வாதிகள் யார்? சுய இலாபத்திற்காக சம்பாதிக்கும் அரசியல்வாதிகள் யார்? என்ற விபரங்களெல்லாம் அவர்களுக்கு தண்ணிபட்ட பாடமாக இருக்கும்.

அவற்றுக்கெல்லாம் மேலாக அரசியல் வாதிகளின் மனத்தைரியத்தை பாராட்டாமல் இருக்க முடியாது. மாகாணசபை அங்கத்தவர்களில் இருந்து நாட்டின் பெரும் அரசியல் வாதிகள் வரை பெயர் குறிப்பிட்டு விமர்சித்து விடுவார்கள். பலருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தபோதும். அவர்கள் தாம் கருதியதை ஒரு போதும் எழுத தயங்கியதில்லை!

இனி சினிமா துறையை எடுத்தால் அது கலை உலகை சார்ந்தது. அதற்கென சினிமா விமர்சகர்கள் என்று ஒரு கூட்டம் இருக்கின்றது. அவர்களது தொழில் சினிமா பார்ப்பது. தமிழ் மொழிபடங்களை மட்டும் அவர்கள் பார்ப்பதில்லை. ஆங்கிலம், கன்னடம், மலையாளம் உட்பட பல மொழிப்-படங்களையும் அவர்கள் தவறவிடுவதில்லை இனி எந்த மொழி படமாயினும் அதற்கு விருது கிடைத்துவிட்டால் அதை தேடிப்பார்ப்பார்கள். படத்தின் கதையோட்டம் பங்குபற்றிய நடிகர் நடிகையர், இயக்குனர் கதை, வசன கர்த்தா, இசையமைப்பாளர், என்று அனைவரையும் அறிந்து வைத்திருப்பர். பிற மொழி படங்களை தாய்மொழி படங்களுடன் ஒப்பிட்டு விமர்சிக்கும் ஆற்றல் அவர்களிடம் நிறைந்திருக்கும். பல படங்கள் வசூலில் கொடிகட்டி பறப்பதற்கும் மற்றும் பல ஓரிரு வாரங்களில் காட்சிகளை நிறுத்திக் கொள்வதற்கும் காரணமாக இருப்பவர்கள் பெரும் சினிமா விமர்சகர்கள்தான்!

இப்படியே எந்த துறையை எடுத்தாலும். அவற்றை விமர்சிப்பதற்கு கட்டாயமாக ஒரு குழு இருக்கவே செய்யும். அவ்வத் துறைகளின் வீழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் விமர்சகர்களே.

பத்திரிகைகளை எடுத்துப்பாருங்கள் பல சஞ்சிகைகளின் சிறப்புக்கள் பற்றி விதந்துரைக்கப்பட்டிருக்கும். அவையே முன்னோடி சஞ்சிகைகளாக இருக்கும். அதே போன்று பலபடைப்பாளிகள் பற்றிய பேட்டிகள் மக்களுக்கு அவர்களை இனம் காண வைக்கும்.

இன்றைய சந்தர்ப்பவாத சூழ்நிலையை எடுத்தால் எந்த துறையில் இருப்பவர்களும் சரி விமர்சனத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கவே செய்கின்றது. பெரும் அரசியல் வாதிகளும். சரி சினிமா தயாரிப்பாளர்களும். சரி விமர்சனத்துக்கு முகம் கொடுக்கவேண்டிய கட்டாயம் இருக்கவே செய்கின்றது. ஆனால் அவர்கள் விமர்சனத்துக்கு பயந்து அடிபணியாமல் தொடர்ந்து தமது முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்-பதனால்தான் என்றும் தமது துறைகளில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த நிலைப்பாட்டினை நாமும் கடைப்பிடிக்க வேண்டும்.

எம்மைப்பற்றிய எமது அபிப்பிராயம் தலையானது. பிறரது பாராட்டு-க்களுக்காக ஆமோதிப்புக்களுக்காக புகழுக்காக காத்திருப்பது நாம் பிறரால் ஆட்டுவிக்கப்படுவதற்கு முதற்படி என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அர்த்தமில்லாத சொற்களும் கண்டனங்களும் எம்மை வீழ்த்தி விடாதபடி நாம் அவதானமாக இருக்கவேண்டும். பிறர் எம்மைப்பற்றி விமர்சனம் செய்வது குற்றங்குறைகளை சுட்டிக்காட்டுகின்றார்களென்றால் நாம் அவற்றை திருத்திக்கொண்டு அடுத்த முன்னேற்ற படிக்கு தாவ வேண்டும்.

இனி அடுத்த வளமாக சிலர் சுயவிமர்சனம் செய்வதன் மூலம் தமது பெயரையும் புகழையும் வளர்த்துக்-கொள்வதில் மிகுந்த சாதுர்யத்தைக் கையாள்கின்றார்கள் அவர்கள் தமது திறமையை வளர்க்காமலும் அதனை வெளிப்படுத்தாமலும் மற்றவர்களது அங்கீகாரத்திற்காகவும் ஆமோதிப்பிற்-காகவும் விருதுகளுக்காகவும் ஏங்குகின்றார்கள். அதனால் அவர்கள் தமக்கான தனிதன்மையை இழக்கின்றார்கள். சில எழுத்தாளர்கள் ஓரளவு படைப்பாற்றல் கொண்டவர்-களாயினும் அவர்களது கற்கை மட்டுப்-படுத்தபட்டிருப்பதாலும் பரந்துபட்ட அறிவு இன்மையாலும் அவர்களால் ஒரு குறுகிய எல்லைக்குள் நின்றே இலக்கியம் செய்யக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகள் மீதான அறிவு சூன்யமாக இருந்துவிட்டால் பிற மொழி இலக்கிய பரீட்சயம் அவர்ளுக்கு இருக்காது. ஆனால் அவர்கள் தம்மை பிரபல்யப்-படுத்திக் கொள்வதற்காக சில சாதுர்யங்களை கடைப்பிடிக்கின்றார்கள். தமது எழுத்துக்கள் சில இஸம் களை அடிப்படையாக கொண்டவை என பிரபல்யப்படுத்துகின்றார்கள். அதைக்-காட்டிலும் பிரதானமாக சுயவிமர்சன-த்தை தந்திரமாக கையாள்கின்றார்கள்.

அதாவது எந்த கல்விமானின் படைப்புக்களாக இருந்தாலும் சரி பெரும் படைப்பாளிகளின் ஆக்கங்களாயினும் சரி அவற்றை அவர்கள் துணிந்து நிராகரிப்பர். அகிலனின் எழுத்துக்களா?, அவரும் ஒரு எழுத்தாளரா? என்று பரிகசிப்பர். "ஜெயகாந்தனின் படைப்புக்களா?" "அவர் எப்போது எழுத்தாளரானார்?" என்று கேட்டு கர்ஜிப்பர்! அதனை கேட்டுக்கொண்டி-ருப்பவர்கள் அசந்து போய்விடுவார்கள். அகிலனும் ஜெயகாந்தனும் அவர்களுக்கு தூசு என்றால் அவர்கள் எப்பேற்பட்ட எழுத்தாளராக இருக்கவேண்டும் என்று வியப்பில் ஆழ்ந்துவிடுவார்கள். வாய் வீச்சு மட்டும் வரலாறு படைக்காது என்பதை அவர்கள் என்று தான் புரிந்து கொள்வார்களோ தெரியாது!

இனி தனிநபர் விமர்சனங்களுக்கு எமது சமூகத்தில் குறைவே இல்லை. பிற அலுவலர்களின் ஒத்துழைப்பு இன்றி தமது கடமைகள் எதனையும் நிறைவேற்ற இயலாதவர்கள் கூட மற்றவர்களை குறைத்தே விமர்சித்துவிடுவார்கள். தமது மனைவி பிள்ளைகள் பற்றி பிறர் மத்தியில் பேச்சு எடுக்காதவர்கள் கூட மற்ற மற்ற பெண்களின் விவாகம் காதல் என்று பேச்சு வந்தால் கலியாணம் தடைப்படும் அளவுக்கு குறைத்து மதிப்பிட்டு விமர்சித்துவிட்டு போய்விடுவார்கள். கல்வியிலும் விளையாட்டிலும் சமூக சேவையிலும் ஒருமித்து திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு இளைஞன் அயல் வீட்டுக்காரனின் பார்வையில் ஊதாரி, சோம்பேறி, படிப்பில் படுமோசம், முத்தவர்களை மதிப்பதில்லை என்றே விமர்சிக்கப்படுவான். என்ன செய்வது எமது தலைவிதி அப்படித்தான் அமைந்திருக்கின்றது.

குறை சொல்வது என்பது தன்னம்பிக்கை இல்லாதவர்களின் கடைசி அஸ்திரம். நாம் அதற்கு அடிபணியக்கூடாது.. ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி போன்ற பெரும் அரசியல் வாதிகளின் வாழ்கையை முன்னுதாரணமாகக் கொள்ளல் வேண்டும். தாம் நம்பியதை பிடிவாதமாக கொண்டு போராடியவர்களே எப்போதும் வெற்றிவாகை சூடியவர்களாவர். சில சமயம் பிறரது அபிப்பிராயங்களுக்கு எதிராக போரிட நேரிடலாம். அதற்கான மனோபலத்தை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். எவ்வகை விமர்சனத்துக்கும் விமோசனம் உண்டு என்று நம்புங்கள்!



# இரவு வேளை ஏதுவும் நடக்கலாம்




வைத்தியசாலையில் தாதியாக கடமை புரியும் ஒரு பெண்ணிற்கு நேர்ந்த விபரீதம்......

அன்று திருகோணமலை வைத்தியசாலையிலிருந்து தனது கடமையை முடித்துக் கொண்டு தனது மோட்டார் வண்டியில் இரவு பத்து மணியளவில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் ஜார்ஜினா.

அன்று அவளது கண்ணெதிரே சிகிச்சை பலனளிக்காது ஓர் கர்ப்பிணிப் பெண் உயிரிழந்தாள். அவளுக்கு வைத்தியம் பார்த்ததில் இவளும் ஒருத்தி. தமது முழு முயற்சியையும் கொடுத்தும் கூட அவளைக் காப்பாற்ற முடியாமல் போனதால் ஜார்ஜினாவின் மனம் ஆறுதல் கொள்ள மறுத்தது.

வீதியில் சென்று கொண்டிருந்த போதும் கூட அவளுக்கு அப்பெண்ணின் முகமும் அவளின் துடிப்புமே நினைவிற்கு வந்து போயின.

வீடு சென்று சேர்ந்தாள். நடந்தவற்றை தனது அம்மாவிற்குக் கூறி பின் குளித்து அழகான பூப்போட்ட சட்டை ஒன்றினுள் நுழைந்து கொண்டாள். இரவு சாப்பாட்டினை அவளால் சாப்பிட முடியவில்லை. நித்திரைக்குச் சென்றாள் நித்திரையும் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தாள், முடியவில்லை.

ஜார்ஜினாவிற்கு பூமரங்களில் மிகுந்த விருப்பம். தனது சிறிய பூந்தோட்டத்திற்கு சென்று நீர்பாய்ச்சி மனதை தேற்ற முயற்சித்தாள். அவள் அவளையும் மீறி பூ மரங்களோடு பேசத் தொடங்கினாள். நாளை காலை 8 மணிக்கு டியூட்டிக்கு செல்ல வேண்டும். எனினும் நேரத்திற்கே சென்று அப்பெண்ணின் தாயாரை பார்த்து ஆறுதல் கூறிவிட்டு செல்ல வேண்டும் என கூறிக்கொண்டாள். சரியாக நேரம் பன்னிரெண்டு அடித்தது. தூக்கம் கண்களை சுழற்ற படுக்கைக்கு சென்றாள்.

நன்றாக அயர்ந்து உறங்கினாள். திடீரென அம்மா கூப்பிடுவது போல் உணர்ந்தாள். நேரமாகிவிட்டதே என எண்ணியவள் உடன் சென்று குளித்து தனது தாதி சீருடையை அணிந்து தன்னை கண்ணாடியில் பார்த்து விட்டு புறப்படுவதற்கு பையை எடுத்தாள். தலைக்கவசத்தை மாட்டிக்கொண்டு வண்டியின் சாவியையும் எடுத்தாள்.

விறாந்தையில் ஏதோ சத்தம் கேட்கிறதே என எண்ணியவாறு, அம்மா "என்ன புள்ளை இந்த நேரத்தில பண்றா?' என கேட்டவாறு விறாந்தைக்கு வந்தாள்.

நள்ளிரவு இரண்டு மணிக்கு ஜார்ஜினா வேலைக்கு புறப்படுவதை அவதானித்து, ஜார்ஜி, ஜார்ஜி என கூப்பிட்டாள். ஏன்டீ இவ்வளவு நேரத்திற்கு எழும்பி வெளிக்கிடுறாய் என கேட்டவாறு அருகில் வந்தால்.

அம்மா அருகில் நிற்பதையே கவனிக்காது எங்கேயோ விறைத்துப் பார்த்தவாறு வெளியில் செல்ல கதவைத் திறந்தாள். பதறிப்போன அம்மா, தனது கணவனை அழைத்தாள். என்னங்க இங்க நடக்கிற கூத்தை வந்து பாருங்க என்றாள். உங்களோட நிம்மதியா படுக்க முடியாதே என சினந்தவாறு வெளியே வந்தார். அதற்குள் அவள் வண்டியை திருப்பி சாவியை போட்டு போக தயார் நிலையில் நின்றாள். மகளைக் கண்டவுடன் ஓடிச் சென்று கன்னத்தில் பளார் பளார் என்று அறைந்தார். தாயார் கொண்டு வந்த தண்ணீரை முகத்தில் விட்டடித்தார். கொர கொர என வீட்டிற்குள் ஜார்ஜினாவை இழுத்துச் சென்றார் தாயார். மோ.வண்டியை திருப்ப முயன்ற தந்தையின் உடலை உரசிக் கொண்டு அடர்த்தியான காற்று சென்றதை உணர்ந்த அவர் திரும்பாமல் அப்படியே வண்டியை நிறுத்திவிட்டு வீட்டிற்குள் சென்று ஒரு தம்ளர் தண்ணீரை வாசல் கதவோரம் வைத்தார். அவர் சாதாரண நிலைக்கு திரும்ப சில விநாடிகள் எடுத்தன.

(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

# "திரிஷா இல்லைன்னா நயன்தாரா"

### ஆத்விக்கின் இயக்கத்தில் ஜீ.வி, அனந்தி, மனிஷா நடிக்கும்

காதல் ரொம்ப புனிதமானது, ஒரு ரோஜா செடி ஒரு முள்ளு இப்படி பேசி பேசி 2 லட்சம் தமிழ் படம் வந்திருக்கும், இதையெல்லாம் கிழித்து காதல்னாலே கசமுசா தான்யா ஜாலியா இருன்னு புது வாழ்க்கை தத்துவத்த சொல்லியிருக்காரு நம்ம அறிமுக இயக்குனர் ஆத்விக்.ஜி.வி.

பிறக்கும் போதே ப்ளே பாய் மாதிரி இரண்டு பெண்களுக்கு நடுவே பிறக்கிறார். இதை தொடர்ந்து அந்த பெண்களில் ஒருவரான ஆனந்தியின் காதலில் விழுகிறார். அதன்பின் சில 18+ காட்சிகளுடன் இவர்கள் காதல் அரங்கேற, இந்த ரகசியம் பள்ளி முழுவதும் தெரிகிறது. அதோடு இந்த லவ் கதம் கதம். அதை தொடர்ந்து அடுத்த போனில் மனிஷா யாதவ், 'நான் உன்னை காதலிக்கிறேன்' என்று சொல்ல, அடுத்த கியரை போட்டு வண்டியை ஸ்டார்ட் செய்கிறார் ஜி.வி.

பெண்கள் குணம் 100 வகை அதை அறிந்த ஆண் யார்? இது தெரியாத ஜிவி, இந்த பெண்ணிடம் நல்லவனாக நடிக்க முயற்சி செய்து இந்த காதலிலும் பல்ப் வாங்குகிறார். இந்த பொண்ணுங்களே இப்படித்தான் இந்த காதலே வேண்டாம் என்று தன் மாமா விடிவி கணேஷ் இருக்கும் கும்பகோணத்திற்கு செல்ல, அங்கு மீண்டும் ஆனந்தியை பார்த்து, தன் பழைய காதலை புதுப்பிக்க முயற்சி செய்கிறார் சீனியர் ஆர்டிஸ்ட் சிம்ரன் உதவியுடன். இவர் காதல் வெற்றி பெற்றதா? இல்லையா? என்பதை இவ்ளோ தைரியமான கலகலப்பான கிளைமேக்ஸுடன் கூறியிருக்கிறார் ஆத்விக்.

தமிழ் சினிமாவிலே இப்படி ஒரு படமா? என்று புருவத்தை உயர்த்த வைக்கின்றது, அட....டெக்னிக்கல், உலகத்தரத்த சொல்லலங்க... பசங்க பதுங்கி பதுங்கி பேசுற விஷயத்தை கூட திரையில பப்ளிக்கா சொல்லி ஆச்சரியப்படுத்தியிருக்காரு ஆத்விக்.ஜி.வி நடிப்பில் பள்ளியில் பாஸ் ஆகி கல்லூரிக்கு வந்துவிட்டார். படம் ஆரம்பித்தது முதல் முடியும் வரை சீரியஸ் என்ற வார்த்தையை எங்கு தேடினாலும் கிடைக்காது, அதிலும் விடிவி கணேஷின் புதிய புதிய வார்த்தைகள், செங்கல் சைக்கோ கதாபாத்திரம் என இளைஞர்களுக்கான அனைத்து விஷயங்களும் படத்தில் உள்ளது. சிம்ரன் நீண்ட இடைவேளைக்கு பிறகு சூப்பர் கதாபாத்திரம் கிட்டத்தட்ட லவ் குரு மாதிரி.

படம் கலகலப்பாகவே சென்றாலும் கொஞ்சம் நீளமாக இருப்பது போல் ஒரு உணர்வு, மொத்தத்தில் அட வாழ்க்கை ரொம்ப ஈஸி ஜாலியா விடுங்கன்னு அவர்களையும் மாற்றிவிடும் இந்த த்ரிஷா இல்லனா நயன்தாரா.



அஸ்வின் சரவணனின் இயக்கத்தில் வெளியான "மாயா" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



### மனம் திறந்த அனுஷ்

முன்னணி கதாநாயகிகளில் ஒருவரான அனுஷ்கா தனது 10 வருட சினிமா அனுபவங்கள் பற்றி மனம் திறந்தார். 'நான் சினிமாவில் 10 வருடங்களாக நடிக்கிறேன். இந்த காலகட்டத்தில் நிறைய அனுபவங்கள் கிடைத்தன. வெற்றியில் சந்தோஷப்படுகிறோம். தோல்வியில் துவண்டு போகிறோம். அவ்வாறு இருக்கக் கூடாது. வெற்றி தோல்வியை ஒன்றாக பார்க்கும் பக்குவம் வரவேண்டும். வெற்றி மரியாதைக்கு உரியது. தோல்வி மதிப்புக்கு உரியது என தெரிவித்தார்.

### ரிஸ்க்கில் சூர்யா

தமிழ் சினிமாவில் தொடர் வெற்றிகளால் ரசிகர்களை கவர்ந்து இழுத்தவர் சூர்யா. ஆனால், அஞ்சான், மாஸ் போன்ற இவரின் சமீபத்திய தோல்வி படங்கள் சூர்யா மார்க்கெட்டை கொஞ்சம் தடுமாற வைத்துள்ளது. இதனால் வெற்றி கொடுத்தே ஆக வேண்டும் என 24, சிங்கம்-3 ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இதில் சிங்கம்-3 படம் பெரிய பட்ஜெட்டில் உருவாகவுள்ளதாம். இதுவரை வெளிவந்த சூர்யா படங்களிலேயே அதிக பட்ஜெட்டில் உருவாகும் படம் இதுதானாம்.

### தாக்கப்பட்டார் "சிவா"

நடிகர் சிவகார்த்திகேயன், தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த-போது தன்னை ரஜினி ரசிகர் என்றும் கமல் குறித்து அவதூறாக பேசியதாகவும் கூறப்படுகிறது. இதனால் கடும் ஆத்திரமடைந்த கமல் ரசிகர்கள் சிவகார்த்திகேயனை டுவிட்டரில் திட்டித் தீர்த்தனர்.

இந்நிலையில், சிவகார்த்திகேயன், வருவதாக கேள்விப்பட்ட கமல் ரசிகர்கள், மதுரை விமான நிலையத்தின் வாசலில் காத்திருந்து சிவா வந்ததும் சூழ்ந்து கொண்டு கண்மூடித்தனமாக தாக்கியதாகவும், அவர்களை சிவகார்த்திகேயனின் பாதுகாவலர்கள் தடுத்ததாகவும் கூறப்படுகிறது.

### வாழ்த்துக்கள் "முருகதாஸ்"

பல நடிகர்களின் வெற்றி காரண கர்த்தாவாக இருக்கும் முருகதாஸ், நாட்டிற்கும் சமூகத்திற்கும் தேவையான பல கருத்துக்களை முன்வைத்தவர். இவர் தற்போது பெண்களை பெருமைப்படுத்தும் விதமாக அகிரா என்ற படத்தை ஹிந்தியில் எடுத்து வருகிறார். இப்படத்தை தொடர்ந்து முருகதாஸின் அடுத்த பார்வை யார் மீது விழும் என்று ரசிகர்கள் மட்டுமில்லை, நடிகர்களே காத்திருக்கின்றனர். இவர் இதேபோல் என்றும் வெற்றி மேல் வெற்றி பெற முருகதாஸின் பிறந்தநாளான நேற்று அனைவரும் தன் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

### வரவர கமல் படம் போலாகிறது

### விஜய் படம்

விஜய் படம் வரவர கமல் படம் போல் ஆகிவிட்டது. பிரச்சனை இல்லாமல் விஜய் படங்கள் வருவதே இல்லை. தற்போது புலிக்கு பிரச்சனை வந்துள்ளது. புலி திரைப்படம் அடுத்த வாரம் திரைக்கு வர ரசிகர்கள், போஸ்டர், பேனர் என களத்தில் இறங்க ஆரம்பித்து விட்டனர். இந்நிலையில் சமீபத்தில் ஒரு சில கட்சிகள் தியேட்டரில் சொன்ன விலைக்கு தான் டிக்கெட் விற்க வேண்டும், அதிக தொகைக்கு டிக்கெட் விற்கும் திரையரங்கு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## வாகனத்தை கட்டுப்படுத்தும் கைப்பட்டி



ஸ்மார்ட் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது மனிதர்களின் ஆரோக்கியத்தினை அதிகரிக்கும் ஸ்மார்ட் கைப்பட்டிகள் வரை எட்டிவிட்டது. இவ்வாறிருக்கையில் மேலும் ஒருபடி முன்னேறி ஸ்மார்ட் கடிகாரத்தின் உதவியுடன் வாகனங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அப்பிளிக்கேஷன் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

Viper SmartStart 4.0 எனும் இந்த அப்பிளிக்கேஷன் ஆனது அன்ரோயிட் மற்றும் அப்பிளின் iOS கைக்கடிகாரங்கள் மற்றும் மொபைல் சாதனங்களில் நிறுவி பயன்படத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. CDMA/3G இணையத் தொழில்நுட்பத்தில் செயல்படும் இதன் ஊடாக BMW, VW மற்றும் Volvo ஆகிய நிறுவனங்கள் அறிமுகம் செய்யும் வாகனங்களை கட்டுப்படுத்த முடியும்.

## செல்பி கரண்டி கண்டுபிடிப்பு



செல்பி ஸ்டிக்கின் தாக்கம் மக்கள் மத்தியில் குறைந்துபோவதற்குள், செல்பி கரண்டி எனும் புதிய சாதனம் சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ளது. ஜெனரல் மில்ஸ் நிறுவனத்தின் பிராண்ட் ஆன, டோஸ்ட் கிரன்ச் இதை உருவாக்கியுள்ளது. சாப்பிடுவதை செல்பி எடுக்க முடியாமல் நிறைய பேர் தவிப்பதை நிறுத்தவே இந்த புதிய தயாரிப்பு என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

30 இஞ்ச் வரை விரியக் கூடிய இந்த கரண்டியின் மறுமுனையில் ஸ்மார்ட் போனை வைத்து இனி செல்பி எடுத்துக்கொள்ளலாம். செல்பி ஸ்பூன்.காம் என்ற இணையதளத்தில் இந்த சாதனத்தை ஆர்டர் செய்து கொள்ளலாம்.

## FIREFOX HELLO




Mozilla நிறுவனம் இம்மாதம் தனது Firefox உலாவியின் 41வது பதிப்பினை அறிமுகம் செய்கின்றது. இப்புதிய பதிப்பில் Firefox Hello எனப்படும் உடனடி குறுஞ்செய்தி சேவையினை வழங்குகின்றது.

Firefox Account வைத்திருக்கும் பயனர்கள் இப்புதிய வசதியினைப் பயன்படுத்தி உலாவியில் இருந்தவாறே நேரடியாக ஏனையவர்களுக்கு குறுஞ்செய்திகளை அனுப்ப முடியும். இது தவிர வீடியோ அழைப்பினை ஏற்படுத்தும் வசதியும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.


இச் சேவையினை எந்தவொரு இயங்குதளத்தினைக் கொண்ட கணினியிலும் உள்ள Firefox உலாவியின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

OTHER

## விரைவில் ஆட்டோ கார்

எலியோ என்ற நிறுவனம் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஆட்டோ கார் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இந்த தொழில் நுட்பத்துக்கு இப்போது அதிக அளவில் முதலீடுகள் குவிகிறது. இந்தக் காரை வாங்க 45 ஆயிரம் பேர் முன் பதிவு செய்துள்ளார்கள். கார் தயாரிப்புக்கான முதலீட்டில் 75 சதவீதம் முன் பதிவு மூலமே இந்நிறுவனத்துக்குக் கிடைத்துள்ளது. துணிகர முதலீட்டு நிறுவனங்களும் முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கிருமிகளைக் கண்டுபிடிக்கும் அப்ளிகேஷன்

இரத்தத்தில் தொற்றக்கூடிய எந்த வகை நோயினையும் கண்டறியக்கூடிய நனோ பச் ஒன்றினை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனை மிகவும் நுண்ணிய ஊசிகளின் ஊடாக விரைவாகவும், எவ்வித வலியும் ஏற்படாமலும் குருதியில் செலுத்த முடியும். இவ்வாறு செலுத்துவதன் ஊடாக மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் போன்ற பல்வேறு நோய்களையும் இலகுவாகக் கண்டறிய முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. 2017ம் ஆண்டளவில் இந்த தொழில்நுட்பமானது மருத்துவ உலகில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறுநீரகத் தொற்றை கண்டறிய இலகு வழி



சிறுநீர் பாதையில் ஏற்படும் தொற்று நோய்களை விரைவாக குணப்படுத்தக்கூடிய வகையில் USB ஸ்டிக்போன்றசாதனத்தைEast Anglia பல்கலைகழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இச்சாதனமானது நுண்ணுயிர்க் கொல்லிகளைக் கொண்ட பரம்பரை அலகுகளை (DNA) வரிசையான முறையில் சிறுநீர்ப் பாதைகளினூடு செலுத்தக்கூடியவகையில்வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் நுண்ணுயிர்க் கொல்லிகளின் எதிர்ப்புத் தன்மையையும் இச்சாதனம் கண்டறியக்கூடியதாக இருக்கின்றது என East Anglயை பல்கலைக்கழகத்தின்பேராசிரியர்தெரிவித்துள்ளார்.

## S HEALTH சம்சுங்

S Health என்பது சம்சுங் நிறுவனத்தினால் உடல் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அப்பிளிக்கேஷன் ஆகும்.

தற்போது இந்த அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பான S Health 4.5 இனை அந்நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இப்பதிப்பில் Dashboard ஆனது நாள்தோறும் இடம்பெறும் செயற்பாடுகள் மற்றும் இலக்குகள் தொடர்பாக விரைவான தரவுகளைத் தரக்கூடியவாறு மேம்படுத்தப்பட்டுள்ளது.

இதனை சம்சுங் அல்லாத ஏனைய அன்ரோயிட் சாதனங்களில் நிறுவகக்கூடிய வகையிலும், சம்சுங் Galaxy S3 மற்றும் அதற்கு பின்னர் அறிமுகமான அனைத்து சம்சுங் சாதனங்களிலும் நிறுவிப் பயன்படுத்தக்கூடியவாறு காணப்படுகின்றது.

## உடலை மறைக்கும் ஆடை



உடம்பில் அணிந்தால் மனிதர்களை மறைக்கும் ஆடைகளை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இன்விசிபிள் கிளாக் (invisibility cloak) என அழைக்கப்படும் இந்த மறைக்கும் ஆடை 36 சதுர மில்லிமீற்றர் அளவுள்ள பொருளை மட்டுமே மறைக்கும்.

இந்த கிளாக் 80 நானோமீட்டர் தடிமன் கொண்டது. இந்த ஆடை பொருளின் மேற்பரப்பில் விழும் ஒளியை சிதற செய்து ஒளி அலைகள் ஆப்டிகல் மூலம் கன்னுக்கு தெரியாதவாறு செய்கிறது. ஆனால் இந்த தொழில்நுட்பத்தை நடைமுறைக்கு வர ஐந்து முதல் 10 ஆண்டுகள் ஆகலாம் என கூறப்படுகின்றது.

## ஸ்கைப் சேவை தடைப்பட்டது!! ??

இணையத்தளம் ஊடாக தொலைபேசி வசதிகளை வழங்கி வரும் ஸ்கைப் சேவை உலக முழுவதும் தடைப்பட்டுள்ளது. ஸ்கைப் சேவை உலக முழுவதும் தடைப்-பட்டுள்ளதால் உலகெங்கிலும் உள்ள பல கோடி பேர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பல வாடிக்கையாளர்களும் தங்களது தொடர்பில் இருப்பவர்களிடம் தகவல் பரிமாற முடியாமல் தவித்து வருகின்றனர்.

இதனிடையே அந்த நிறுவனம் வீடியோ சேவை மட்டுமே தடைபட்டுள்ளதாகவும் எஞ்சிய சேவைகள் பயன்பாட்டில் உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

## கணனி மாணவர்களின் திறனை குறைக்கின்றது

கணணிகள் பாடசாலை மாணவர்களின் திறமை வெளிப்பாட்டை மேம்படுத்தவில்லை என ஆய்வொன்றில் கண்டயறியப்பட்டுள்ளது. அடிக்கடி கணணிகளை பயன்படுத்துக்கின்றமை பாடசாலை மாணவர்களின் குறைந்த திறமை வெளிப்பாட்டிற்கே உதவி புரிவதாக பொருளதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஆய்வு ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் பாடசாலைகளில் தொழில்நுட்பங்களின் விரிவாக்கம் மிகவும் தவறான நம்பிக்கைகளை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதாக ஸ்தாபனத்தின் கல்வி தொடர்பான பணிப்பாளர் அன்ரயஸ் ஸ்லைக்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# HTML தமிழில்....

இப்பதிவில் ஒரு HTML ஆவணத்தின் முழு கட்டமைப்பு எப்படி இருக்கும் என்பதைப் பார்க்க இருக்கிறோம். ஒவ்வொரு HTML ஆவணமும் < என்னும் குறி ஒட்டுடன் தொடங்க வேண்டும். இந்தக் குறி ஒட்டு, இதன் பின்னர் வருவது HTML ஆவணம் என்பதை தெரிவிக்கிறது. ஒரு HTML ஆவணம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

1. தலைப்பகுதி (Head Section)
2. உடல் பகுதி (Body Section)




## கட்டமைப்பு (STRUCTURE)

1. தலைப்பகுதி

தலைப்பகுதி ஆவணத்தின் தலைப்பைக் குறிப்பதற்குப் பயன்படுகிறது. இது < என்னும் குறி ஒட்டுடன் தொடங்குகிறது. இதில் > என்னும் முடிவுக் குறி ஒட்டுடன் முடிவடைகிறது. தலைப்பகுதியை முடிக்க முடிவுக் குறிஒட்டைப் (Tag) பயன்படுத்த வேண்டும்.

2. உடல் பகுதி


உடல் பகுதியில் < என்னும் குறி ஒட்டைத் தொடர்ந்து ஆவணத்தின் உரைப் பகுதி இருக்கும். இது > என்னும் முடிவுக் குறிஒட்டுடன் முடிவடைகிறது. ஆவணத்தின் உடல் பகுதி பல HTML குறி ஒட்டுக்களைக் கொண்டிருக்கும். சில குறி ஒட்டுகள் உரையின் வரிகளை வடிவூட்டல் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. சில குறிஒட்டுகள் (Tags) படங்கள், அட்டவணைகள், மற்றும் படிவங்களைச் சேர்ப்பதற்கும், இணைப்புகளை உருவாக்குவதற்கும் பயன்படுகின்றன.

ஆவணத்தின் இறுதியிலுள்ள > என்னும் முடிவுக் குறி ஒட்டு HTML ஆவணம் முடிவடைகிறது என்பதைக் குறிக்கிறது.

ஒரு HTML ஆவணத்தின் அடிப்படை கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்.

```
<HTML>

<HEAD>
<TITLE>....</TITLE>
</HEAD>
<BODY>
</BODY>
</HTML>
```




இந்த HTML ஆவணத்தை இரண்டு பகுதிகளாப் பிரிக்கலாம். ஒன்று Header Section, இரண்டு Body Section.. இவற்றிற்கான விளக்கங்கள் மேலே குறிப்பிட்டுள்ளேன்.

இனி HTMLல் உள்ள ஒவ்வொரு உறுப்புகளைப் பற்றியும், அதன் முக்கியத்துவங்களைப் பற்றியும், அது எதற்காக பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பற்றியும் காண்போம்.

**நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இயத்தில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகளின் பழம்பொருண்மைகள்




**ப**ழமொழிகள் பழைமை வாய்ந்த மொழிகள் தொன்றுதொட்டு வழங்கிவரும் இயல்புடையன. பழுத்த(வர்) மொழி- வயது, பட்டறிவு அல்லது அனுபவத்தில் முதிர்ந்த பழுத்த மக்களின் உள்ளுணர்வின் வெளிப்பாடாக விளங்கும் மொழிகள் என்ற கருத்தும் நிலவுகிறது. பழம்மொழி - பழங்கள் பொதுவாக இலகுவாக உண்ணத்தக்கன: இலகுவில் உடலில் கலப்பன: உண்ணும்போது இனிப்பன. அவற்றைப் போல, பழமொழிகள் வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் வகையில் மனிதர்களின் உணர்வில் கலந்து மகிழ்விப்பன அறிவுறுத்துவன. எனவே பழமொழிகளைப் பழைமை மொழி, பழம்மொழி, பழுத்த(வர்) மொழி என விரித்துப் பொருள் கொள்ளலாம்.

### பழமொழிகளின் சிறப்பியல்புகள்

பழமொழிகள் சூத்திரம் போன்று, சுருக்கம், தெளிவு, திட்பநுட்பம் செறிந்தவை. அவற்றைச் சொன்னால், கேட்டால், எண்ணினால் இன்பம் விளைந்து, அறிவுறுத்தும் போக்கில் அமைவன.

நூலுக்கு இலக்கணிகளால் உரைக்கப்படும், சுருங்கச்சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்களுக்கு இனிமை, நன்மொழி புணர்தல் ஓசையுடைமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தாக்குதல் எனும் பத்தழகுகள் பொருந்தி வரும் பான்மையின. அதைப்போல நூலில் விலக்கத்தக்கனவாக இலக்கணிகள் கூறும் குன்றக்கூறல் முதலிய குற்றங்கள் நீங்கி அமையும் இயல்புடையன.

பழமொழிகள் வாழ்வியலின் முதிர்ந்த வெளிப்பாடாக, வாழ்வின் பல கோணங்களையும் விளக்கும் ஓவியங்களாகத் திகழ்கின்றன. அவற்றை வாழ்க்கைச் சூத்திரங்கள் என வருணிக்கலாம்.

நாட்டுப்புற மக்கள், வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குபவர்கள். பழமொழிகள் அவர்களின் பட்டறிவின் வெளிப்பாடுகள் அனுபவ முதிர்ச்சியின் அடையாளங்கள் அறிவு வளத்தின் ஊற்றுக் கண்கள் சிந்தனை வளத்தின் செப்பேடுகள் மொழி வளத்தின் முத்துச் சிதறல்கள் வாழ்வியல் வளத்தின் வகைப்பாடுகள்!

### பழமொழிகளின் தற்கால, முற்காலப் பொருண்மைகள்

1. அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமட்டான்

இப்பழமொழியைச் சொல்லிக்-கொண்டே தவறு செய்யும் தம் குழந்தைகளை அடித்து நொறுக்கும் அம்மாக்களைப் பல இடங்களிலும் காணலாம். இப்பழமொழியைத் தவறாக உணர்ந்து கொண்டதன் விளைவு. இன்று தமிழ் மக்களின் பண்பாட்டில் ஒரு சீரழிவு ஏற்பட்டுள்ளது. குழந்தைகளை அறிவுறுத்தி, அவர்களை நெறிபடுத்த முயலாமல் இன்று அடிக்கும் அம்மாக்கள்! அலறும் குழந்தைகள்! அவலம்! இங்கு "அடி" என்பது இறைவனுடைய திருவடியைக் குறிக்கிறது. திருவடி அருள் உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார் எனும் பொருண்மை இதன் முற்கால பொருண்மை எனலாம். அல்லது பெரியவர்களின் வாழ்த்தை வேண்டி அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்குவதை இது குறிக்கிறது எனலாம்.


*தொடரும்.. .. ..*

# இப்படியும் நடக்கலாம்

## காப்பீட்டு பணத்திற்காக கொலை

அமெரிக்க நாட்டில் மனைவியின் காப்பீட்டு பணத்தை பெறுவதற்காக அவரை மலை உச்சியிலிருந்து தள்ளிவிட்டு கொன்ற கணவனை பற்றி வெளியான அடுத்தடுத்த தகவல்கள் காவல்-துறையை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

## அவமானத்தில் கணவன்




கணவனின் கள்ளத்தொடர்பை நூதன முறையில் விளம்பரப்படுத்திய மனைவியின் செயல் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இங்கிலாந்தின் ஷெப்பீல்டு நகரைச் சேர்ந்தவர் லிசா. இவர் தனது கணவன் பால் வேறு ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்திருப்பதை சமீபத்தில் தெரிந்துகொண்டார்.

இதனால் அவரை அவமானப்படுத்தும் நோக்கில் பால் அலுவலகம் செல்லும் வழியில் இருக்கும் 15 அடி உயர விளம்பரப்பலகையில் கணவன் துரோகம் செய்ததையும், இனி வாழ விரும்பவில்லை என்பதையும் பெயருடன் குறிப்பிட்டு அறிவித்துள்ளார்.

- சிறிதாக இருப்பதாக கூறி கணவர் வாங்கி தந்த விலையுயர்ந்த ஆடி காரை அடித்து நொறுக்கிய பெண்ணின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
- அமெரிக்காவின் Oklahoma மாகாணத்தில் இடது கை பழக்கம் கொண்ட மாணவனை சாத்தான் என அழைத்து ஆசிரியர் ஒருவர் துன்புறுத்திய சம்பவம் குறித்து அனைவரும் தம் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

## பியர் கொண்டாட்டம்



ஜேர்மனியில் கோலாகலமாக துவங்கியுள்ள பியர் திருவிழாவில் லட்சக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் உள்ளிட்ட பியர் பிரியர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பியர் திருவிழாவில் 65 லட்சம் லிட்டர் பியர் விற்றுள்ளதாக தெரிவித்துள்ள விழா ஏற்பாட்டாளர்கள்,

இந்த ஆண்டு அதை விட அதிகமாக விற்பனையாகும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பியர் போலவே இந்த விழாவின் சிறப்பு அம்சமாக கருதப்படுவது டீசயவாநனெட எனப்படும் கோழி உணவாகும்,

இந்த ஆண்டும் 128 உணவு கூடங்களை திறந்துள்ளதாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கன்னத்தில் அறைந்தமைக்கு 50,000 ரியால் சட்டாடு

சவுதியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் செவிலியர் ஒருவர் சிகிச்சைக்கு வந்த நபர் ஒருவர், பலபேர் முன்னிலையில் எனது கன்னத்தில் அறைந்துவிட்டார் என்றும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் காவல்துறையில் புகார் அளித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, பெண்ணை காயப்படுத்திய அந்நபர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அடித்தமை குறித்து தன் மீது குற்றம் நிருபணமாகிவிட்டால் தனக்கு இரண்டாண்டு சிறை கிடைக்கும் என்பதை உணர்ந்த அந்நபர், அப்பெண்ணுக்கு பணம் கொடுத்து சமரசம் செய்து கொள்வதாக காவல்துறையிடம் கூறியுள்ளார்.

இதற்கு காயப்பட்ட அந்தப் பெண்ணும் ஒப்புக்கொண்டதால் அடித்தவரிடம் இருந்து 50 ஆயிரம் ரியால்களை இழப்பீடாக பெற்றுகொண்டு வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்வதாக அவர் நீதிமன்றத்தில் மனு செய்துள்ளார்.

# ஒரு கோயில் ஒரு மோதகம் ஒரு ராப்பிச்சை

சஞ்சயன் செல்வமாணிக்கம்

**மோதகம்** சாப்பிட சஞ்சயன் செல்வமாணிக்கம் போல குளித்து முழுகி, வேட்டி கட்டி, அங்கவஸ்திரம் தரித்துக் கோயிலுக்குப் போகத் தேவையில்லை.

அவுஸ்திரேலியா நோர்வேயை விட நல்ல நாடு என்று அறிக்கை விட்டிருக்கிறார்.

அவரின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கைக்கு Sanjayan Selvamanickam ஆகிய நான் வழங்கும் பதில் அறிக்கை இது.

நேற்றையுடன் பிள்ளையார் கதை முடிந்துவிட்டது என்று பயங்கர பீலிங்ஸ்ல இருக்கிறேன். வேணா.... நான் பாவம் அண்ணே.

அது சரி.. நான் குளித்து முழுகி, வேட்டி கட்டி, அங்கவஸ்திரம் தரித்துக் கோயிலுக்கு கோயிலுக்கு செல்கிறேன் என்றெல்லாம் நீங்களே முடிவு எடுக்கிறீங்க... நாங்கெல்லாம் அதிகமான நேரங்களில் குளித்து, வேட்டி கட்டி, அங்கவஸ்திரம் தரித்துக் கோயிலுக்கு செல்வதில்லை.

நான் கோயிலுக்கு வருகிறேன் என்று பிள்ளையார் அறிந்தால் அவரே தனக்கு படு பயங்கரமாக அபிஷேகத்தை ஒழுங்கு செய்து கொள்கிறார். அந்த அபிஷேகத்தின் போது அவருக்கு நீராட்டம், பாலாபிஷேகம், தேன்அபிஷேகம், ப(ழ)ல அபிஷேகங்கள் நடக்கும். அப்புறம் செம செக்சியாக வேட்டி, அங்கவஸ்திரம் அணிந்து அங்கு வரும் பல பக்தகேடிகளுக்கு அருள்வழங்குவது போல சீன் போடுவார் அவர்.

நம்மூரில் இரவு நேரத்தில் தான் (அதாவது சுவாமிக்கு செய்யும் பூஜை). நான் சாப்பிட மட்டுமே அங்கு செல்வேன். அதாவது பூஜை முடிந்து 15 நிமிடத்தின்பின். அப்போதுதான் சாப்பாடு தயாராக இருக்கும். ஆனால் பக்தர்கள் சாப்பிடத் தொடங்கியிருக்கமாட்டார்கள்.

இப்போதெல்லாம் எங்கே அந்த ராப்பிச்சை என்று பக்தர்கள் கேட்குமளவுக்கு நான் பிரபல்யம் அடைந்திருக்கிறேன். குழந்தைகள் என்னை மோதக மாம்ஸ் என்று அழைக்கிறார்கள். விடுமுறையின் போது வாங்கிவந்த காஸ்ட்லியான புடவைகளை கட்டிவரும் ஆன்டிமார் பாவம் இந்த அழகான இளைஞன் என்று கடைக்கண்ணால் பார்க்கிறார்கள் (பிள்ளையார் குமட்டுக்குள் சிரிக்கிறார்). கோயில் ஐயா இராப்பிச்சைக்காக தனியே ஸ்பெசலாக மோதகம் தொடக்கம் பஞ்சாமிர்தம்வரை எடுத்து வைக்கிறார். சிலவேளைகளில் வீட்டுக்கு கொண்டுசெல்ல கட்டியும் தருகிறார். சாப்பிட்டு முடிந்ததும் பால் டீ வேறு தருகிறார்கள்.

இந்த பால் டீ போடுபவர்பற்றி ஒருசுவையான கதையிருக்கிறது.

டீ போடுபவர் Mr & Mrs சிவபெருமானின் இளைய மகனாகிய முருகனின் பிரதரில் படுபயங்கரமான பக்தர். இடுப்புக்கு மேல் ஒரு சிறு துணியும் இன்றி படு செக்சியாக நிற்பார். அவரளவுக்கு என்னால் மேலாடை இன்றி, அதுவும் பல ஆன்டிமார் முன்னிலையில் எனது one packஐ காட்டியபடி நிற்பது கூச்சமாய் இருக்கிறது. அவருக்கும் one bag மன்னிக்கவும் one packதான் ஆனாலும் மனிதர் நெஞ்சை திறந்துகாட்டிக்கொண்டு, செம செக்சியாக நிற்பார்.

இவருக்கு முன்று முறை heart attack வந்திருக்கிறது. பல பல தாக்குதல்களை சமாளித்தவர் என்பதால் நான் அவரை கேர்னல் என்று அழைக்கத் தொடங்கியிருக்கிறேன். கோர்னல் எவருக்கும் பயப்படமாட்டார் திருமதி கேர்னலைத்தவிர்த்து. கேர்னலும் நானும் படு பயங்கரமான நண்பர்ளாகிவிட்டோம். நேற்று ஒரு பெட்டி நிறைய மோதகத்தை எனக்காக ஒளித்து வைத்திருந்தார் என்றால் பாருங்களேன்.


சரி மீண்டும் எங்கள் கதைக்கு வருவோம்..

ஆரம்பத்தல் மோதகம் மட்டுமே கிடைத்தது. இப்போது நான் வீடுசெல்லும் போது வடை, தோசை, சம்பல், கடலை, சுண்டல், சாதம், பொங்கல் என்று என்னால் தூக்கமுடியாத அளவுக்கு ராப்பிச்சை போடுகிறார்கள். சாமி சத்தியமாக என் வீட்டில் சமைத்து ஒரு மாதமாகிவிட்டது. இவ்வளவு வசதி உங்கள் ஊரில் இருக்கிறதா? இரண்டு நாட்களுக்கு முன் செய்து, காய்ந்து கருவாடாய்ப்போன மோதகத்தை பல டாலர்கள் கொடுத்து கடையில் வாங்கிவிட்டு, இலங்கையில் மனிதவுரிமை மீறல் நடைபெறவே இல்லை என்று கூறும் மேர்வின் டீ சில்வாவைப் போல அவுஸ்திரேலியா நோர்வேயை விட நல்ல நாடு என்று அறிக்கை விடுகிறீர்கள்.

அண்ணை! நீங்கள் அறிக்கைவிடப்படாது. அப்புறம் என்னவாகும் என்று தெரியும்தானே (அட .... அடுத்த பதிவுக்கு தலைப்பு கிடைத்துவிட்டது)

பி.கு: இதை எழுதும்போது 3 மோதகங்கள் சாப்பிட்டேன். இன்னும் 7 - 8 சேமிப்பில் இருக்கிறது.

எப்பூடீ?



இன்றைய நாளும் நல்லதே ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுகளின் நீதி

அனைத்துலக விசாரணை எனப்படுவது ஈழத்தமிழர்களின் ஒரு கூட்டுக் கனவு. தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அப்படி ஒரு விசாரணையைத்தான் கோரி நிற்கிறார்கள். தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அப்படி ஒரு விசாரணை தான் கோரப்பட்டிருக்கிறது. ஆனால் அதே சமயம் கூட்டமைப்பு ஆட்சிமாற்றத்தின் பங்காளியாகக் காணப்படுகிறது. எனவே மாற்றத்தைப் பாதுகாக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு கூட்டமைப்புக்கு உண்டு. மாற்றத்தைப் பாதுகாப்பது என்றால் அனைத்துலக பொறிமுறையை ஆதரிக்க முடியாது. ஏனெனில் மாற்றத்தின் பிதாக்களான மேற்கு நாடுகளும், இந்தியாவும் தூய அனைத்துலக பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. தென்னிலங்கையில் உள்ள சிங்களத் தலைவர்கள்மட்டும்தான்தூயஅனைத்துலக பொறிமுறையை எதிர்க்கிறார்கள் என்பதல்ல.

அமெரிக்க இந்திய பங்காளிகளும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படிப் பார்த்தால், கூட்டமைப்பானது மாற்றத்தின் பங்காளியாக இருந்து கொண்டு அனைத்துலக விசாரணையை ஆதரிக்க முடியாது. கூட்டமைப்பில் உள்ள குறிப்பிடத்தக்களவு முக்கியஸ்தர்கள் அனைத்துலக விசாரணைக்கே ஆதரவாகக் காணப்படுகிறார்கள். ஆனால் அக்கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டின்படி அது மாற்றத்தின் பங்காளி என்பதால் பன்னாட்டு விசாரணையை அக்கட்சியானது உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி ஏற்றுக் கொண்டாலும் அது ஓர் அகமுரண்பாடே.

தமிழ் வாக்காளர்கள் இந்த அக-முரண்பாட்டை விளங்கி வாக்களித்-திருப்பார்களா? இல்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் மக்கள் முன்னணியின் அனைத்துலக விசாரணை-க்கான கையெழுத்து வேட்டையில் ஒன்றரை இலட்சத்துக்கும் மேலானவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். கூட்டமைப்-புக்குச் சார்பான பலரும் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் சிலரும் இக்கையெழுத்து வேட்டையில் பங்கு பற்றியிருக்கிறார்கள். சில வாரங்களுக்கு முன் மக்கள் முன்னணியைத் தேர்தலில் தோற்கடித்த அதே மக்களில் ஒன்றரை இலட்சத்திற்கும் குறையாதவர்கள் இக்கையெழுத்துப் போராட்டத்தில் இணைந்திருக்கிறார்கள். இந்த முரண்பாட்டை எப்படி விளங்கிக் கொள்வது?. **நாடாளுமன்றத்துக்குப் போவதற்குக் கூட்டமைப்பு. தெருவில் இறங்கிப் போராடுவதற்கு மக்கள் முன்னணி என்று மக்கள் நம்புகிறார்களா?**

அதே சமயம், நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் இப்படி ஒரு கையெழுத்துப் போராட்டத்தை நடாத்தியது. அதிலும் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பங்குபற்றியிருக்கிறார்கள். தவிர, வடமாகாண சபையும் தமிழக அரசும் அனைத்துலக விசாரணைக்கு ஆதரவாக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. இப்படிப் பார்த்தால் பன்னாட்டு விசாரணைக்கான கோரிக்கை எனப்படுவது தனிய ஈழத்தமிழர்களின் கூட்டுக் கனவு மட்டுமல்ல. பெரும் தமிழ் பரப்பில் அதற்கு பலமான ஓர் ஆதரவுத்தளம் உண்டு.

ஆனால் சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்களில் பெரும்பாலானவர்கள் அனைத்துலக விசாரணையை ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாகக் கடும்-போக்காளர்கள் எந்த ஒரு விசாரணையையுமே ஏற்றுக் கொள்ள வில்லை.

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் மற்றும் இந்தியாவைப் பொறுத்தவரை அவர்களும் தூய அனைத்துலக விசாரணைக்கு ஆதரவாக இல்லை. மேற்படி நாடுகளின் எந்த ஓர் உத்தியோகபூர்வ அறிக்கையிலும் அப்படி ஒரு அனைத்துலக விசாரணைக்கான வாக்குறுதி எதுவும் இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. உலகப் பொதுமன்றமான ஐ.நாவின் உத்தியோகபூர்வ ஆவணங்களிலும் அப்படிப்பட்ட வாக்குறுதிகள் கிடையாது.

எனவே, மேற்கண்ட அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ஈழத்தமிழர்களின் கூட்டுக் கனவுக்கு எதிரான ஒரு பன்னாட்டு யதார்த்தமே தற்பொழுது காணப்படுகிறது. கடந்த வாரம் வெளியிடப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கையும் அதைத்தான் பிரதிபலிக்கிறது.

முதலாவதாக, அந்த அறிக்கையானது இலங்கைத் தீவில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தைப் பாதுகாக்க முற்படுகிறது.

இரண்டாவதாக அது தமிழ் மக்கள் அனைத்துலக நீதியின் மீது நம்பிக்கை இழந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

மூன்றாவதாக அது சிங்களக் கடும் கோட்பாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கி விடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் அந்த அறிக்கை பின்வரும் சாதகமான அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

01. இலங்கை அரசிற்கு எதிராகக் குறிப்பாக அதன் பாதுகாப்புத்துறை மற்றும் நீதி பரிபாலன துறை என்பவற்றுக்கு எதிராகப் பாரதூரமான குற்றச்சாட்டுக்களையும் நம்பிக்கை-யீனங்களையும் வெளிப்படுத்தும் முதலாவது உத்தியோகபூர்வ அனைத்துலக ஆவணமாக அது காணப்படுகிறது.

02. அதை ஓர் அடிச்சட்டமாக வைத்துக்கொண்டு ஈழத்தமிழர்கள் தமது நீதிக்கான பயணத்தைத் தொடரக் கூடிய வாய்ப்பான வெளிகள் பலவற்றை அந்த அறிக்கை திறந்துவிட்டுள்ளது.

03. கலப்புப் பொறிமுறை ஒன்றை முன்வைப்பதன் மூலம் அது ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினையானது அனைத்துலக மயநீக்கம் செய்யப்படுவதற்கான வாய்ப்புக்-களை குறைந்தபட்சமாகவேனும் தடுக்கிறது.

**இனிப்பாதகமானஅம்சங்களைப்பார்க்கலாம்.**

01. நடந்து முடிந்தது ஓர் இனப்படுகொலையே என்பதை அந்த ஆவணம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

02. போர்க்குற்றம் சாட்டப்படுவோரின் பெயர்களோ, பதவி நிலைகளோ, பொறுப்புக்-களோசுட்டிப்பாகக் கூறப்படவில்லை.

03. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுவது போல அது ஒரு மனிதஉரிமை மீறல் விசாரணை அறிக்கையாகவே காணப்படுகிறது. குற்றவியல் விசாரணை அறிக்கையாக அல்ல. ஆனால் இது தொடர்பில் ஐ.நா. பேச்சாளரான ரவீனா சம்தாஸினியை தந்தி, தொலைக்காட்சி பேட்டி கண்டபோதுஅவர்

'அடுத்த கட்டமாக குற்றவியல் விசாரணைகள் நடத்தப்பட வேண்டியிருக்கிறது. அதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்' என்று பதில் கூறினார்.

04. கலப்புப் பொறிமுறையின்படி உள்நாட்டு நீதிபரிபாலன அமைப்பும் இணைந்து செயற்படும் பொழுது குற்றம் சாட்டப்பட்ட தரப்பே நீதி வழங்கும் தரப்பின் ஒரு பகுதியாக காணப்படும்.

05. இலங்கை அரசுக் கட்டமைப்பின் பாதுகாப்புத் துறை, மற்றும் நீதி பரிபாலனதுறை மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் இவ் அறிக்கையானது அதே கட்டமைப்புக்களுடன் இணைந்து ஒரு கலவையான விசாரணைப் பொறிமுறையை உருவாக்கப்போவதாகக் கூறுவது ஒரு அக முரண்பாடாகும்.

06. ஆட்சி மாற்றத்தை வெளிப்படையாக ஆதரிக்கும் இவ்அறிக்கையானது அரசுத் தலைவரை பாராட்டும் அதே சமயம் குற்றச் செயல்களுக்குப் பொறுப்பான கட்டமைப்புக்கள் தொடர்ந்தும் நிலவுவதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால், மேற்படிக் கட்டமைப்புக்கள் வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. அவை இலங்கை அரசுக் கட்டமைப்பின் பிரிக்கப்படவியலாத பகுதிகளே. அதாவது சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பை பாதுகாக்கும் கவசங்களே அவை. எனவே மாற்றப்பட வேண்டியது அந்த அரசுக் கட்டமைப்புத் தான். ஆனால் இந்த அறிக்கையானது அந்த மூலகாரணத்தில் நேரடியாகவும், துலக்கமாகவும் கை வைக்கவில்லை.

இவையாவும் தமிழ் நோக்கு நிலையில் இருந்து முதன்நிலை வாசிப்பின் போது துலக்கமாகத் தெரிந்த சாதகமான மற்றும் பாதகமான அம்சங்கள். சட்டக் கண்கொண்டு நோக்கும் ஒருவருக்கு மேலும் நுணுக்கமான விடையப் பரப்புக்கள் தெரியவரக்கூடும்.

இந்நிலையில், தமிழ் மக்கள் இந்த இந்த ஆவணத்தை எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள்?

**நீதிக்கான தமது போராட்டத்தை விட்டுக் கொடுப்பின்றி முன்னெடுக்க வேண்டும். அத்துடன் விசாரணைப் பொறிமுறைக்குள் பங்கேற்று அதை அம்பலப்படுத்தவும் வேண்டும்**

தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இப்படி ஒரு அறிக்கைதான் வரப் போகிறது. ஐ.நா எனப்படுவது ஓர் அரசுகளின் அரங்கம். அரசுடைய தரப்புக்கள் கூட்டுச் சேர்ந்து அரசற்ற தரப்புக்களின் மீது எப்பொழுதும் தீர்வுகளைத் திணிக்கின்றன. அல்லது தீர்மானங்களை அறிக்கைகளை முன்வைக்கின்றன. அரசற்ற தரப்புக்கள் இக் குரூரமான யதார்த்தத்தை எதிர்கொண்டு எவ்வாறு மீட்சி பெறுகின்றன என்பதை தமிழர்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஏறக்குறைய 28 ஆண்டுகளுக்கு முன் இந்திய உடன்படிக்கை செய்யப்பட்ட போதும் இப்படி ஒரு நிலை வந்தது. அப்பொழுது புலிகள் இயக்கம் அந்த உடன்படிக்கையை கடுமையாக எதிர்த்தது. அதற்கு எதிராக ஒரு கட்டப் போரையும் நிகழ்த்தியது. ஆனால் மாகாணசபைகள் ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கும் மேலான ஒரு யதார்த்தமாக உருவாகிவிட்டன. அந்த யதார்த்தத்தின் பிரகாரம் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் இப்பொழுது வடமாகாணசபை கோறையானது என்று கூறுகிறார். அது மட்டுமல்ல, இனப்படுகொலை தொடர்பாகவும், அனைத்துலக விசாரணைகள் தொடர்பாகவும் கட்சித் தலைமைக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தவல்ல தீர்மானங்களையும் நிறைவேற்றிவருகிறார்.

இதை இப்படி எழுதுவதன் அர்த்தம் இக்கட்டுரையானது மாகாணசபையை ஏற்றுக் கொள்கிறது என்பதல்ல. பதிலாக அரசுடைய தரப்புக்கள் அரசற்ற தரப்புக்களின் மீது தீர்வுகளையும் விசாரணைப் பொறிமுறை களையும் திணிக்கும் போது அதை அரசற்ற தரப்பாகிய தமிழர்கள் எப்படி இறந்த காலத்தில் இருந்து பெற்ற பாடங்களின் அடிப்படையில் எதிர்கொள்ள வேண்டும் என்பதை அழுத்திக் கூறுவதற்காகவே இங்கு இந்த உதாரணம் சுட்டிக்காட்டப்படுகிறது.

வரலாறு மறுபடியும் ஒரு சுத்து சுத்திவிட்டு விட்ட இடத்திலேயே வந்து நிற்கிறது. தமிழர்கள் ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் ஐ.நாவின் அறிக்கை எனப்படுவது ஓர் அனைத்துலக யதார்த்தம். இப்பொழுது தமிழர்கள் முடிவெடுக்க வேண்டும். ஒரு கலப்பு விசாரணைப் பொறிமுறையை புறக்கணித்துவிட்டு வெளியில் இருந்து பகிஸ்கரிப்பதா? அல்லது அதில் ஈடுபட்டு அதன் போதாமைகளைஅம்பலப்படுத்துவதா?

ராஜதந்திரம் எனப்படுவதற்கு நவீன அரசியலில் பங்கேற்றல் (engagement) என்று ஓர் விளக்கம் உண்டு. கலப்பு விசாரணைப் பொறிமுறையில் பங்கேற்பதன் மூலம் தமிழர்கள் அதன் போதாமைகளை அம்பலப்படுத்தலாம்.

இப்போதிருக்கும் அரசாங்கத்தின் மீது ஐ.நா அறிக்கையானது நம்பிக்கைகளைத் தெரிவித்துள்ளது. ஆனால் ஐ.நாவால் பாரதூரமாகக் குற்றம் சாட்டப்படும் பாதுகாப்புக் கட்டமைப்பின் பிரதான தளபதியாக இருந்த ஒருவருக்கு பீல்ட் மார்ஷல் விருது வழங்கியது இந்த அரசாங்கம்தான். இப்படியாக யுத்த வெற்றி நாயகர்களைக் கௌரவிக்கும் ஓர் அரசாங்கமானது அவர்களை விசாரிக்கும் ஒரு கலப்புப் விசாரணைப் பொறிமுறைக்கு எவ்வளவு தூரம் விசுவாசமாக ஒத்துழைக்கும்?.

பயங்கரவாத தடைச்சட்டத்தை தன்னுள் கொண்டிருக்கும் ஒரு நீதி பரிபாலன கட்டமைப்பானது எவ்வளவு தூரத்திற்கு அனைத்துலகத்தரத்துக்குவிரிந்துகொடுக்கும்.?

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையிலும், கலப்பு விசாரணைப் பொறிமுறையிலும் இருக்கக் கூடிய அடிப்படையான பலவீனம் என்னவெனில் இவ்விரண்டிலும் குற்றம் சாட்டப்பட்ட தரப்பே நீதி வழங்கும் தரப்பாகவும் இருக்கப் போகின்றது என்பதுதான். சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பு அதன் வெற்றி நாயகர்களை கைவிடுமா? காட்டிக்கொடுக்குமா?

இக்கேள்விகளுக்கான விடைகளே கலப்பு விசாரணைப் பொறிமுறையின் போதாமைகளை வெளிப்படுத்தும். எனவே, தமிழ்மக்கள்இக்கலப்புவிசாரணைப் பொறிமுறையை எதிர்கொள்வதற்கு அல்லது அதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால் அதில் பங்கேற்பதன் மூலம் அதை அம்பலப்படுத்துவதற்கு உரிய சுய பொறிமுறைகைளையும், நிபுணத்துவ அறிவையும் பெருக்கிக்கொள்ளவேண்டும். வடமாகாண சபையும் தமிழக அரசும் அனைத்துலக விசாரணைக்கு ஆதரவாக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன கலப்பு விசாரணைப் பொறிமுறை ஒன்றை எதிர்கொள்வதற்குத் தேவையான நிபுணத்துவ அறிவை திரட்ட முற்படும் தரப்புக்கள் வடமாகாணசபையிடமும், தமிழக அரசிடமும் உதவி கேட்கலாம். தாயகம், தமிழகம், புலம்பெயர்ந்த சமூகம் ஆகிய மூன்று பரப்புக்களும் கூட்டாகச் சிந்தித்து ஒரு பொது வேலைத்திட்டத்தை வகுத்து கலப்பு விசாணைப் பொறிமுறையை எதிர்கொள்ளலாம்.

எனவே போர்க்குற்ற விசாரணை தொடர்பில் தமிழர்கள் இரண்டு தடங்களில் செயற்பட வேண்டியிருக்கிறது. இந்த இருதடக் கொள்கையின்படி ஒரு தடத்தில் அனைத்துலக விசாரணை ஒன்றைக் கோரும் போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். இதில் ஆகக் கூடியபட்சம் படைப்புத்திறனோடு சிந்தித்து புதுமையான போராட்டங்களை முன்னெடுப்பதன்மூலம் அனைத்துலக மக்கள் சமூகத்தின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளமுடியும்.

ஐ.நா. அறிக்கையில் ஒரு அக முரண்பாடு உண்டு. குற்றம் சாட்டப்படும் உள்நாட்டுக் கட்டமைப்புக்களோடு இணைந்து ஒரு கலப்புப் பொறிமுறையை உருவாக்குவதன் மூலம் நீதியை நிலைநாட்டலாம் என்று நம்புவதே அது. இது அனைத்துலக மக்கள் சமூகத்தின் அபிப்பிராயத்திற்கும், அனைத்துலக அரசியலுக்கும் இடையிலான முரண்பாட்டையே பிரதிபலிக்கின்றது. ஈழத் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு-விட்டது என்பது ஓர் அனைத்துலக அபிப்பிராயமாக உருவாகி வருகிறது. ஆனால், அந்த அநீதியை விசாரிப்பதற்கான ஒரு பொறிமுறையைக் குறித்து முடிவெடுக்கும்பொழுது அனைத்துலக அரசியல் நலன்களே முன்நிற்கின்றன. அனைத்துலக நீதி எனப்படுவது அனைத்துலகஅரசியல்தான்.

எனவே, நீதிக்கான தமது போராட்டத்தை ஈழத்தமிழர்கள் விட்டுக்கொடுப்பின்றி முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் அனைத்துலக அபிப்பிராயத்தை அரசுகளின் மீது அழுத்தம் கொடுக்கும் ஒரு சக்தியாக மாற்றவேண்டும். இது ஒரு தடம்.

அடுத்த தடம் அனைத்துலக அரசியலின் விளைவாகக் கிடைத்திருக்கும் கலப்பு விசாரணைப் பொறிமுறைக்குள் பங்கேற்று அதைவெற்றிகரமாக அம்பலப்படுத்துவது. இப்பொழுது அரசுடைய தரப்புக்கள் தமது நீதியைஎங்கிருந்துதொடங்கக்கூடும்என்பது துலக்கமாகத் தெரிகிறது. அதே சமயம் அரசற்ற தரப்பாகிய ஈழத்தமிழர்கள் நீதிக்கான தமது போராட்டத்தை எப்படி முன்னெடுக்கப்போகிறார்கள்?

தமிழ் ராஜதந்திரமானது அதன் கெட்டித்தனத்தையும், தீர்க்கதரிசனத்-தையும் நிரூபிப்பதற்கு மேலும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

(( நிலாந்தன் ))

www.nilanthan.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அவர்கள் ஆமாம் எனப் பதிலளித்தார்கள். சந்தோஷமான செய்தி உங்களுக்குக் காத்திருக்கின்றது எனக் கூறிவிட்டு:

அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உங்கள் மீது வறுமை பற்றி நான் அஞ்சவில்லை. அதற்கு மாற்றமாக உங்களுக்கு முன்பிருந்தவர்கள் மீது உலகம் தாராளமாகத் தரப்பட்டது போன்று உங்களுக்கும் தாராளமாக்கப்பட்டு, அதனால் நீங்கள் போட்டிபோட்டுக் கொண்டு அவர்களும் அழிந்தது போன்று நீங்களும் அழிந்து விடுவது பற்றித்தான் அச்சப்படுகின்றேன் எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

மேற்படி நபி மொழியானது உலகைக் காரணமாகக் கொண்டு எழுகின்ற குழப்பங்கள் மனித சமூகத்தின் அழிவில் பாரிய பங்கு வகிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

இன்று உலகின் செல்வத்தின் பெரும் பகுதியை அரபு நாடுகளும், ஏனைய முஸ்லிம் நாடுகளும் கொண்டிருக்கின்றன. சகோதர நாடுகளாக தம்மைப் பற்றிக் கூறிக் கொண்டாலும் அவைகளுக்குள் போட்டி பொறாமையுடன் இருப்பதை மறுக்க முடியாது.

ஈராக் அரபு தேசங்களில் ஒரு தேசமாகும். அதனை அழிவின் விழிம்பிற்கு கொண்டு சென்றவர்கள் யார்? அரேபியர்கள்தானே! எகிப்து அரபு நாடாகும். அதன் அழிவுக்கும், வீழ்ச்சிக்கும் உள்நாட்டுக் கலவரங்களுக்கும் அரேபியர்களே காரணமாக இருக்கின்றனர்.

**குழப்பங்கள் நிகழ்ந்தே தீரும்**

குழப்பங்கள் நிகழ்ந்தே தீரும். அவை உலகில் ஏற்படுவதைத் தவிர்க்கவே முடியாது. அவை நிகழும்போது எவராலும் அவற்றை தடுத்து நிறத்தவும் முடியாது. அவை நிகழ்ந்தே முடியும் நிகழ்வுகளாகும்.

மதீனாவின் கோட்டைகளில் ஒரு கோட்டை மீது ஏறிய நபி (ஸல்) அவர்கள் நான் பார்ப்பவைகளை எல்லாம் நீங்கள் பார்க்கின்றீர்களா? எனக் கேட்டுவிட்டு: மழைத்துளிகள் போன்று (அடுக்கடுக்கான) குழப்பங்கள் உங்கள் வீடுகளின் மத்தியில் நெகிழ்வதை நான் பார்க்கின்றேன் எனக் கூறினார்கள். (புகாரி).

தொடரும் .. ..

**– எம்.ஜே.எம். றிஷ்வான் –**

## ஆண்களே தெரிந்து கொள்ளுங்கள்!!

அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள் மட்டுமே காதல் மலர்கிறது. காதல் என்று வந்துவிட்டாலே, உடனே காதலுக்கு கண் இல்லை என பலரும் சொல்வார்கள். ஆனால், காதலுக்கு கண் எவ்வளவு முக்கியம் என்பதை தெரிந்துகொள்ளுங்கள், கண்ணோடு கண் பார்த்தல் என்பதே காதலுக்கு நல்லது. ஆனால் இந்த பார்வையில் பெண்கள் சிலவற்றை விரும்புவார்கள்.



பெண்களின் பிற பாகங்களை ஆர்வமாகப் பார்ப்பது பெண்ணுக்கு கோபத்தை உண்டாக்கிவிடும். இயல்பாக பார்க்க வேண்டுமே தவிர, பார்வையிலேயே விழுங்கிவிடுவதைப் போல் ஆர்வம் காட்டக் கூடாது. பார்வை நம் மீது இல்லாத நேரங்களிலும் நாகரீகமான பார்வை மட்டுமே காட்ட வேண்டும். பார்வையில் அன்பு தெரிய வேண்டும். பேச ஆரம்பிக்கலாமா என்பது போல அனுமதி கேட்கும் பாவனையில் உங்களது பார்வை அமைய வேண்டும்.

முதலில் நீங்கள் விரும்புபவரைப் பார்க்கும் போது, அவர் இன்று அழகாக இருப்பதை பாராட்டுவது போல் உங்கள் பார்வை இருக்க வேண்டும். பெண் சாதாரண பார்வை மூலமாகவே ஆணை காதலில் விழச் செய்துவிட முடியும்.

ஆனால் ஆண் பெண்ணை காதலில் விழச் செய்வது கொஞ்சம் சிரமமான விடயம் மட்டுமல்லாமல் கொஞ்சம் கூடுதலாகவே உழைக்க வேண்டியிருக்கும் என்பதுதான் உண்மை.







*மனைவி: வேலைக்காரி குளிக்கிற போது எட்டிப் பார்த்தீங்களாமே!! உண்மையாகவா?*

கணவன்: இல்ல....

உன்னோட சோப்பை எடுத்துப் பாவிக்கிறாளா என செக் பண்ணிப் பார்த்தனான்

.... .... ...



***காவல்துறை அதிகாரி : என்னது... இருபது கான்ஸ்டபிள்கள் சேர்ந்து போய் வெறும் மூவாயிரம் ரூபா பெறுமானமுள்ள கள்ளச் சாராயத்தைத்தான் அழிக்க முடிஞ்சதா ஏன்...?***

**காவல்துறை சிப்பாய் : இருபதுபேரால், அதுக்கு மேலேயா சார் "குடிக்க" முடியும்...!**

## சிறிய இறைவாக்கினர்கள் வரலாறு




இஸ்ரயேலரின் வரலாற்றிலே மக்களை வழிநடத்திச் சென்ற தலைவர்கள் பலர் உண்டு. மறக்க முடியாத சிறந்த கதாப்பாத்திரங்களும் உண்டு. இவர்கள் அனைவரிலும் இதயத்தில் இடம் பிடித்து காலங்கள் கடந்தும் நினைவில் வாழும் கதாப்பாத்திரங்கள்தான் இறைவாக்கினர்கள் ஆகும். இறைவனின் குரலை, செய்தியை, அறிவுரைகளை காலத்தின் சூழலுக்கு ஏற்ப கடவுளிடமிருந்து பெற்று அரசர்களுக்கும் மக்களுக்கும் தனிநபர்களுக்கும் தந்தவர்கள் இந்த இறைவாக்கினர்கள் ஆகும். வாழ்க்கையை நம்மைச் சுற்றி நடப்பதை இறைவனின் பார்வையில் பார்ப்பதும் விழிப்புணர்வுடன் நடக்க வேண்டியதை எடுத்துரைப்பதும் இவர்களின் அரும்பணியாகும். தூய்மை, நீதி, நம்பிக்கை, உண்மையான இறைப்பற்று என்ற இவர்கள் தொட்ட துறைகள், பேசியதலைப்புகள் பல உண்டு.

கடுகு சிறுத்தாலும் காரம் சிறுக்காது என்னும் பழமொழிக் கேற்ப குறைவாகவே பேசியிருந்தாலும் சிறிய இறைவாக்கினர்களின் சிந்தனையும் செய்தியும் காரம் குறையாத சிந்தனைகளாகும்.

***ஆமொஸ்***

பன்னிரு இறைவாக்கினர்களில் முதலில் வருபவர். இவர் போதித்ததோடு நின்றுவிடாது, போதித்ததை எழுதியும் வைத்தார் கூ8220 நீதியின் இறைவாக்கினர் என்று அழைக்கப்படுகிறார். சமுதாயத்தில் நிலவிய அநீதிகளைக் கடுமையாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**1. சமுதாயப் பின்னணி**

எகிப்திய அடிமை வாழ்வு முடிந்து கானான் என்னும் வாக்களிக்கப்பட்ட நாட்டில் தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டவர்களுக்குத் தனிப்பட்ட அரசர் இல்லை. அவர்களின் முக்கியத் தொழில் விவசாயம். சுற்றியுள்ள மக்களோடு உறவாடிய போது புதிய பண்பாடு, வழிபாட்டு முறைகளைக் கற்றுக் கையாண்டனர். நாட்கள் செல்லச் செல்ல, மற்ற நாட்டினரைப் போன்று தங்களுக்கும் அரசர் வேண்டுமென்று கேட்டனர். முதலில் சாமுவேல் மறுத்தாலும் இறைவனின் ஆணைப்படி சவுல், அதற்குப்பின் தாவீது, சாலமோன் என்று அரசர்களானார்கள். செல்வச் செழிப்புடன் வாழ்ந்த இவர்கள், மக்களின் கடின உழைப்பே அதற்கு காரணம் என்பதை மறந்தனர். அடிமைத்தனம் புகுந்தது. ஒரு சிலர் செல்வந்தர்களாகவும், பலர் பரம ஏழைகளாகவும் மாறினர். நீதி-நியாயம் மறந்து, பணம் படைத்த பலசாலிக்கு ஒரு நீதி, ஏழைகளுக்கு ஒரு நீதி என்று நீதி மன்றங்கள் தீர்ப்பிட்டன. இக்காலத்தில்தான் ஆமோஸ் இறைவாக்கினர் தோன்றினார். அநீதியைக் கண்டித்தார்.

**2. வரலாற்றுப் பின்னணி**

ஆமொஸ் இறைவாக்குரைக்கும போது தென்நாடான யூதாவை அரசன் உசியாவும் (783-742) வட நாடான இஸ்ரயேலை மன்னர் 2-ஆம் எரொபவாமும் (786-746) ஆண்டனர். அமைதி நிலவியது. செல்வம் கொழித்தது. அதே சமயத்தில் இஸ்ரயேல் எதிரி தமஸ்கு பலமிழந்து, அசீரிய பலத்தை எதிர்த்துப் போரிட முடியாத நிலையில் வீழ்ச்சியுற்றது.

தொடரும் .. ..

www.bible.me

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். வருமானம் புதிய வழியில் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும்.



**ரிஷபம்** : நண்பரால் உதவி கிடைக்கும். சமூகத்தில் உயர் அந்தஸ்து பெறுவீர்கள். பணிகள் அனைத்தும் குறித்த காலத்தில் நிறைவேறும்.



**மிதுனம்** : சூழ்நிலை அறிந்து நிதானமாகச் செயல்படுவது நல்லது. எதிரியின் கெடுசெயல் கூட நன்மையாக மாறும். மனைவியின் ஆலோசனையை ஏற்கவும்.



**கடகம்** : பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். சமூகத்தில், பெரிய மனிதரின் உதவி கிடைக்கும். கடனில் பெரும்பகுதி அடைபடும்.



**சிம்மம்**: பணிகளை நிறைவேற்ற கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். வீண் விவாதங்களில் ஈடுபடுவது கூடாது. கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.



**கன்னி** : தாமதமான பணிகளை விடாமுயற்சியால் நிறைவேற்றுவீர்கள். உறவினரின் செயல்களைக் குறை சொல்ல வேண்டாம். சகோதரர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



**துலாம்** : மனதில் தைரியம் மேலோங்கும். இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவீர்கள். வெளியூர் பயணம் இனிதாக அமையும். பணியாளர்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.



**விருச்சிகம்** : நற்செயல்களில் ஈடுபட்டு பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தில், ஒற்றுமை சிறக்கும். பகைவரால் இருந்த தொல்லை மறையும்.



**தனுசு** : தாமதமான பணிகளும் புதிய முயற்சியால் நிறைவேறும். நண்பரால் உதவி உண்டு. பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். மாணவர்கள் அறிவுத்திறனில் மேம்படுவர்.



**மகரம்** : நதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். கடனில் பெரும்பகுதியைச் செலுத்துவீர்கள். அதிக மூலதனத்தால் லாபம் காண்பீர்கள்.



**கும்பம்** : பணி நிறைவேற்ற புதிய உத்திகளில் ஈடுபடுவீர்கள். அறிமுகம் இல்லாதவருக்குஇடம் தர [illegible]ம். புத்திரர் பிடிவாத [illegible]கொள்வர்.



**மீனம்** : இடம், சூழல் அறிந்து பேசுவது நல்லது. மகளின் ஜாதக யோக பலத்தால் நன்மை காண்பீர்கள். வாகன பயணத்தால் இனிமை உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## வெந்தயக் கீரை பருப்பு கடையல்

**தேவையான பொருட்கள்**

கடலைப்பருப்பு - ½ கப், வெந்தயக்கீரை - 2 கட்டு, பெரிய வெங்காயம் - 1, பூண்டு - 4 பல், மிளகாய்தூள் - ஒரு தே.கரண்டி, மஞ்சள்தூள் - ¼ தே.கரண்டி, சீரகத்தூள் - ½ தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, எலுமிச்சம்பழச் சாறு - ஒரு மே.கரண்டி

தாளிப்பதற்கு : சீரகம் - ½ தே.கரண்டி, கடுகு - ¼ தே.கரண்டி, எண்ணெய் - 2 மே.கரண்டி



**செய்முறை**

கடலைப்பருப்பை மஞ்சள்தூள் சேர்த்து, குழையாமல் வேகவையுங்கள். கீரையை சுத்தம் செய்யுங்கள். பூண்டு, வெங்காயத்தை தோலுரித்து பொடியாக நறுக்குங்கள். எண்ணெயைக் காய வைத்து கடுகு, சீரகம் தாளித்து பூண்டு சேருங்கள்.

பூண்டு வதங்கியதும் வெங்காயத்தையும் சேர்த்து வதக்குங்கள். அத்துடன் கீரை, மிளகாய்தூள், சீரகத்தூள், உப்பு சேர்த்து நன்கு வதக்கி, பருப்பை சேருங்கள்.

பின்னர் சிறு தீயில் நன்கு வதக்கி எடுக்கும்பொழுது எலுமிச்சம்பழச் சாறு சேர்த்து கிளறி இறக்குங்கள். தேவையெனில் இதற்குள் இடித்துத் தூளாக்கிய மாசித் துகள்களை சேர்க்கலாம். சிலர் தயிர் சேர்த்தும் காய்ச்சுவர் பின் தண்ணியாக இல்லாமல் சிறிது கெட்டியாக இருப்பதுதான், சிறந்தது.

## வியர்வை நாற்றத்தை துரத்த. . .



உடலில் தோன்றும் வியர்வை துர்நாற்றத்துக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

துரித உணவு வகைகளை அதிகம் உண்பது, உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்ளாமல் இருப்பது. மிகவும் இறுக்கமான உள்ளாடைகள் - வெளிப்புற ஆடைகளை அணிவது, நெய், எண்ணெய் வகை தின்பண்டங்களை அதிகமாகச் சாப்பிடுவது, உடல் பருமன், நாள்பட்ட நோய் நிலைகள், குறிப்பாக நீரிழிவு நோய், தோல் நோய்கள், வெள்ளைப்படுதல், அக்குள், பிறப்புறுப்புப் பகுதிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாமல் இருப்பது, இந்த இடங்களில் ரோமங்களை அகற்றாமல் வைத்திருப்பது, அசைவ உணவை அதிகம் உண்பது என கூறிக்கொண்டே செல்லலாம்.



**என்ன செய்ய வேண்டும்?**

உடலின் வாத, பித்தம், கபமான முக்குற்றங்களை சமன்படுத்தக்கூடிய உணவை அதிகம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தினசரிக் காலை, மாலை, மலம் கழிப்பது, வாரம் இரண்டு முறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, வருடத்துக்கு இரண்டு முறை வயிற்றுப் பேதிக்குச் சாப்பிடுவது ஆகியவற்றைச் சிறுவயது முதலே பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். தினம் இருமுறை குளித்து இறுக்கமான உள்ளாடைகளைத் தளர்த்தி, முழு பருத்தி ஆடைகளை பயன்படுத்துங்கள்.

தொடரும்.. ..




அழகுக் குறிப்பு

## உதட்டையும் அழகாக்கலாம்!!!


அத்திப்பழ கன்னம் மட்டும் இருந்தால் போதாது, கோவைப்பல உதடுகளும் இருந்தால் தானே அழகு. எப்படி உங்கள் உதடுகளை பராமரிப்பது?

வறண்ட உதடுகளைக் கொண்டவர்கள் தினசரி உதடுகளின்மேல் நெய் அல்லது வெண்ணெய் தடவி வந்தால் வறண்ட உதடுகள் மாறி வழவழப்பாகும்.

கொத்துமல்லி இலைகளின் சாற்றை எடுத்து தினமும் இரவு படுக்கைக்குச் செல்லும்முன் உதடுகளில் தடவி வந்தால் உதடு சிவப்பாகும்.

தேங்காய் எண்ணெயில் அரை டீஸ்பூன் ஜாதிக்காய் பொடியைச் சேர்த்து குழைத்து உதடுகளின் மேல் தடவி வந்தால் உதடுகள் சிவந்து, பளபளப்பாக காட்சியளிக்கும்.

பீட்ரூட் அல்லது மாதுளம் பழத்தின் சாற்றை உதடுகளின் மீது பூசி வந்தால் உதடுகள் அழகாகும்.



**இதேபோன்று முகத்தில் எண்ணெய் வடிவதையும் தடுக்க சூப்பரான வழிகள் உள்ளன.**

ஆலிவ் எண்ணெயைக் குழைத்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி மெதுவாக மசாஜ் செய்து நன்றாக ஊறியதும் கழுவ வேண்டும்.

ஆப்பிள் பழத்தை குழைத்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி மசாஜ் செய்தபின் கழுவ வேண்டும்.

இதே போல் வெந்தயத்தை பட்டுப்போல் அரைத்தும் மசாஜ் செய்யலாம்.

பாலாடையுடன் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறை குழைத்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி மெதுவாக மசாஜ் செய்து நன்றாக ஊறியதும் கழுவ வேண்டும்.

எலுமிச்சைப்பழத்தை பாதியாக வெட்டி அதன் சாற்றை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி மெதுவாக மசாஜ் செய்து நன்றாக ஊறியதும் கழுவ வேண்டும்.

ஒரு கரண்டி வேக வைத்த ஓட்ஸ் கஞ்சி, ஒரு கரண்டி பால், ஒரு துளிகள் எலுமிச்சைப் பழச்சாறு மூன்றையும் கலந்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி மெதுவாக மசாஜ் செய்து நன்றாக ஊறியதும் கழுவி வர, எண்ணெய் வழிதல் மட்டுமல்லாமல் முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் கூட மறைந்துவிடும்.

## சிறுவர் முரசு



சிறுவர்களுக்கான குட்டிக் கதை



### சிந்திக்க .. ..

உதிர்ந்து போவேன் என
தெரிந்தும் தினமும்
மலர்ந்திடும்
அழகிய மலர்கள்

## விரட்டப்பட்ட மருத்துவன்

ஓர் ஊரில் முருகன் என்பவன் இருந்தான். மருத்துவனாக வேண்டும் என்று நினைத்தான். வெளியூர் சென்ற அவன் புகழ் பெற்ற மருத்துவர் ஒருவரிடம் வேலைக்குச் சேர்ந்தான்.

இவன் சேர்ந்த சில மாதங்களுக்குள் அந்த மருத்துவர் இறந்து விட்டார். அவருக்கு மனைவியோ குழந்தையோ இல்லை. அங்கிருந்த மருந்து மாத்திரைகளை எடுத்துக் கொண்டான் முருகன். தன்னிடம் சீடனாக சேர்ந்த இளைஞன் ஒருவனுடன் ஊர் திரும்பினான்.

'புகழ் பெற்ற மருத்துவரிடம் பயிற்சி பெற்று வந்திருக்கிறான். இவனும் திறமையான மருத்துவனாகத்-தான் இருக்க வேண்டும்' என்று ஊர் மக்கள் நினைத்தனர்.

திடீரென அந்த ஊரில் ஒருவனுக்கு காய்ச்சல் கண்டது. மருத்துவம் பார்ப்பதற்காக முருகனை அழைத்தனர். அவனும் சீடனுடன் சென்று நோயாளியைப் பார்த்தன்.


காய்ச்சலுக்கு என்ன மருந்து தருவது என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஒரு குப்பியிலிருந்து பேதி மாத்திரைகள் பத்தை அரைத்து நோயாளிக்குக் கொடுத்தான்.

அதை சாப்பிட்ட நோயாளி கடுமையான பேதி கண்டு சிறிது நேரத்தில் இறந்து விட்டான். அந்த வீட்டில் ஆண்கள் யாருமே இல்லை. அங்கிருந்த பெண்கள் பிணத்தின் மீது விழுந்து அழுது ஒப்பாரி வைத்தார்கள். அவர்களில் ஒருத்தி முருகனைப் பார்த்து, "இங்கே எங்களுக்கு ஆண் துணை யாரும் இல்லை. நீங்கள் இருவரும் எப்படியாவது இந்தப் பிணத்தைச் சுடுகாடு வரை தூக்கிச் செல்ல வேண்டும்" என்று வேண்டினாள்.

வேறுவழி இல்லாததால் அவர்கள் இருவரும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

பிணத்தை ஒருபாயில் வைத்து சுருட்டி கட்டி தலையை முருகனும் கால்களை சீடனும் பிடித்து தூக்கிச் சென்றனர். போகும் வழி எல்லாம் சீடனின் மேல் மலம் தாரை தாரையாக விழுந்தது. பிணத்தை அடக்கம் செய்து குளித்து விட்டு வீடு திரும்பினர்.

மறுநாள் செல்வன் ஒருவனுக்கு சின்ன வயிற்று வலிதான் மருந்து கொடுத்தால் சரியாகி விடும் என்று சொல்லி மருந்துப்பெட்டியை திறக்க முயன்றான். உடனே சீடன் அவன் கைகளை பிடித்துக் கொண்டு "இந்த முறை நீங்கள் தான் கால்களை பிடிக்க வேண்டும்" என்று கத்தினான். அங்கிருந்தவர்கள் அவனிடம் நீ என்ன கூறுகிறாய் என கேட்டதும் அவன் நடந்த அனைத்தையும் கூறிவிட உண்மை தெரிந்த ஊரார் முருகனையும் சீடனையும் ஊரைவிட்டு விரட்டினார்கள்.




C. ஆர்த்திகா 08A
தி / கிளாவெளி கைலேஸ்வரா
கல்லூரி




N.S. பினோன்
பாலையூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. தரப்பட்டுள்ள வென் வரிப்படத்தில் P Q இனால் காட்டப்படும் பிரதேசத்தை நிழற்றுக.





02. 1கன சென்றி மீற்றர் திரவம் = 1 மில்லிலீற்றர் எனக் கொண்டு 1கன மீற்றர் = 1000 லீற்றர் எனக் காட்டுக.

03. இரு வட்டங்களின் பரப்பளவுகளுக்கிடையிலான விகிதம் 2 : 1 ஆகும். அவற்றின் விட்டங்களுக்கிடையிலான விகிதங்களைத் தருக.

### பகுதி 02

01. இரு கரைகளிலும் இரு அரை வட்டப் பூப்பாத்திகள் உள்ளதும் 20 மீற்றர் நீளமும் 14 மீற்றர் அகலமும் உள்ளதுமான ஒரு செவ்வக வீட்டுத் தோட்டத்தின் பரும்படி படம் உருவில் காணப்படுகின்றது.




(1) வீட்டுத் தோட்டத்தின் மொத்தப்பரப்பளவைக் காண்க.

(2) இரு பூப்பாத்திகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பரப்பளவைக் காண்க.
(π ஸ்ரீ 22.˙.7 எனக் கொள்க)

(3) தடாகத்திற்கும் ஒவ்வொரு பூப்பாத்திக்குமிடையே குறைந்த பட்சம் 1 மீற்றர் தூரம் எஞ்சியிருக்குமாறு வீட்டுத்தோட்டத்தின் நடுவே ஒரு சதுரத் தடாகத்தை அமைக்க வேண்டியுள்ளது. அவ்வாறு அமைக்கத்தக்க மிகப் பெரிய தடாகத்தின் அமைவைக் காட்டும் ஒரு பரும்படி படத்தை உரிய அளவீடுகளுடன் மேற்குறித்த உருவின் மீது குறிக்க.

(4) தடாகத்தின் மேற்பரப்பின் பரப்பளவைக் காண்க.

(5) இரு பூப்பாத்திகளுக்கும் தடாகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளைத் தவிர எஞ்சியிருக்கும் தரை புற்களைப் பயிரிடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப மிகப் பெரிய அளவு தரை எதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது?

(6) வீட்டுத்தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்து தடாகத்திற்கு உள்ள குறைந்தபட்ச தூரம் யாது?

## பாடம் : வரலாறு

01. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட், அநாகரிக தர்மபால, வலிசிங்ஹ ஹரிஸ்சந்திர, டீ.பீ. ஜயதிலக ஆகியோருக்கிடையிலுள்ள பொதுவான பண்பு.
   (1) பாடசாலை அமைப்பதில் பெரும் பங்கு கொண்டனர்.
   (2) இலங்கையின் கடந்தகாலச் சிறப்பினை உலகத்துக்கு விளக்குவதற்கு அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
   (3) மது ஒழிப்பு இயக்கத்தின் முன்னோடிகளாக அவர்கள் சேவை புரிந்தனர்.
   (4) பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர்களாயிருந்தனர்.

02. ஜேர்மனியை ஒன்றுபடுத்தும் இயக்கத்திற்கு தலைவராக விளங்கியவர்.
   (1) விக்ரர் இம்மானுவேல் (2) கமிலோ கவூர்
   (3) ஜோசப் மஸ்ஸினி (4) ஒன்றோ வென் விஸ்மார்க்

03. நாடுகாண் பயனங்களில் முதலில் கவனஞ் செலுத்திய ஐரோப்பிய நாடு
   (1) ஸ்பெயின் (2) போர்த்துக்கல் (3) ஒல்லாந்து (4) பிரான்ஸ்

04. சீனக் கலாச்சார புரட்சியின் நோக்கம்.
   (1) சீனாவின் இளைஞர்கள் மேற்கத்திய கலாச்சாரத்தில் நாட்டங்கொள்வதைத் தடுத்தல்
   (2) மா சே துங்கின் சிந்தனையை மக்களிடம் உறுதிப்படுத்தல்
   (3) சீனச் சமூகத்தில் இருந்த பண்டைய மனப்பான்மைகளையும் பழக்க வழக்கங்களையும் அகற்றல்
   (4) சீனாவின் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல்.

05. டில்லி சுல்தான் பேரரசில் ஆட்சிக்கு வந்த இராஜவம்சங்கள் முறையே இடம் பெறும் விடை யாது?
   (1) கல்ஜி/ அடிமை/ தக்ளக்/ செய்யது/ லோடி
   (2) அடிமை /கல்ஜி/ துக்ளக/ செய்யது/ லோடி
   (3) அடிமை/ துக்ளக்/ கல்ஜி/ லோடி/ செய்யது
   (4) துக்ளக்/ கல்ஜி/ அடிமை/ லோடி/ செய்யது

## பாடம் : பௌதிகவியல்

01. மின்பாவனையின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை அல்லாதது.
   (1) பல்குதையில் அதிகளவு மின் உபகரணங்களைப் பயன்படுத்தலாம்.
   (2) சரியான அம்பியர் அளவு கொண்ட உருக்கிகம்பிகளை உருகிகளில் பயன்படுத்தல்
   (3) மின் உபகரணங்களை பாவனையில் இல்லாதபோது அவற்றின் செருகியை குதைகளில் இருந்து அகற்றி வைத்தல்
   (4) மின்சுற்றின் பராமரிப்புத் தேவைகளுக்கு முறையாகப் பயின்ற மின்சேவையாளரை அழைத்தல்

02. மின்காந்தத் தூண்டலின் பயன் அல்லாதது
   (1) தூண்டற்சுருள் (2) மாற்றிகள் (3) சைக்கில் தைனமோ (4) கமரா

03. மனித கண்ணில் விம்பம் தோன்றுமிடம்
   (1) விழி வெண்படலம் (2) விழித்திரை
   (3) கதிராளி (4) கண்மணி




04. அருகே உள்ள வரைபில் A யில் வேகம்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் இலக்கணத் தொடர்

#### தொனிகள்

1. எருது - முக்காரம் போடும்
2. கரடி - கத்தும்
3. குதிரை - கனைக்கும்
4. நரி - ஊளையிடும்
5. நாய் - குரைக்கும்
6. பசு — கதறும்
7. பன்றி — உறுமும்
8. யானை — பிளிறும்
9. பாம்பு — சீறும்
10. அணில் - கீச்சிடும்
11. காகம் - கரையும்
12. குருவி - கீச்சிடும்
13. சேவல் - கூவும்
14. கோழி - கொக்கரிக்கும் கேரும்
15. மயில் - அகவும்
16. தவளை — கத்தும்
17. பல்லி — சொல்லும்
18. ஆந்தை — அலறும்

| ஆண் | | வெண் |
|---|---|---|
| 1. ஆடு | - கடா | மறி |
| 2. குதிரை | - குண்டு | வடவை |
| 3. குரங்கு | - கடுவன் | மந்தி |
| 4. நாய் | - கடுவன் | பெட்டை |
| 5. புலி | - போத்து | பிணா |
| 6. பூனை | - கடுவன் | பெட்டை |

அஃறிணை ஆண்/ வெண் மரபுப் பெயர்கள்

| | ஆண் | வெண் |
|---|---|---|
| 1. மாடு | - நாம்பன், எருது | பசு |
| 2. மான் | - கலை | பிணை |
| 3. யானை | - களிறு | பிடி |
| 4. கோழி | - சேவல் | பேடு |
| 5. நண்டு | - அலவன் | பெடை |

#### கூட்டத்தைக் குறிக்கும் மரபுச் சொற்கள்

1. ஆட்டு மந்தை
2. ஆ நிரை
3. கள்வர் கூட்டம்
4. கற்குவியல்
5. சனக்கும்பல் திரள்கூட்டம்
6. சுருட்டுக்கட்டு
7. முகிற்கூட்டம்
8. தென்னந்தோப்பு
9. நெற்குவியல்
10. பல்வரிசை
11. புகையிலை சிப்பம்
12. பூங்கொத்து மஞ்சரி
13. மலைத்தொடர்
14. வைக்கோற் கற்றை



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**Read the following passage and complete the dialogue using the passive voice.** *The first one is done for you.*

Someone broke into Mrs.Jayalath's house during the weekend. The thief took some jewellery. But he didn't do any damage. A young policewoman interviewed Mrs. Jayalath. The police found some fingerprints and the police computer identified the thief. The police have arrested a man and are questioning him.

Mrs Jayalath : Our house was broken into last weekend .
Mrs Silva : Oh, No!
Mrs Jayalath : Some jewellery was taken but no damage (1) Was done
Mrs Silva : Did the police came and see you?
Mrs Jayalath : yes of course. I (2).............. by a young police woman.
Mrs Silva : Oh, yes. Some (3).............. and the (4).............. by the police computer. A man (5)............ and he (6)...............

(1) பூச்சியம் (2) மாறாது (3) உயர்வு (4) முடிவிலி

05. பின்வரும் அடிப்படை அலகுகளில் வேறுபடுவது.
   (1) திணிவு (2) நீளம் (3) நேரம் (4) அடர்த்தி

06. விசை என்பது எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.
   (1) அதிகளவில் பயன்படுத்தும் போது விரைவாக விரயமாகும் பொருள்
   (2) ஒரு பொருளில் நிகழும் திருப்பு திறன் மாற்ற வீதம்
   (3) ஒரு கிலோகிராம் நிறையுடைய பொருளின் மீது தாக்கம் புரிந்து அதில் செக்கனுக்கு ஒரு மீற்றர் ஆர்மூடுகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு பொருள்.
   (4) ஓய்வில் இருக்கும் ஒரு பொருளின் ஓய்வு நிலையை அல்லது சீரான வேகத்துடன் இயங்கும் ஒரு பொருளின் இயக்க நிலைமையை மாற்றுகின்ற ஒரு புறக்காரணி

07. வேகத்திற்கும் கதிக்கும் இடையிலான பிரதான வேறுபாடாக கருதக்கூடியது.
   (1) காவிக்கணியமாக வேகமும் எண்ணிக் கணியமாக கதியும் அமையும்.
   (2) இரண்டிற்கும் பருமன் உண்டு.
   (3) இரண்டினதும் அலகு m/s என்பதாகும்.
   (4) வேகத்திற்கும் கதிக்கும் வேறுபாடு எதுவுமில்லை.

08. மின் சக்தியின் அலகு யாது?
   (1) வோல்ற்று (2) அம்பியர் (3) யூல் (4) ஓம்

09. சில்லுகளைத் தொடுக்கும் பட்டி மூலம் கீழ்வரும் எந்தத் தொகுதிக்கு சக்தி ஊடுகடத்தப்படும்
   (1) கடிகாரபற்சில்லு தொகுதி (2) மோட்டார் சைக்கிள் (3) சைக்கிள்
   (4) தையல் இயந்திரம்

**விஞ்ஞானம் (பௌதிகவியல்) பல்தேர்வு**
ஆசிரியர் . பொன்னுத்துரை தவசிதன் BSC
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### அமெரிக்க வரை....

மற்றும் தமிழ் நாட்டின் தமிழர்களை ஒன்று திரட்டி சர்வதேச அளவிலும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி உள்நாட்டில் திரட்டப்பட்ட திரட்டப்பட்ட கையொப்பங்கள் ஐ.நா அதிகாரிகளிடம் தமிழர் செயற்பாட்டுக் குழுவினரால் கடந்த 23ம் திகதி கொழும்பில் கையளிக்கப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்கு சர்வதேச குற்றவியல் விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டும் எனவும் சிறிலங்கா அரசினால் உருவாக்கப்படும் எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் வெளிப்படுத்தி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளுக்கும் அனுப்புவதற்காக திரட்டப்பட்ட கையொப்பங்களின் மூலப் பிரதிகள் மனித உரிமைகளுக்கு பொறுப்பான அதிகாரியான பிரடீப் வாலே என்பவரிடம் சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழுவின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அலன் சத்தியதாஸ் மற்றும் சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் ஆகியோர் நேரில் சென்று கையளித்திருந்தனர்.

அதேவேளை கடந்த 25ம் திகதி அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் சிறிலங்காவை பாரப்படுத்துமாறு ஐ.நாவைக் கோரும் 1.4 மில்லியன் கையெழுத்து ஐ.நாவிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

### ஐந்து மாணவர்....

"ஐக்கிய நாடுகள் சபையின் அதியுயர் பதவியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான அரச அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக, 2006ம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் நடந்த ஐந்து மாணவர்கள் கொலை உட்பட மிக முக்கிய மனித உரிமை மீறல் ஆவணங்களை வெளியிடாமல் வைத்திருந்தார். முரண்பாடாக ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் மற்றும் ஆயுத மோதல் சிறப்புப் பிரதிநிதியாக அவர் தொழிற்படுகின்றார்'" என கொழும்பு டெலிகிராப் இணையத் தளம் அறிக்கையிட்டுள்ளது.

மாணவர் படுகொலை உட்பட ஏனைய முக்கிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இளைப்பாறிய நீதிபதி சுந்தரலிங்கம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கைகளை அன்றைய நிலையில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவராக இருந்த இராதிகா வெளிப்படுத்தவில்லை என அவ்விணைத்தளம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் சர்வோதய அமைப்பின் தலைவரான கலாநிதி ஆரியரத்ன தனது நெருங்கிய சொந்தங்களை சர்வோதயத்தின் மிக முக்கிய பதவிகளில் இருத்தியிருந்தார் எனவும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணிவரும் சனாதிபதி சட்டத்தரணி அலிஸ் எவ்வாறு மக்கள் பிரதிநிதியாக அரசியலமைப்புச் சபைக்கு நியமிக்கப்படலாம் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாகவும் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

### பொதுமக்கள்....

முன்மொழியும் வகையில் அமெரிக்கப் பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இருபத்தியாறு முன்மொழிவுகளுடன் அப்பிரேரணை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் உறுப்புரிமை நாடுகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இரஸ்யா மற்றும் சீனா உட்பட நாடுகள் சில இலங்கைக்கு ஆதரவாக அம் முதல் அறிக்கையின் மீது மாற்றங்களை ஏற்படுத்த முனைவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகளை அடுத்து தற்போது இறுதி நகல் வடிவம் இருபது பிரேரணைகளாகச் சுருக்கப்பட்ட நிலையில் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ம் திகதி இவ்வமெரிக்கப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நிகழும். நாற்பத்தியேழு உறுப்புரிமை நாடுகளின் வாக்களிப்பின் முடிவே இப் பிரேரணையை இலங்கை மீது திணிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கப் போகின்றமை குறிப்பிடத் தக்கது. (பிரேரணையின் முழு வடிவம் பக்கம் 4ல்)

### எதிர்க்கட்சியில்..

தாம் செயற்படப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிருப்தி உறுப்பினர்கள் ஐம்பத்தியாறு பேர் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் தாம் தனியான எதிர்க்கட்சியாகத் தொழிற்படப் போவதாகவும் தெரிவித்திருந்தனர். அவ்வாறு அவர்கள் செயற்படுவராயின் எதிர்க்கட்சிக்குரிய அந்தஸ்த்துக்கள் எவற்றையும் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள். இந்த நிலையில் திடீரென சம்பந்தனின் தலைமையை ஏற்றுத் தாமும் எதிக்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படப்போவதாக அதிருப்திக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினாறு உறுப்பினர்களை விட அதிகமான உறுப்பினர்களை அதிருப்தியாளர்கள் கொண்டிருப்பதால் தமிழர்களின் வலு எதிர்க்கட்சியில் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மூத்த அரசியல்....

இறுதிக்கட்டத்தில் நடந்த போருக்கு சர்வதேச விசாரணை தேவை,அது கலப்பு நீதிமன்றம் ஊடாக விசாரணை நடாத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டதாக சில முதிர்ந்த அரசியல்வாதிகள் மக்களை குழப்பிவருகின்றனர்.

கடந்த 30வருட கால யுத்தம் காரணமாக பெரும் இழப்புகளை எதிர்கொண்டு இன்று நல்லாட்சி என்ற காலப்பகுதியில் எமது பிரச்சினைகளுக்கு தீர்வொன்றினை எதிர்பார்த்துநிற்கும் காலப்பகுதியில் நாங்கள் உள்ளோம்.

இந்தநிலையில் எமக்கு பலம் சேர்க்கும் வகையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் 30ஆம் திகதி வரைவு ஒன்றுவரவுள்ளது.

இன்று தமிழர்கள் மத்தியில் ஒரு குழப்பமான சூழ்நிலையினை எமது அரசியல்வாதிகள் உருவாக்கியுள்ளனர்.பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். புரையோடிப்போயுள்ள எமது இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டுமாக விருந்தால் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளை மேற்கொண்ட போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டுமாகவிருந்தால் அதற்கு சர்வதேச விசாரணை தேவையென நாங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றோம்." தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மேலாக தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

ஆனால் சில முதிர்ந்த அரசியல்வாதிகள் சர்வதேச விசாரணைகள் நடைபெற்றுவிட்டது,சர்வதேச விசாரணை இனி எதற்கு என கூறுகின்றனர்.ஆனால் ஐ.நா.வினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இறுதிக்கட்டத்தில் நடந்த போருக்கு சர்வதேச விசாரணை தேவை,அது கலப்பு நீதிமன்றம் ஊடாக விசாரணை நடாத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ள நிலையில் சர்வதேச விசாரணை முடிந்து விட்டதாக மக்களை குழப்புகின்றனர்.

நாங்கள் இதுதொடர்பில் தெளிவாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் இலட்சக்கணக்கான உயிர்களை இழந்த நாங்கள் மீண்டும் ஒரு இழப்பினை சந்திக்ககூடாது என நினைப்போமானால் நாங்கள் ஒன்றுபட்டு சர்வதேச விசாரணை ஊடாக இணைந்த வடகிழக்கில் நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதான நகர்வு இருக்க வேண்டும் என்றார் அவர்.

# இலங்கைக்கான பாராட்டுப் பத்திரமே ஐ.நாவின் அறிக்கை

-சுனந்த தேசப்பிரிய-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான புதிய அறிக்கையானது, இலங்கைக்கான பாராட்டுப் பத்திரம் போன்றது என்று சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சிரேட்ட ஊடகவியலாளரும், ஜனநாயகத்துக்கான இலங்கை ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவருமான சுனந்த தேசப்பிரிய விடயம் தொடர்பில் ஜெனீவாவில் இருந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய அறிக்கையில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள், ஜனநாயக செயற்பாடுகளை மனித உரிமைகள் ஆணையம் அங்கீகரித்துள்ளதாக குறிப்பிட்டிருப்பதன் மூலம் இலங்கைக்கு பாராட்டு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை காலமும் இல்லாத நிலையில் இந்த அறிக்கையில் புலிகளின் போர்க்குற்றங்கள் தொடர்பில் கடுமையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையானது இலங்கையின் பக்கம் சாதகமான காற்று வீசத் தொடங்கியிருப்பதற்கான அறிகுறியாகும்.

அத்துடன் மனித உரிமைகள் அமர்வின் ஆரம்பத்தில் இலங்கையின் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கை-



களை அடியொட்டி புதிய அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பது இலங்கையின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருப்பதற்கான அடையாளமாகும்.

மேலும் எந்தவொரு விடயத்தையும் செய்தே தீரவேண்டும் என்பதாக எந்தவொரு வற்புறுத்தலும் இல்லாத நிலையில்,

குறித்த விடயங்களை இலங்கை செய்து முடிக்கும் என்று எதிர்பார்ப்பதாக ஜெனீவா அறிக்கை வெளியாகி இருப்பது இலங்கை மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளதற்கான அறிகுறியாகும்.

அந்த வகையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையானது இலங்கை மீதான பாராட்டுப்பத்திரமே அன்றி வேறில்லை என்று சிரேட்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

**வினியோகிப்பவர்கள் தேவை**

பத்திரிகையையும், சஞ்சிகையையும் உங்களது பிரதேசத்தில் வீடு வீடாக வினியோகிப்பவர்கள் தேவை!

எமது வாடிக்கையாளர்களுக்குக் கொண்டு சென்று வழங்குவது மட்டுமே உங்கள் பணி

குறைந்த நேரத்தில் கூடிய தரகு பணம் உழைக்கலாம்

0777 555 738

### ஆளுங்கட்சியி.....

அடிப்படையில் ஆசனங்களை ஒதுக்கிக்கொடுத்துள்ளார்.

எதிர்வரும் மாகாண சபை அமர்வின்போது அவர்களுக்கு மூப்பு அடிப்படையில் ஆசனம் ஒதுக்கித் தரப்படும் என்றும் தவிசாளர் உறுதியளித்துள்ளார்.

இக்கட்சித் தாவலை அடுத்து எதிர்க்கட்சியினரின் எண்ணிக்கை சடுதியாகக் குறைவடைந்துள்ளது. அதன்படி முப்பத்தியேழு ஆசனங்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் முப்பத்தியிரண்டு பேர் ஆளுங்கட்சியினராக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

இதிலிருந்துதான் ballistic curve அதாவது எறிபொருள் வளைவு அல்லது தாக்க வரைகோடு என்கின்ற ஒன்று இனங்காணப்பட்டு pendulum clock இல் இருந்து, ballistic missile (குறித்த இலக்கை இலக்கு பிசகாமல் தாக்கும் உந்துவிசைக் கணை), முதலாவது பொதுப்பயன்பாட்டு கணினி (ENIAC) அமெரிக்காவால் தமது இராணுவப் பயன்பாட்டிற்கு உருவாக்கப் பட்டதுடன், விண்ணிற்கு விண்கலங்களையும், செய்மதிகளையும் தடங்கல்கள் இன்றி அனுப்பும் நிலைக்கு விஞ்ஞானத்தை இட்டுச் சென்றது.

இந்த இடத்தில் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். அறிந்தவர்களுக்கும், உடன் வாழ்ந்தவர்களுக்கும் இந்த சொற்கள் தெரியும். அவர்களுக்கு புரியும். "பசிலன், சண்டியன், சமாதானம்" இவை மேற்கூறப்பட்ட அறிவியலில் இருந்து நவீன தமிழர்களால் பயன்படுத்தி வரலாறு படைக்கப்பட்டது. வரலாறு எமது வழிகாட்டியும் கூட. தமிழர் ஆண்ட கடற்பரப்பில் சென்ற டோரா படகுகள் சில காணாமல் போனதற்கும், வேக கணிப்பும் சேர்த்து இந்த உந்துவிசை எறிபொருள், தாக்க வளை கோட்டுக்கும் ஏதும் தொடர்பிருக்குமோ? யாமறியோம்... அவங்களுக்குத்தான் வெளிச்சம்.

அடுத்த ஒரு விளைவாக பார்க்கக் கூடியது 2ம் உலக யுத்த ஆரம்பத்தில் வானொலி அலைகளைப் பயன்படுத்தியே சயனயச இயங்கியது. பல நாடுகள் பலவாறாக பயன்படுத்தியிருந்தாலும் பயனுள்ள வகையில் அமெரிக்காதான் அதனை மேம்படுத்தியது என்று நான் சொல்லவில்லை. தகவல்கள் சொல்கிறது. அது யுத்த முடிவில் மேம்படுத்தப்பட்ட மின்காந்த அலைகள் பயன்படுத்தப்பட்டு இன்றைய நவீன உலகின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மிகப்பெரிய மைல் கல்லாக அமைந்தது என்றும் சொல்லலாம். யுத்த காலங்களுக்கு அப்பால் திரை போடும் மேகங்களையும், எழுந்து வீழும் அலைகளுக்கிடையிலும், கருமை படர்ந்த ஆழக்கடலையும் மனிதன் வென்று வர இந்த மின்காந்த அலைகளின் தொழிற்பாட்டுடன் கூடிய ராடார் தான் உதவியது. விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிகள் என்று அனைத்திலும் முக்கிய கருவியாகிப் போனது. இன்றைய போக்குவரத்து துறையின் முக்கிய பங்காகிப் போனது இந்த ராடார்.

இந்த ராடரின் வளர்ச்சியால்தான் "triangulate" என்று சொல்லப் படுகிற தெரிந்த இரு இடத்தின் அமைவை வைத்துக்கொண்டு தெரியாத இடத்தின் அமைவை அறியும் துல்லியமாக கணக்கிடும் முறை வந்தது. இதனை ராடாரில் LORAN (long-range navigation) என்று அழைத்தார்கள். இதுவே இன்றைய பூமி நிலைகாண் தொகுதிக்கு (GPS technology) அடிப்படையாக அமைந்து என்று சொல்கிறார்கள்.

அடுத்து பென்சிலின் (Penicillin) ஏற்கனவே இது கண்டு பிடிக்கப் பட்டிருந்தாலும் இரண்டாம் உலக யுத்த காலப்பகுதியில் இது அமெரிக்க இராணுவ மருத்துவர்களால் மேம்படுத்தப்பட்டு, பெரும்பாலும் போர்வீரர்களுக்கிடையில் பரவிய gonorrhea, syphilis போன்ற பால்வினை நோய்களுக்காகவே அதிகம் பயன்படுத்தப் பட்டது. இதுவே பின்னாளில் antibiotics கண்டு பிடிக்கப்பட முன்னோடியாக அமைந்தது. அந்த யுத்த காலப்பகுதியிலேயே DDT என்ற மருந்தும் malaria, typhus போன்ற நோய்களுக்கு எதிராக பயன்படுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இன்றைய non-stick பாத்திரங்கள் என்றால் இன்றையகால பெண்களுக்கு அலாதிப் பிரியம். இது கூட அமெரிக்க இரசாயனவியலாளர் ஒருவரால் 1938 இல் அணுப்பரிசோதனைக்காக வேறு ஏதோ செய்யப் போக தவறுதலாக கண்டு பிடிக்கப்பட்ட teflon என்கிற ஒரு பதார்த்தம் ஆகும். இதுதான் இன்றைய non-stick பாத்திரங்கள் உருவாக அடிப்படை. ஆண் வர்க்கமே! இப்ப எல்லாம் நாங்கதான் அந்த ஆய்வாளருக்கு நன்றி சொல்லவேணும்!

அடுத்து இன்றைய உலகினை ஆளுகின்ற ஒரு பொருள் "plastics". இது கூட 2ம் உலக யுத்தம் தந்த விளைவு. உலக நாகரீகம் இதில் மாறிக் கொண்டது என்றாலும் பொய்யில்லை. அமெரிக்க நிறுவனம் ஒன்றே Polyvinylidene chloride (PVdC) அதனைக் கண்டு பிடித்து அறிமுகப் படுத்தியது. மரப்பலகை, அலுமினியம், இரும்பு போன்ற பொருட்களுக்கு மாற்றீடாக plastics பயன்படுத்தக் கூடியதாகவும், தேவையான விரும்பிய வகையில் வடிவம் மாற்றக் கூடியதாக இருந்ததும் மிகப்பெரிய வரமாகிப் போனதால் plastics பாவனை இன்று உலகை ஆளுகிறது என்றும் சொல்லலாம், சீனா ஆளுகிறது என்றும் சொல்லலாம். கவனம். சீனாவின் பிளாஸ்டிக் அரிசிகூட விற்பனைக்கு வந்திட்டு உறவுகளே!

அடுத்து முக்கியமான உலகயுத்தம் தந்த விடயம். சீரியல் பெண்களின் சீர்வரிசைகள் இவை. ஆம். பொதி செய்யப்பட்ட, அல்லது பதப்படுத்தப் பட்டு தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு வகைகள்.




## விநாயகர் கோவில் கும்பாபிஷேகம்

சேனையூர் நிருபர்

30 வருடங்களின் பின்னர் கும்பாபிஷேகம் காணும் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டைபறிச்சான் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (24.09.2015) இடம்பெற்றது. பக்தர்கள் நீண்ட வரிசையில் நிண்டு விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் எண்ணெய் சாத்தி அவரின் இஷ்ட சக்திகளைப் பெற்றனர். அதனைத் தொடர்ந்து விசேட அர்ச்சனைகளும் பூசைகளும் இடம்பெற்று வருகின்றது.



# நிகழ்வுகள்

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு


தம்பலகாம நிருபர்

கிண்ணியா அல் ஹஷனத் நலன் புரி அமைப்பினால் நடாத்தப்பட்ட ஆறு மாத கால பயிற்சி நெறி முடித்த மாணவர்களுக்காண அரபிக் ஆங்கில தொழிநுற்ப பயிற்சி சான்றிதல் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது சாதிக் ஹஷன் அவர்களினால் பயிற்சி முடித்த 120 மாணவிகளுக்கு சான்றிதல்கள் வழங்கப்பட்டது.



## இரத்ததான முகாம்

திருகோணமலை சிவநயனி நற்பணி மன்றத்தின் தலைவர் சி.ராம்கார்த்தீவன் தலைமையில் திருகோணமலை விக்னேஸ்லரா மகா வித்தியாலயத்தில் 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை இரத்ததானமுகாம் இடம்பெற்றது. அதில் பலரும் கலந்து கொண்டு இரத்தானம் செய்தனர்.



## "வேதம் என் வெளிச்சம்"


சேனையூர் நிருபர்

**அன்புவழிபுரம்** மெதடிஸ்த திருச்சபையின் 12வது ஆண்டு நிறைவை முன்னிட்டு தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக அன்புவழிபுர மெதடிஸ்த திருச்சபையின் வாலிபர்களால் பெண்களுக்கிடையே நடாத்தப்பட்ட "வேதம் என் வெளிச்சம்" எனும் வேதாகம வினாவிடைப் போட்டி கடந்த வாரம் இடம் பெற்றது.

இதில் பெருந்தெரு மெதடிஸ்த திருச்சபையின் பெண்கள் அணி முதலாமிடத்தையும், நிலாவெளி மெதடிஸ்த திருச்சபையின் பெண்கள் அணி இரண்டாம் இடத்தையும், பாலையூற்று விசுவாச கூடாரசபையின் பெண்கள் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

சிறந்த போட்டியாளராக பெருந்தெரு மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த திருமதி.வ.ஜீவதர்சினி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் சிறப்பு நடுவர்களாக அருட்பணி. சுஜிதர் சிவநாயகம், அருட்பணி. விஜயநாதன், அருட்பணி. வினோத் சபாபதி ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.







## கண்காட்சிப் பூங்கா

மாணவர்கள் மத்தியில் கண்டுபிடிப்பு திறனை ஊக்குவிக்கவும் புதிய கண்டுபிடிப்புகளை பெற்றுக்கொள்ளும் வகையிலும் விசேடமாக உருவாக்கப்பட்ட வழிகாட்டிகள் விஞ்ஞான பூங்காவின் கண்காட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் மாணவர்கள் மத்தியில் புத்தாக்க சிந்தனையினை ஏற்படுத்தும் வகையிலேயே இப்பூங்கா ஆரம்பித்துவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# சொக்கர் சம்மேளனத்தின் சுற்றுப்போட்டி





இலங்கை மாஸ்ரர் சொக்கர் சம்மேளனத்தால் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையே நாடு தழுவிய சுற்றுப்போட்டி சங்கங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை 20.09.2015 திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டது. இதில் திருகோணமலை சங்க அணியினரை எதிர்த்து வுவுனியா சங்க அணியினர் போட்டியிட்டனர்.

மிகவும் விறுவிறுப்பாக இப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் திருகோணமலை சங்க அணியினர் வவுனியா சங்க அணியினரை 3 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி வெற்றனர்.

கடந்த வருடம் அமரத்துவம் அடைந்த ஓய்வுபெற்ற விளையாட்டு அதிகாரியும் உதைபந்து மத்தியஸ்தருமான ந.சிங்காரவேல அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தினரால் இரு சங்க அணிகளுக்கும் இடையே போட்டி நடாத்தப்பட்டு அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இதனை சட்டத்தரணியும் உதைபந்து வீரருமான திரு.ஆர்.சீதாராமன் வழங்கி வைத்தார்.

## "நான் புறக்கணிக்கப்படுகிறேன்" – மேரிகொம்

தேர்வு குழுவினர் தன்னை புறக்கணிப்பதாக மும்பையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இந்திய குத்துச்சண்டை வீராங்கனை மேரிகொம் கதறி அழுத சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மும்பையில் இடம்பெற்ற நலநிதி திரட்டும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்த மேரிகொம் இங்கு செய்தியாளர்களுடனான சந்திப்பை மேற்கொண்ட போது "சில நேரத்தில் போட்டிகளில் சில நடுவர்கள் தனக்கு சாதமாக இருப்பதில்லை. அதைபற்றி நான் கவலைப்படவில்லை. நான் வடகிழக்கு மாநிலத்தில் இருந்து வந்து இருக்கிறேன். ஆனால் நான் இந்தியன். தேர்வு குழுவினர் என்னை புறக்கணிக்கிறார்கள். அவர்கள் பிங்கிக்கே ஆதரவாக உள்ளனர்" என தெரிவித்து உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் அவ்விடத்தில் அழுதார். இவ்வாறு நிருபர்கள் மற்றும் ரகிகர்கள் முன்னலையில் வீராங்கை அழுதது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.



துடுப்பாட்டத்தில் 5, 6 வது இடத்தில் களமிறங்குவது எளிதான விடயமல்ல. ஏனெனில் நீண்ட நேரம் நிலைத்து நின்று துடுப்பாட வாய்ப்பு கிடைக்காது. தொடர்ந்து 3 போட்டியில் நல்ல ஸ்கோர் செய்யவில்லையெனில் பல நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். தொடக்கத்தை தவிர எந்த இடத்திலும் களமிறங்கவும் தயாராக உள்ளேன் என்கிறார் துடுப்பாட்ட வீரர் ரெய்னா.

மேலும் எனது துடுப்பாட்ட திறமை குறித்து டோனிக்கு நன்றாகவே தெரியும் என்றும் எந்த இடத்தில் அவர் களமிறக்க விரும்பினாலும் விளையாட தயாராக உள்ளேன் எனவும் கூறியுள்ளார்.

# உலக கிண்ண றக்பி தொடர்

### *அவுஸ்திரேலியா, ஸ்கொட்லாந்து, பிரான்ஸ் வெற்றி*

இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும் றக்பி உலகக் கிண்ணப் போட்டிகளில், 3ஆவது நாள் போட்டிகளில் அவுஸ்திரேலியா, ஸ்கொட்லாந்து, பிரான்ஸ் ஆகிய அணிகள் வெற்றிபெற்றன. அவுஸ்திரேலிய அணிக்கும் பிஜி அணிக்குமிடையிலான போட்டியில், அவுஸ்திரேலிய அணி 28-13 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டியின் நாயகனாக, டேவிட் பொகொக் தெரிவானார்.


தென்னாபிரிக்கா அணியை வென்று அதிர்ச்சியளித்த ஜப்பான் அணி, ஸ்கொட்லாந்துடன் இடம்பெற்ற போட்டியில் படுதோல்வியைத் தழுவிக் கொண்டது.

பிரான்ஸ் அணிக்கும் றோமானிய அணிக்குமிடையிலான போட்டியில் பிரான்ஸ் அணி, 38-11 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றது.




# தொடர்ந்தும் முதலிடத்தில்

### சாய்னா நேவால்



பேட்மிண்டன் வீரர், வீராங்கனைகளின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச பேட்மிண்டன் சங்கம் நேற்று வெளியிட்டது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 13-வது இடத்தில் உள்ளார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர்கள் ஸ்ரீகாந்த் 5-வது இடத்தையும், காஷ்யப் 8-வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

## முதன் முறையாக பாகிஸ்தான் விஜயம்



கடந்த 2009ம் ஆண்டு நடந்த லாகூர் தாக்குதலுக்கு பிறகு எந்த ஒரு அணியும் பாகிஸ்தானுக்கு செல்லவில்லை. பாகிஸ்தான் பலமுறை அறிவித்தும் இந்திய அணி செவி சாய்க்கவில்லை. மற்ற அணிகளும் பின்வாங்கின. ஆனால் முதன்முறையாக வங்கதேசத்தின் மகளிர் அணி பாகிஸ்தானில் விளையாட தயாராகியுள்ளது.

எதிர்வரும் 28ம் திகதி இரண்டு ஒருநாள் மற்றும் இரண்டு டி20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

## சர்ச்சையிலீடுபட்ட வீரருக்கு வாழ்நாள் தடை விதிப்பு

பேர்முடாவில் இடம்பெற்ற சம்பியன்களின் சம்பியன் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் ஏற்பட்ட மோதலில் சம்பந்தப்பட்ட வீரருக்கு, வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஜேஸன் அன்டர்சன் என்ற வீரருக்கே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. கிளெவ்லான்ட் பிராந்திய கிரிக்கெட் கழகத்துக்காக விளையாடிய அன்டர்சன், வில்லோ கட்ஸ் கிரிக்கெட் கழகத்தின் ஜோர்ஜ் ஓ பிரையனுடன் இடம்பெற்ற மோதலுக்குத் தூண்டிய குற்றச்சாட்டிலேயே, வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளார். ஓ பிரையனுக்கு "குறிப்பிட்ட காலத் தடையை விதிக்கும் பொருட்டு, 6 50 ஓவர்கள் கொண்ட போட்டிகளில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது" என அந்நாட்டுக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பேர்முடா அணி சார்பாக 14 தடவைகள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ள அன்டர்சன், விக்கெட் காப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, துடுப்பாட்ட வீரரான ஓ பிரையனுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். போட்டி முடிவின் பின் [illegible] காணொளி ஆதாரங்கள், போட்டி மத்தியஸ்தர்களின் அறிக்கைகள் ஆகியவற்றைக் கொண்டே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுங்கட்சியில் இருந்தாலே மக்களுக்குச் சேவையாற்றலாம்

## கிழக்கு மாகாண சபையில் கட்சித்தாவல்



அமீர் புஸ்பகுமார

**கி**ழக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் இருவர் மக்களுக்குச் சேவையாற்றுவதற்காகக் கட்சி மாறியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட உறுப்பினர்களான இவ்விருவரும் கடந்த 22ம் திகதி நடைபெற்ற அமர்வுகளின் போதே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏ.எம்.எல். அமீர் மற்றும் கே. புஸ்பகுமார ஆகிய இருவருமே இவ்வாறு கட்சி தாவியுள்ளனர். எதிர்க்கட்சியில் இருப்பதை விட ஆளுங்கட்சி மூலமாக மக்களுக்குச் சேவையாற்றவே தாங்கள் கட்சிதாவியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாகாண சபை அமர்வுகளுக்குத் தலைமை தாங்கிய தவிசாளர் சந்திரதாச கலப்பத்தி, ஆளுங்கட்சி வரிசையில் குறித்த மாகாண சபை இருவருக்கும் தற்காலிக 17

## சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் உலமா கட்சித் தலைவர்

## "மூத்த தமிழ் அரசியல்வாதிகள் மக்களைக் குழப்புகின்றனர்"

### மாகாண சபை உறுப்பினர் ஜனா



**மூ**த்த தமிழ் அரசியல்- வாதிகள் சிலர் மக்களைக் குழப்பபும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இக்கருத்துக்களைத் தெரிவித்து - உள்ளார்.

ஜ.நா. வினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் 17 இலங்கையில்.....

## மாகாண சபைக்குள் வாகன விபத்து

நிக்கி...

**க**டந்த 23.09.2015 மதியம் 11.30 மணியளவில் கிழக்கு மாகாணசபை கட்டடத்தொகுதியினுள் மிகிழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கிழக்கு மாகாணசபையின் நுழைவாயிலுக்கு அருகாமையில் காணப்படுகின்ற கொங்கரீட் கல்லில் மோதியதில் மகிழுந்தின் முற்பகுதி முற்றாக சேதமடைத்துள்ளது.

மாகாணசபையினுள் அமைக்கப்பட்டிருக்கின்ற இதுபோன்ற கற்களை அகற்றுவதன்மூலமாக இவ்வாறான விபத்துக்களை தவிர்த்துக்கொள்ள



அதிகாரங்களைப் பகிரும் போது உள்ள ஆபத்து அந்த அதிகாரங்களை அடுத்துவரும் அரசாங்கம் விரும்பினால் மீளப் பெற்றுக்கொள்ளலாம். அதனால் அதிகாரப் பகிர்வு தமிழர்களின் நிரந்தரத் தீர்வாகாது

"தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்"

## பெண்களின் ஆடைகளாலேயே வன்புணர்வுகள்

## பெண்கள் அமைப்புக்கள் அமைதி

**பா**லியல் வன்புணர்வுகள் அதிகரிப்புக்கு பிரதான காரணம் நமது நாட்டு பெண்களின் ஆடையும், பாலியல் சம்பந்தமான ஊடகங்களுமே ஆகும் என உலமா கட்சித் தலைவர் கலாநிதி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

பாலியல் வன்புணர்வுகளுக்கு பெண்களின் ஆடையே முக்கிய காரணமாக இருக்கிறது. அது மட்டுமல்ல பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் வரும் பெண்களின் புகைப்படங்கள், ஆபாச படங்கள் என்பன வாலிபர்களின் உணர்வை தூண்டக்கூடியதாக இருக்கின்றன என்றார்.

மேலும்,சவூதியில் வெறுமனே பாலியல் வல்லுறவுக்கு மரண தண்டனை கொடுப்பதில்லை, மாறாக பாலியலை தூண்டும் அனைத்து வழிவகைகளையும் அங்கு தடை செய்துள்ளார்கள். அங்கு பகிரங்க சினிமா இல்லை. அரை நிர்வாண பெண்களின் புகைப்படங்களை பத்திரிகைகளில் பிரசுரிக்க முடியாது.

நமது நாட்டில் பாலியல் உந்துதலுக்குரிய அனைத்து பாதைகளையும் திறந்து விட்டு வன்புணர்வுகள் அதிகரித்து விட்டதே என கூறுகின்றோம். ஆகவே, பெண்களின் மோசமான ஆடைகளை கட்டுப்படுத்தும் வகையில் முதலில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். அதே போல் பாலியலை தூண்டும் அனைத்து விடயங்களையும் தடுத்து விட்டு அதன் பின்னர் மரண தண்டனை நிறைவேற்றும் சட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்

### சிறு விளம்பரங்கள்

**காணி குத்தகைக்குத் தேவை**

**அ**னுராதபுரச் சந்தியில் இருந்து அலஸ்தோட்டத்தை அண்டிய பகுதிகளில் வீதி ஓரமாக அரைஏக்கர் (80 பேர்ச்) காணித்துண்டு குத்தகைக்குத் தேவை- தொடர்பு 0776 912 278 - 0778 111 720

**சுத்திகரிப்புத் தொழிலாளர் தேவை**

**தி**ருகோணமலையில் அமைந்துள்ள வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு சுத்திகரிப்புத் தொழிலுக்குத் தகுதி வாய்ந்த ஆண்கள் தேவை தொடர்பு 0776 912 278 - 0778 111 720

### பிரேரணைகளை நிறைவேற்றப் பின்நிற்கும்

## கிழக்கு மாகாண அதிகாரிகள்



**கி**ழக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவதில்லையென மாகாணசபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு இன்று(22) கூடிய போது அவரால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரனை குறித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று முறையான இடமாற்றக்கொள்கை ஒன்றினை கிழக்கு மாகாண சபை முன்னெடுக்காமையானது பாரிய குறைபாடாகக் காணப்படுகின்றது. முறையான இடமாற்றக் கொள்கையின் பொருட்டு நிபுணத்துவம் வாய்ந்த குழுவொன்றினை கிழக்கு மாகாண சபை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இடமாற்றமானது அந்த உத்தியோகஸ்தரின் நலனுக்கா அல்லது மக்களின் நலனுக்கா என்று பார்க்கப் படுவதில்லை. அதிகா -ரிகளின் நலனை விட மக்களின் நலனே பிரதானமானதாக கருதப்படல் வேண்டும். இன்று சுகாதாரத் துறை சார்ந்த அம்பியூலன்ஸ் வண்டி சாரதிகள் வேறு துறைகளுக்கு இடமாற்றப்பட்டு வருகின்றனர். இதனால் அவர்கள் அவசர சேவையின் பொருட்டு பெறப்பட்ட அனுபவங்களும் சேவைகளும் மழுங்கடிக்கப்பட்டு அவை வேறு துறைகளுக்கு பயனற்று செல்லும் அவலம் காணப்படுகின்றது.

இவ்வாறு திண்மக்கழிவு தொழில்நுட்ப அதிகாரிகள் மக்களின் வரிப்பணத்தில் வெளிநாடுகளில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றபின்னர் வேறு துறைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவது பாரிய இழப்பாகும்" என்றார்.

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்
ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS
தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.

159A, கடல் முக வீதி. திருகோணமலை. 0777 555 738

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 26.09.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.